Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 06 | 02 - 08 - ஏப்பிரல் - 2004

# முடிவுகளுக்காக அல்ல எங்கள் உரிமைகளுக்காக...



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 02 . 04 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# அபிலாசையின் குரல்

இலங்கையின் பதின்மூன்றாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இதுவரை காலமும், இலங்கை சுதந்திரமடைந்ததாகக்கூறப்பட்ட 1947 முதல் இடம்பெற்ற எல்லாத் தேர்தல்களிலும், ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை முற்றிலும் மாறுபாடானது-வேறுபட்டது இன்றைய தேர்தல்.

1947 இல் இலங்கையை விட்டு பிரித்தானியா வெளியேறியது முதல் தீவில் வாழ்ந்து வந்த ஈழத்தமிழ் தேசிய இனம், தீவின் பெரும்பான்மை சிங்கள இனத்தின் மேலாதிக்க அரசியலினால் ஆளப்படுபவர்களான அரசியல் நிலமை தோற்றம் பெற்றது. அன்று முதல் தொடர்ச்சியாக வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக பறித்ததுடன் தீவின் தமிழ் மக்களில் இருப்பையும் அவர்களின் வசிப்பையும் கேள்விக்குறியாக்கினர்.

மூன்று தசாப்த காலமாக அகிம்சை முறையில் போராடி தமது உரிமைகளை வென்றெடுத்துவிட நடந்த எல்லாமுயற்சிகளும் சிங்கள பேரினவாதிகளினால் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே எழுபதுகளின் ஆரம்பங்களில் ஈழத்தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான அகிம்சைப் போராட்டங்கள் எல்லாம் தோல்வியைத் தழுவிய நிலையில், ஆயுத ரீதியான ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் தோற்றம் கண்டது.

இந்நிலையிலேயே 1977 ஜூலையில் இடம்பெற்ற தேர்தலில், ஈழத்தமிழினம், தமிழ் மக்களின் தனித்தமிழ் ஈழக்கோரிக்கைக்கான தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்து வாக்களித்திருந்தது. அதன் மூலம் தனது கோரிக்கைக்கான மக்கள் ஆணையை அது வழங்கியிருந்தது.

இதுவே, கடந்த இரண்டு தசாப்தங்களாக ஈழத்தமிழினம் தனது உரிமைகோரி நடாத்திவரும் விடுதலைப்போரில் தார்மீக சக்தியாகி நின்றது.

இந்நிலையில்,

இன்று நடைபெறுகின்ற தேர்தல் ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானது. இதுவரை நிகழ்ந்த எல்லாத்தேர்தல்களிலும் -1977 இல் தேர்தலிலும்- வேறுபாடானது.

ஈழத்தமிழன் இதுவரை அடைந்திருந்த எல்லா அரசியல் நிலைகளிலும் இன்றைய நிலையும் வேறுபாடானது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஈழத்தமிழினத்தின் விடுதலைப்போரை முன்நகர்த்திச் சென்ற விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழினத்தின் இராணுவப் பலத்தை-எப்போதுமில்லாதவாறு- சிங்களத்தின் இராணுவ வலுவுடன் உயர்த்திவிட்ட நிலையில், உயர்ச்சி கொண்ட ஈழத்தமிழினத்தின் வலுநிலை, இராணுவ பலத்தில் மாத்திரமன்றி அரசியல்ப் பலத்திலும் உயர்ச்சிகண்டு நிற்கின்றது. தமிழினம் இதுவரை தான் அடைந்துவிட்ட மாபெரும் இராணுவ வெற்றிகளினால், தீவில் மாத்திரமன்றி சர்வதேசத்திலும் தனது அரசியல் தளத்தை விரித்து பரப்பி நிற்கின்றது.

இந்நிலையில், ஈழத்தமிழினத்தின் மீது இன்னுமொரு தேர்தல் வந்திருக்கின்றது.

தாயகம்-தேசியம் -சுயநிர்ணயம் என்ற முப்பெரும் இலக்கில் போராடிவரும் ஈழத்தமிழினம் தமது அரசியல் அபிலாசைக்கான நியாயப்பாட்டை மீண்டுமொரு முறை சனநாயக ரீதியில் இன்றைய தேர்தலில் நிரூபிக்கும்.

இதுவே, இதுவரையான தமிழ்மக்களின் விடுதலை நோக்கிய போராட்டத்திற்கான உண்மையான தார்மீக பலமாக அமையும்.

தமிழரின் வாக்களிப்பை உன்னிப்பாக அவதானித்து வரும் சர்வதேசத்திற்கும், சிங்களத்திற்கும் முன்னால் தமிழ் மக்கள் வழங்கும் மாபெரும் ஆணை, அவர்களின் ஏகோபித்த அபிலாசையின் குரலாக அமையும்.

# பொங்குதமிழை உறுதிப்படுத்தும் தேர்தல் களத்தில் தமிழ்மக்கள்

இன்றைக்கு 48 ஆண்டுகளுக்கு முன் இதே ஏப்ரல் 2ல் தேர்தல் ஒன்று நடைபெற்றது. சிங்களம் மட்டுமே சிறிலங்காவின் அரச கரும மொழி ஆக்கப்படும் எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் கீழ் பண்டாரநாயக்கா போட்டியிட்டு இலங்கையில் இரத்தம் சிந்தும் அரசியலைத் தொடங்கிவைத்தார்.

சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சனநாயக வழியிலான போராட்டம் நடத்திய தமிழ் மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாக்கப்பட்டனர். இனவன்முறைகளால் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களுக்கு எதிரான அழிவுகள் தொடர்ந்தது. இன்றுவரை அது தொடர்கின்றது.

1956ம் ஆண்டு சத்தியாக்கிரகம் இருந்த அரசியல் தலைவர்கள் காடையர்களின் வன்முறையினால் ஏற்பட்ட காயத்துடனும், கட்டுக்களுடன் நாடாளுமன்றம் சென்றவர்களை அன்றய பிரதமர் பண்டாரநாயக்கா கௌரவமான வீரத்தழும்புகளுடன் (Honourable Wounds of war) நாடாளுமன்றம் வந்திருப்பதாக கேலி செய்தார் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியினால் இன்று அவருடையமகள் சந்திரிக்காவும் கௌரவமான வீரத் தழும்புடன் வாழும் நிலைதோன்றியுள்ளது மட்டுமல்ல மக்களின் முகங்களை நேரடியாகப் பார்க்கமுடியாது செய்மதியூடாக(sattelite) தொடர்பு கொள்ளும் நிலையும் எழுந்துள்ளது.

56ல் தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வந்ததன் மூலம் இன்று இலங்கையில் இரண்டு இராணுவக்கட்டமைப்பை பேணுகின்ற நிலையையும் தோற்றிவித்தவர்கள் சிங்களப் பேரினவாதிகளே. இன்று தமது இராணுவத்தை சிங்கள மயப்படுத்திவைத்திருக்கின்றார்கள். சிங்களம் மட்டும் சித்தியடைந்தவர்களே இராணுவ அதிகாரிகளாக இணைந்துகொள்ள முடியும் எனக்கூறும் விளம்பரங்கள் வெளிப்படுகின்றன. தமிழ்மக்களுக்கு எவ்வித அரசியல் பிரச்சினைகளும் இல்லை எனக் கூறும் இவர்கள் தமிழ்மக்களின் இராணுவக் கட்டமைப்பு, அதன்மீது ஏற்படுத்தப்பட்ட ஸ்திரமான அரசியல் தலைமையை இன்று சர்வதேசத்தின் கண்களில் பயங்கரவாதிகளாக சித்தரித்தது மட்டுமல்ல தமிழ் மக்களின் ஆதரவு இவர்களுக்கு இல்லையெனவும் பொய்யான பரபரப்பை நிகழ்த்திவருகின்றது. இதற்கு கோடரி காம்பு தமிழர்கள் உபயோகப்படுத்தப் படுகின்றனர்.

இப்போது தமிழ்மக்கள் இந்த பொய்யான பரபரப்பை உடைத்தெறியும் ஆயுதமாக மட்டுமல்ல, தமிழர் தேசியத்தின் இருப்பையும் தமிழர் தாயக கோட்பாட்டையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் நிறுவும் ஊடகமாகவும் இன்றைய தேர்தலைப் பயன்படுத்துகின்றார்கள் எல்லைப்படை, கிராமியப்படை வீரர்களாய் புலிகளோடு இணைந்து நின்ற தமிழ் மக்கள், இராணுவ நெருக்குதல்களுக்குள் பயந்து, அவமானப்பட்டு வாழ்ந்த மக்கள் தமிழர் சேனையின் வெற்றிகளால் எழுச்சிகளால் உந்தப்பட்டு வீதிகளில் இறங்கி தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களைத் தாங்கி "எங்கள் தலைவன் பிரபாகரனே'' என பொங்கு தமிழாய் எழுச்சி கொண்டதையும் பொய் எனப் பேசிப் புறமொதுக்கிய பேரினவாதிகளுக்கும், உலகத்துக்கும் சட்டரீதியான ஒரு தேர்தல் மூலமும் தமிழ் மக்கள் பதில் சொல்கின்றார்கள் என்பதே இன்றய யதார்த்தமாகும்.

சிங்களத்தைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல், பொருளாதார மேன்பாடு, சமாதானம், அரசியலமைப்பு மாற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட போகின்ற ஒன்றாக அமைகிறது. பொருண்மியத்தை பொறுத்தவரை ஸ்த்திரமான பொருளாதார மாற்றம் அடித்தட்டு மக்களால் உணரப்படவில்லை என்பதே இந்தத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக விளங்கப் போகிறது.


அதிகரித்துச்செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் கட்டற்ற விலையேற்றம் எமது மக்களிடையே பொருளாதார விரக்தியை நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்ல வைக்கிறது என்கிறார் அனுராதபுரத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர்.

குடித்தொகையின் 80 மாணவர்களின் வாழ்வாதாரமாக விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேபோன்று சமாதானம் தொடரப்படவேண்டும் என்பதில் எவ்வாறான கருத்துக்களை சிங்கள மக்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இந்தத் தேர்தல் மூலம் வெளிவரும் செய்திகளில் ஒன்றாக அமையப்போகிறது.

"இப்போது இரவுகளில் என்னால் கண்ணீரும் பெருமூச்சுக்களும் இன்றி அமைதியாகத் தூங்க முடிகிறது. படையில் உள்ள எனது பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பது எனக்கு ஆறுதலைத் தருகிறது. என்கிறார் ஒரு தாய். இந்தச் சமாதானம் புலிகளைப்பலப்படுத்தியுள்ளது எனக் கூறும் சிங்களப்பேரினவாத சிந்தனையுள்ள சிங்கள மக்களும் இருக்கின்றார்கள்.

புலிகள் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வை தன்னாட்சி அதிகாரசபையின் வரைபை சமர்ப்பித்துள்ளார்கள். தமிழ் மக்களின் அகச் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்று கொண்டு சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை ஏற்படுத்தும் அரசியலமைப்பு மாற்றத்தை சிங்கள மக்கள் அனுமதிப்பர்களா என் கேள்வியும் இந்தத் தேர்தல் முன் உள்ளது பேரினவாதத்தின் வளர்ச்சியோடு இணைந்து சென்ற 1972, 1978 அரசியல் அமைப்பு மாற்றங்கள் கொழுந்து விட்டெரியும் தீப்பிழம்புகளாக தமிழ் மக்களின் வாழ்வை சுட்டெரித்தமையினாலேயே தமிழ்மக்கள் தமக்கொரு தனித்துவமான தேசியக்கொடியையும், சுயாதீனமான ஒரு அரசியல் திட்ட வரைபையும், ஏற்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

அன்ரன் அன்பழகன்



# தேர்தல் முடிவுகள் சமாதானத்தைக் கொண்டு வருமா?




நிலாந்தன்

இன்று தேர்தல்

தமிழர்கள் ஒப்பீட்டளவில் உற்சாகமாகவும் பற்றுறுதியோடும் பங்குபற்றும் ஒரு தேர்தல் இது.

இதற்கு முன்பு கடந்த சுமார் இரு தசாப்தகாலத்துள் நிகழ்ந்த எல்லாத்தேர்தல்களின்போதும் தமிழர்கள் இத்துணை உற்சாகத்தோடு இந்தளவுக்கு நிறுவனமயப் படுத்தப்பட்டு வாக்களிக்கச் சென்றதில்லை.

இப்படிப் பார்த்தால், இலங்கைத்தீவின் சனநாயக அரசியல் நீரோட்டத்துள் தமிழர்களைப் பங்குபற்ற வைத்தமைக்காக நிலவும் யுத்த நிறுத்தத்துக்கே சம்பந்தப் பட்டவர்கள் நன்றி சொல்ல வேண்டும்.

ஈழப்போர் தீவிரமடையத் தொடங்கிய பின் நிகழ்ந்த அநேகமான எல்லாத் தேர்தல்களின் போதும் தமிழ்மக்களின் பங்களிப்பு ஒருவித பற்றற்ற நிலையிலேயே காணப்பட்டது. தேர்தல் வந்து தமது தலைவிதியை மாற்றிவிடப்போவதில்லை என்ற ஒரு வித விரக்தியும் சலிப்பும் அப்பொழுதெல்லாம் நிலவியது. அதாவ்து இலங்கைத் தீவின் சனநாயக நீரோட்டத்திலிருந்து தமிழர்கள் அதிகபட்சம் அந்நியப்பட்டு நிற்கும் ஒரு போக்கே கடந்த இரு தசாப்தங்களாக நிலவி வந்தது.

ஆனால் இன்று தமிழர்கள் மறுபடியும் ஒரு தடவை சனநாயக வழிமுறைகளில் தமக்கிருக்கும் நம்பிக்கையை நிரூபிக்க முன்வந்திருக்கிறார்கள்.

அதாவது ஒரு தேர்தல் மூலம் தமது விருப்பத்தை - மக்கள் ஆணையை - வெளிக்காட்ட முன்வந்திருக்கிறார்கள்.

இப்பொழுது யுத்த நிறுத்தம்தான் என்றாலும் தமிழர்களின் வாழ்க்கை இன்னமும் யுத்தத்தின் நீட்சியாகவே காணப்படுகிறது. சூழ்ந்தகாவலரண்களையும் சோதனைச் சாவடிகளையும் தாண்டியே வாக்காளர்கள் போய்வரவேண்டியிருக்கிறது.

இந்நிலையில் இத்தேர்தலில் இருக்கக்கூடிய சனநாயகத்துக்கு ஒவ்வாத அம்சம் எதையும் கடந்த முப்பது ஆண்டுகால யுத்தச் சூழலின் பின்னணியில் வைத்தே புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த சுமார் இரு தசாப்த காலமாக யுத்தத்தின் மொழியிலேயே பேசி வந்த ஒரு மக்கள்திரள் யுத்தமல்லாத ஒரு மொழியில் பேச முன்வந்திருக்கிறது.

இதில் கொழும்புக்கும், முழு உலகுக்கும் ஒரு திட்டவட்டமான மிகக்கூரான செய்தியிருக்கிறது.

அதாவது, ஏற்கெனவே சனநாயக வழிமுறைகளில் நம்பிக்கையிழந்து ஆயுதமேந்திய ஒரு மக்கள் திரள் மறுபடியும் உலகத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க முன் வந்திருக்கிறது.

அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு தேர்தல் என்பதை விடவும் அவர்களுடைய போராட்டத்தின் ஒரு புதியகட்டம் என்பதே சரி. இதன்மூலம் தமது போராட்டத்தின் நியாயத்தை நிரூபிக்கும் ஒரு மக்கள் ஆணையை வழங்க அவர்கள் முடிவெடுத்திருப்பது தெரிகிறது.

இதன் அர்த்தம் தமிழர்களின் விடுதலைப்போராட்டம் வெடிமருந்தோடு சனநாயக நீரோட்டத்துள் கரையத்தொடங்கிவிட்டது என்பதல்ல. அல்லது கடந்த இரண்டாண்டு கால யுத்தநிறுத்தத்துள் தமிழரின் போர்முனைப்பு மழுங்கத் தொடங்கி விட்டது என்பதுமல்ல.

மாறாக, எதிர்காலத்தில் சனநாயக நீரோட்டத்துள் இணைவ்தா இல்லையா என்று தமிழர்கள் முடிவெடுக்க உதவப்போகும் நீண்ட அல்லது குறுகிய ஒரு பயணத்தின் தொடக்கமே இது.

இத்தேர்தல் மூலம் தமிழர்கள் வழங்கப்போகும் ஆணையை கொழும்பு மையக்கட்சிகள் மதித்து நடப்பதில்தான் தமிழர்கள் தொடர்ந்தும் சனநாயக நீரோட்டத்துள் இணைவதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும்.

தமிழர்களின் ஆணையை மதிப்பது என்பது நாட்டில் நீதியான நிரந்தரமான ஒரு சமாதானத்தை உருவாக்குவதுதான் அதாவது தமிழர்களுடன் இச்சிறு தீவைப் பகிரத்தயாராக இருப்பதுதான்.

கிடைக்கும் தகவல்களை வைத்துப்பார்த்தால் தென்னிலங்கையில் எந்த ஒரு கட்சியிடமும் சமாதானத்தைக் குறித்த தெளிவான திட்டவட்டமான ஒரு தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ரணில்விக்கிரமசிங்கவைத் தமது நண்பர் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த இரு ஆண்டுகால யுத்தநிறுத்தத்தால் உருவாகிய ஒரு படிமம் இது.

ஆனால் ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத்தைப் பற்றிய தெளிவான சித்திரம் எதுவுமில்லை என்ற பயங்கரமான ஒரு யதார்த்தத்தை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

பொதுவாக, தேர்தல் விஞ்ஞாபனங்கள் சாதாரண சனங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை அவை அரசியல்வாதிகளாலும் அரசறிவியல் துறைசார் நிபுணர்களாலும் ராஜதந்திரிகளாலும் விழிப்பு நிலை வாசகர்களாலும் தான் நுணுகி வாசிக்கப்படுகின்றன. சாதாரண சனங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கு வாக்குப்போடுவதில்லை.

ஆனால் தேர்தல் விஞ்ஞாபனங்களை உற்றுவாசிக்கும் எவரும் குறிப்பிட்ட கட்சியின் உள்நோக்கங்களை ஓரளவுக்கேனும் அடையாளம் காணமுடியும்.

ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசியமுன்னணி (U.N.P) இன் தேர்தல் விஞ்ஞாபனம் சமாதானத்தின் பேரால் வாக்குகளைக் கேட்கிறது. ஆனால் சமாதானத்தை அடையும் வழிமுறைகளைக் குறித்து அதில் தெளிவான வரைபடம் ஏதும் கிடையாது.

ரணில் விக்கிரமசிங்க தனது பேச்சுகளின்போதும் பேட்டிகளின் போதும் ஒஸ்லோ பிரகடனம் மற்றும் ரோக்கியோ பிரகடனம் என்பவற்றின் பின்னால் மறைந்துகொள்ளப் பார்க்கிறார். சமஷ்ரி என்ற சொல்லை அவர் தந்திரபூர்வமாகத் தவிர்த்து வருகிறார்.

அதாவது அவர் அவருடைய முன்னைய சர்வதேச பாதுகாப்பு வலையை இன்னமும் கைவிடவில்லை: இனியும் கைவிடமாட்டார் என்றே அர்த்தம்.

அதேசமயம் அவருடைய வெற்றிகளைப் பாதுகாக்க அல்லது உறுதிப்படுத்த அல்லது அவரைத் தோல்வியிலிருந்து தப்பவைக்க தமிழ்த் தேசியக் கூட்டணியிடம் அவர் தங்கியிருக்கவேண்டிவரும் என்று பரவலாக எதிர்பார்க்கப் படுகிறது.

இத்தகைய ஒரு எதிர்பார்ப்பின் பின்னணியிலும் கூட அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் 'சமாதானத்துக்கான ஒரு மங்கலான வரைபடத்தையே தரமுயல்கிறது.

மறுபக்கத்தில் சந்திரிகா தலைமையிலான கூட்டு முன்னணியும் சமாதானத்தைத்தான் வாக்களித்திருக்கிறது. ஆனால் அவர்களுடைய முதலாவது தேர்தல் விஞ்ஞாபனத்தை விடவும் இரண்டாவதில், ஜே.வி.பி.யின் செல்வாக்கு அதிகரித்திருப்பது சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

சமாதானத்தைக் குறித்த அவர்களுடைய வரைபடம் மிகவும் கலங்கலானதும் முன்பின் முரணானதும் அகமுரண்பாடுகளை உடையதுமாகக் காணப்படுகிறது.

இதை விளக்க ஒரு தேர்தல் விளம்பரத்தை எடுத்துக்காட்டலாம். அது கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரகேசரியில் வெளிவந்திருந்தது. கொழும்பு மாவட்டத்துக்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் ஒரே தமிழ் வேட்பாளரான நோபல் வேதநாயகத்தின் விளம்பரம் அது.

கொழும்புத்தமிழரான இவர் சந்திரிகா வெற்றிபெற்றால் அதன்பின் நிகழவிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அரசதரப்புப் பிரதிநிதியாக தானும் கலந்துகொள்ளப்போவதாக வாக்குறுதியளித்து வருகிறார். இவருடைய மேற்படி விளம்பரத்தில் சனாதிபதி சந்திரிகாவின் கூற்று ஒன்று மேற்கோள் குறிக்குள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு... "எக்கட்சி ஆட்சி அமைத்தாலும் பாதுகாப்பு அமைச்சு என்னிடமே"

மக்கள் ஆணையைப் பெறவே தேர்தல் நடக்கிறது. இந்நிலையில் மக்கள் ஆணை எதுவாயிருந்தாலும் தானே பாதுகாப்பு அமைச்சர் என்று சந்திரிகா கூறுகிறார். அதை அவருடைய கொழும்புக்கான ஒரே தமிழ்வேட்பாளர் விளம்பரம் செய்தும் வருகிறார்.

ஆயின் ரணில் வெற்றி பெற்றாலும்கூட சந்திரிகா தன்பிடியைத் தளர்த்த மாட்டார் என்றா அர்த்தம்?

சில விமர்சகர்கள் கூறுகிறார்கள் ரணிலின் வெற்றி அமோகமானதாகவும் திட்டவட்டமானதாகவும் இருக்குமானால் சனாதிபதி சந்திரிகா, ரணிலின் அரசாங்கத்தில் தலையிடுவதற்கான தார்மீக அடிப்படையை தார்மீக பலத்தை இழந்து விடுவார் என்று.

மேலும், இலங்கைத்தீவு எப்பொழுதும் சுமுகமாக ஆட்சி கைமாற்றப்படும் ஒரு அரசியல் நாகரீகத்தைப் பேணிவரும் ஒரு நாடு என்ற ஒரு பெயர் இருப்பதால் சந்திரிகா இது விசயத்தில் குறைந்த பட்ச அரசியல் நாகரீகத்தையாவது பேணவேண்டியிருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால், கடந்த இரண்டாண்டு காலமாக சந்திரிகா மிகக் குறைந்தபட்ச அரசியல் நாகரீகத்தையே பேணிவந்திருக்கிறார். இலங்கைத்தீவின் "சனநாயக மரபின்" படி அவரால் ஆகக்கூடியது இரண்டு ஆண்டுகள்தான் நாகரீகமாக நடந்து கொள்ளமுடிந்திருக்கிறது. இன்று நிகழும் தேர்தலே இலங்கைத்தீவின் அரசியல் நாகரீகத்துக்கும் அரசியல் அமைப்புக்கும் இடையிலான மோதலில் அரசியல் நாகரீகம் தோல்வியுற்றதின் இறுதி விளைவே.

எனவே சிலசமயம் ரணில் வென்றால் சந்திரிகா எவ்வளவு காலத்துக்கு நாகரீகமாக நடந்து கொள்வார்?

நோபல் வேதநாயகத்தின் தேர்தல் விளம்பரத்தின்படிஅப்படிப் பட்ட ஒரு அரசியல் நாகரீகம் பேணப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு என்றே எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆயின் சமாதானத்தின் கதி?

ரணில் வென்றால், அதுவும் அரும்பொட்டில் வென்றால், சனாதிபதி சந்திரிகா ஆகக்குறைந்தது ஒரு வருடத்துக்கும் மேல் அதிககாலம் நாகரீகமாக நடந்து கொள்ளமாட்டார் என்றே நம்பவேண்டியுள்ளது.

மாறாக சந்திரிகாவென்றால், ஒப்பீட்டளவில் ரணிலைவிட ஸ்திரமான ஒரு ஆட்சியை அவரால் கொடுக்கமுடியும் ஆனால் அதே நேரம் பூகோள பொருளாதார யதார்த்தம் ஒன்றுடன் மோதுவதா இல்லையா என்ற ஒரு முடிவை அவர் உடனடியாக எடுக்கவேண்டியிருக்கும் இதிலவர் எடுக்கப்போகும் முடிவே அவருடைய ஆட்சியின் ஸ்திரத் தன்மையின் அளவைத் தீர்மானிப்பதாயிருக்கும்.

இதில் அமெரிக்காவுக்குச் சார்பான ஒரு முடிவை அவர் எடுப்பாராயிருந்தால் சமாதானத்தைத் தவிர வேறு தெரிவேதும் அவருக்கிருக்காது. அவர் அப்படியொரு தெரிவைச் செய்து சமாதானத்துக்கு வருவாராயிருந்தால் சிலசமயம் ரணிலை விடவும் ஸ்திரமாக அவரால் சமாதானம் செய்யவும் முடியும்.

# நறுக்கென...

## மீண்டும் தப்பி ஓட முயலும் சோமவன்ச...



ஜே.வி.பியின புகழ்பெற்ற அந்த தலைமறைவுத் தலைவர் சோமவன்ச அமரசிங்க என்பவரைத் தெரியும் தானே...

அதுதான் சந்திரிகாவின் புதிய கூட்டணித் தோழரும் முன்னாள் செந்தோழருமான அந்தக் கண்ணாடி லாலாவைத்தான் கூறுகிறேன்.

கடந்த தேர்தலின் போது சந்திரிகாவின் மறைமுக அழைப்பின் பேரில் அவரது பாதுகாப்பு உத்தரவாதத்துடன் திடீரென தன் அஞ்ஞாதவாசத்திலிருந்து (லண்டனிலிருந்து) வெளிவந்து கொழும்பு வந்திறங்கி பரபரப்பை ஏற்படுத்தி புரட்சிகரமான புரட்டுக்களை அறிக்கைகளாக்கி, ஜே.வி.பி.க்காக சூறாவழி பிரச்சாரத்தை மேற்கொண்டபோதும், தேர்தல் நடைபெறுவதற்கு முதல்வாரங்களுக்கு முன்னரே மீண்டும் லண்டனுக்கு மாயமான சோமவன்சவின் வீரம் உலகறிந்ததே...

பொ.ஐ.முன்னணி தேர்தலில் தோல்வியுறும் ரணில் பிரதமரானால் தனது கதை கந்தலாகிவிடும், ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக்காலப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக தான் கைதாகி சிறையில் அடைக்கப்படலாம் என்ற காரணத்தினாலேயே அப்போது ஆள் சொல்லிக்கொள்ளாமை எப்படி வந்தாரோ. அதேபோல் சொல்லிக்கொள்ளாமலேயே லண்டனுக்குத் தாவினார்.

பல்வேறு குற்றச் செயல்களுக்காக பொலிசாரால் தேடப்பட்டு வந்த சோமவன்சவை தனது அரசியல் சுயநலன்களுக்காக அரசவிருந்தினராக அழைத்து, பொலிஸ்-இராணுவப்பாதுகாப்பை அவருக்கு வழங்கி கௌரவித்த வரலாற்று அரசாங்கத்தைத் தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி சந்திரிகா அவரை மீண்டும் காதும் காதும் வைத்தாற்போல் மீண்டும் நாட்டைவிட்டுத் தப்பியோடவும் உதவி சிறிலங்காவின் பாதுகாப்புத்துறைக்கு அவமானத்தை ஏற்படுத்தும் தேசத்துரோகத்தையும் செய்தார்.

இது நடந்து இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் அதேசோமவன்ச அதே கௌரவத்துடன் அழைத்து அம்மையார் தேர்தல் பிரச்சாரத்திற்கு இம்முறை பயன்படுத்தி வருகின்றமை தான் கேலிக்கூத்தாகும்.

சிலவேளைகளில் தானே நிறைவேற்று அதிகார சனாதிபதி போல் நினைத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக அறிக்கைகள் விடுவதும் கருத்துக்களை முன்வைப்பதும் இப்போது இந்தத் தேர்தல் சமயத்தில் பெருந்தலைவலியை அம்மணிக்கு ஏற்படுத்தியுள்ளதாம். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவதியுற்று வருகின்றாராம். இது சிங்கள பத்திரிகையொன்றில் வெளியான தகவல்.

இந்த முறையும் ஐ.தே.முன்னணி பதவிக்கு வரும் சாத்தியம் இருப்பதாக புலனாய்வு வட்டாரங்கள் அதிகார அம்மணிக்கு தெரிவித்துள்ளதையடுத்து மீண்டும் ரகசியமாகத் தப்பியோடும் யோசனையுடன் அதற்கான ஏற்பாடுகளை சோமவன்ச செய்துவருவதாக மற்றொரு ஆங்கிலப்பத்திரிகை தெரிவித்ததும் நிச்சயமாக உண்மையாகவே இருக்கும்.

ஏனெனில் சோமவன்சவை அவர் செய்த பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்ந்து அச்சுறுத்திக்கொண்டே இருக்கின்றது. இதுவே உண்மையாகும்.

நேர்மையான,கொள்கைப்பிடிப்புள்ள, தேசப்பற்றுள்ள ஒரு அரசியல்வாதியாக சோமவன்ச இருந்தால் தப்பியோடி தலைமறைவாகி வாழமாட்டாரல்லவா?

தலை தப்பினால் போதும் என நினைக்கும் தலைவரை கொண்ட ஜே.வி.பி.யின் ஏனைய தலைவர்களின் விறுத்தம் எப்படியிருக்கும் என்று சொல்லவேண்டியதில்லை.

சோமவன்சவை சந்திரிகா தனது கணவரைக்கொன்ற கட்சியின் தலைவர் என்ற வகையில் மீண்டும் கௌரவமாக அவர் தப்பித் தலைமறைவாக உதவுவார் என்பதிலும் சந்தேகமேயில்லை....

## கருணாவை அரவணைக்கும் ஈ.பி.டி.பி



கருணா என்ற அந்த தனிமனிதரின் சுயநலச் செயற்பாடுகளால் தமிழ்மக்கள் எந்தளவுக்கு வேதனை அடைந்துள்ளனர் என்று சொல்லவேண்டியதேயில்லை.

பிரதேசவாத உணர்வை வளர்ப்பதன்மூலம் தமிழ்த் தேசியத்தின் தனித்துவ வளர்ச்சியையும்,எழுச்சியையும் சிதைத்துவிடலாம் எனப் பகற்கனவு கண்ட பேரினவாதிகளினதும் அந்நிய மேலாதிக்க சக்திகளினதும் எடுபிடியாகி முட்டாள் தனமாக முடிவொன்றை எடுத்ததன்மூலம் தன்னைத்தானே அவமானத்திற்கும் அருவருப்புக்கும் மட்டுமல்ல ஆபத்திற்குமுள்ளாக்கிக்கொண்டுள்ள கருணா தன்னைத்தானே சுயமாக பாதுகாக்கும் பலமின்றி தனது ஒருகாலத்தை எதிரியான சந்திரிகாக் கூட்டணியோடு ஒப்பந்தம் செய்ய விருப்புத் தெரிவித்தமையானது அவரது பலவீனமான நிலைமையை பாதகமான நிலைமையை உலகிற்கு வெளிப்படுத்திவிட்டுள்ளதுடன், உலக நாடுகளும் அவருடனான தொடர்புகளை நிராகரித்தும் உள்ளமை குறிப்பிடித்தக்கது.

அரசுடன்... அதாவது சந்திரிகாவுடன்- ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டை தனியாகச் செய்யமுயன்றது தான் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டம்.

கருணா விவகாரம் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்திவிடும் என பல்லிளித்துப் பார்த்திருந்தவர்கள் அதனைப் புலிகள் புஷ்வாணமாக் கருதிப் புறந்தள்ளிவிட்டு தமது செயற்பாடுகளைத் தொடர்வதால் நொந்துபோயுள்ளனர். இப்போது கருணாவை மட்டக்களப்பு மக்களே நேரடியாக பகிரங்கமாக விமர்சிக்கும் அளவுக்கு நிலைமை மாறிவருகின்றது. இது கருணாவிற்குக் கிடைத்துள்ள பேரடியாகும்.

அவரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரே அவரைச் சுட முயன்றதாக வந்தசெய்தி அவருக்குப் பேரச்சத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே இருக்கும் என்பதை உணர்த்துகிறது. இந்த நிலையில் அவரை ஆதரிக்க ஈ.பி.டி.பி. மட்டுமே முன்வந்துள்ளது.

தமது முழு ஆதரவும் கருணாவுக்கு உண்டுஎன ஈ.பி.டி.பி.யினர் அறிவித்துள்ளனர். பிரபாகரன் மீதான வெறுப்பை கருணா வெளிப்படுத்துவதால் அவருக்குத் தாங்கள் பூரணமான ஆதரவை அளிக்கப்போகிறார்களாம்.

ஆக அவரால் தேசவிரோதிகள் என வர்ணிக்கப்பட்டவர்கள் அவரை அரவணைக்கப் போகிறார்களாம்.....?

ஆக கருணாவும் ஒரு ராசிக்குழுவாக மாற அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. கருணா பிரதேசவாதியாகத் தன்னை இனங்காட்ட முயன்று இறுதியில் தேசவிரோதியாகத் தன்னை வரலாற்றில் பதிவு செய்யப் போகின்றார் என்பதில் ஐயமில்லை.

ஈ.பி.டி.பி.யின் அரவணைப்பு... 'அரவ' அணைப்புத்தான்.

## நூட்டு+வீணை=வெற்றிலை...



மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றுமே பிரிக்கமுடியாத வடக்கு-கிழக்கு தனிஅலகு....

இதுவே டக்ளஸ் தேவானந்தவின் ஈ.பி.டி.பி.கட்சியின் அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை தொடரும் வெளிப்படையான பிரச்சாரத்திற்கான கொள்கைகள்.

ஆனால், மாநிலத்தில் சுயாட்சிவந்ததோ இல்லையோ, மத்தியில் பதவிக்காக பேரினவாத அரசுகளுடனும் தமிழர்கள் மீது யுத்தத்தை நடத்திய படைகளுடனும் கூட்டாட்சியை நடத்துவதில் அவர்கள் என்றுமே பின்னிற்பதில்லை.

அதுவும் அவர்களின் இலட்சியங்களில் ஒன்று.

வடக்கு-கிழக்கு இணைந்த தனி அலகு என்றும் அது பிரிக்கப்படமுடியாத ஒன்று என்றும் கூறிக்கொண்டாலும்.பிரதேசவாதம் பேசுவோருடனும் பேரின வாதிகளுடனும் அதாவது வடக்கு-கிழக்கு இணைப்பை முற்றாகவே நிராகரிக்கும் பேரினவாத சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்து கொள்வதில் அவர்களுக்கு இருக்கும் விருப்பார்வம் எல்லையற்றது.

முன்னர் பிரேமதாசா அரசுடனும்,பின்னர் சந்திரிகா அரசுடனும் ஒட்டுண்ணிகளாக ஒட்டிக்கொண்டு தமிழினத்தை அழிக்கத் துணைபோய் தம்மை வளப்படுத்திக்கொண்டதை வரலாறு பதிவுசெய்துகொண்டுள்ளது.

அதுமட்டுமல்ல தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க முயன்ற அந்நிய அயலக சக்திகளின் எடுபிடிகளாக செயற்படுவதில் அவர்களுக்கு தனி இடமுண்டு. இந்தியாவின் பிராந்திய அரசியல் நடவடிக்கைகளில் எமது தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைக்கூடதாரைவார்க்கத் தயங்காதவர்கள் ஈ.பி.டி.பி.யினர். ஆனாலும், இவர்கள் அதை மறுப்பார்கள்- நிராகரிப்பார்கள். எனினும் உரிமையை இவர்களால் புதைக்க முடியாது. இந்தத் தேர்தலில் இவர்களின் வரிசையில் இணைந்து கொண்டுள்ளவர்கள் இருவர். ஒருவர் சங்கரியார் மற்றவர் கருணா.

கருணா தற்போது முகவரி இழந்துவரும் சுயநலத் தனிமனிதன். காக்கைவன்னியன் படையின் கடைசிவாரிசு..

சங்கரியார் சங்கதி வேறுபட்டது, பிரபலமானது இந்தத் தேர்தலில் தனது சுயேட்சைத் தனத்தை வெளிப்படையாகவே... அதாவது துயிலுரித்து இனங்காட்டிவிட்டபோதிலும் தன்னை தந்தை செல்வா வழி வந்த தூய்மையான கறைபடியாத தலைவன் என சுயவிளம்பரம் செய்துவருகின்றார். சுயேட்சைகளுக்கு சுயவிளம்பரம் செய்வதைத் தவிர வேறு வழியே கிடையாதுதானே...

ஆனாலும், டக்ளசும் சங்கரியாரும் ..யார் என்பதை அவர்கள் மறைத்தாலும் அவர்களின் கூட்டத்தவர் மறைக்கவிரும்பவில்லை...

இந்தத் தேர்தலின் பின் டக்ளஸ் தேவானந்தாவும், ஆனந்தசங்கரியாரும்(வீணையையும், பூட்டையும்) தூக்கிப்போட்டுவிட்டு வெற்றிலையை ஏந்தியவாறு நாடாளுமன்றம் வருவார்கள் என ஜே.வி.பி.யின் விமல் வீரவன்ச பகிரங்கமாகவே கூறியுள்ளார். வெற்றிலைசி.ல.சு.கட்சி ஜே.வி.பி கூட்டணியின் தேர்தல் சின்னம் என்பதை நினைவில்கொண்டால் அனைத்தும் விளங்கும்.

அதாவது மாநில சுயாட்சி, வடக்கு-கிழக்கு இணைப்பு, அதிகாரப்பரவலாக்கல், அனைத்தையும் நிராகரிக்கும், ஜே.வி.பி.இணைந்துள்ள கூட்டணியுடன் டக்ளசும் சங்கரியாரும், இணையப்போகிறார்கள் என்பதையே வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பதவிப்பதராக இருக்கத் துணிந்தவர்களுக்கு மக்கள் என்ன? மண் என்ன? அடிமைப்புத்தி அழிவுக்கே வழிகாட்டும் அறிக! அறிக!

தமிழ் மக்களே... உணர்க...! உணர்க...!

## படைகளின் பாதுகாப்பைக் கோரும் பிக்குகள்



சிங்கள பௌத்த சாம்ராஜ்யத்தை சிறிலங்காவில் உருவாக்கப்போவதாகக் கூறிக்கொண்டு திருவோடும் கையுமாக ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் பிக்குகளுக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குமாறும் அக்கட்சியின் தலைவரான வணஎல்லாவல மெத்தானந்த தேரோ என்பவர் சனாதிபதி யிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

தமது கட்சியின் சார்பில் போட்டியிடும் பிக்குகளுக்கு பல டங்களிலும் தர்மஅடிகள் பலமாக விழுகின்றமையாலேயே அவர் ந்தக் கோரிக்கையை விடுத்துள்ளாராம்.

பேசாமல் தர்மோபதேசம் செய்துகொண்டு விகாரைக்குள் வணக்கத் துக்குரியவர்களாக இருக்காமல் அரசியலுபதேசம் செய்யப்புறப்பட்டு அடிவாங்கி அவமானப்பட வேண்டிய அவரது புத்தபிக்குகளுக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்த்து புத்த பகவானே அவமானத்தால் இறுகக் கண்களை மூடி ஆத்மாவினுள் புழுங்கிக்கொள்வார் என்கிறார் ஒரு நிஜமான பௌத்தசமயி...

இவர்கள் தேர்தலில் ஒரு இடமாவது பெறாவிட்டால் முழு பௌத்த பிக்குகளுக்கும் நிரந்தர தலைகுனிவை ஏற்படுத்தி விடுவார்கள் என்கிறார் மற்றொரு சிங்கள அன்பர்.

கடந்த தேர்தலில் வில்லும் அம்பும் ஏந்தி (சிஹல உறுமயவின் சின்னம் இதுதான்) வெட்டிவீழ்த்தி பௌத்த ராஜ்யம் அமைப்போம் என சூளுரைத்துப் புறப்பட்ட சிஹலஉறுமயக்காரரை சிங்கள பௌத்த மக்கள் எவ்வாறு தூக்கியெறிந்தார்கள் என்பது தெரிந்தும் ஹெல உறுமய பிக்குகள் தேர்தலில் இறங்க முன்வந்தமையானது, மொட்டைத் தலையில் குட்டு வாங்கும் விடயமாகத்தான் இருக்கப்போகிறது என தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இவர்கள் செலுத்தியபோதே யாரோ ஒருவர் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது.

இல்லாவிட்டால் மேலதிக பாதுகாப்பை பிக்குகளுக்கு வழங்குமாறு கேட்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்குமா? ஆரம்பத்தில் பௌத்த ராஜ்யம் அமைக்கப்போகிறோம் என பிரகடனம் செய்த ஹெலஉறுமயக்காரர் இப்போது தேசிய அரசு அமைக்கத் தாங்கள் தயார் என அறிக்கை விடுமளவிற்கு மூன்றாம் தர அரசியல் வாதிகளாகியுள்ளார்கள்.

முற்றும் துறந்தவர்கள் அரசியலில் பேரம்பேசத் தொடங்கிவிட்டார்கள்.

அதுசரி தேர்தலில் ஒரு இடம் கிடைப்பதே அபூர்வம் என்ற நிலையில் தேசிய அரசு அமைக்க உதவத் தயார் என அறிவிப்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்?

சந்திரிகா கூட்டணி வெற்றிலையைச்சின்னமாக்கியது போன்று ஹெலஉறுமவினர் அரசமிலையைச் சின்னமாக்கியிருந்தால் ஐந்நூறு வாக்குகள் மதத்தின் மீதுள்ள பக்தியின் பேரால் அதிகமாகக் கிடைத்திருக்கும்....

தவறவிட்டு விட்டார்கள்....!

அது கிடக்கட்டும் தேர்தலில் தோற்றால் மொட்டை அடிப்பதாக சிலர் சவால் விடுவார்கள்... ஆனால் இந்த ஹெலஉறுமய பிக்குகள் என்ன செய்வார்கள், முடிவளர்ப்பதாக சவால்விடுவார்களா?

அப்படிவிட்டால் பௌத்தம் பிழைத்துக்கொள்ளும்.

**செங்குட்டுவன்**



# முடிவுகளுக்காக அல்ல எங்கள் உரிமைகளுக்காக...

## சிறி. இந்திரகுமார்

எல்லாவிதமான கருத்துக்கணிப்பு மற்றும் அபிமான ஆதரவு திரட்டல், அசட்டுத்தனமான வாக்குறுதி என இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பிரச்சாரங்கள் தேர்தல் நடவடிக்கைகள் என எல்லாம் முற்றுப்பெற்று இன்று வாக்களிக்கும் நாளும் வந்துவிட்டது.

இன்னொருவகையில் இதனை கூறுவதானால் இலங்கை மக்கள் இன்று பிற்பகல் நான்கு மணிக்குப்பிறகு தேர்தல் கலகலப்பிலிருந்து விடுபட்டு தேர்தல் முடிவுகளுக்காக காத்திருக்கத்தொடங்கிவிடுவார்கள்.

ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் முடிவினை ஒரு தேர்தலின் பெறுபேற்று முடிவாக எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் எனக் கூறமுடியாது, அப்படி கூறவும் கூடாது.

பதிலாக தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்கான ஆணையை வழங்கிவிட்டு அதற்காகவே காத்திருக்கின்றார்கள் எனக் கூறுவதே பொருத்தப்பாடுடையதாகும்.

ஏனென்றால் இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்ற தேர்தல் நடவடிக்கைகளின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கான தனது ஆதரவினையும், தேர்தல் பிரச்சாரங்களையும் மேற்கொண்டிருந்தது.

இதனை தமிழர் தாயக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிக முனைப்பாக இருந்த அதேவேளை மக்களும் இதனை உணர்ந்து கொண்டதை புரிந்துகொள்ளக்கூடியதாக விருந்தது.

அந்த வகையில் இன்றைய தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு நாட்டின் பிரசைக்கு இருக்கும் வாக்களிக்கும் உரிமையை செய்யும் ஒரு கடமையாக மட்டும் கொண்டு, தனதுவாக்கை செலுத்துவது மட்டுமல்லாது தங்களின் தலைமுறைக்கான உரிமைப்பட்டயம் ஒன்றினை சர்வதேச சமூகத்திற்கும் சிறிலங்கா அரசிற்கும் முன்னிலையில் வழங்கப்போகும் ஒரு வரலாற்று நிகழ்வில் கலந்துகொள்ளப் போகின்றார்கள். தமிழ்மக்கள் வழங்கும் தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்திற்கான புள்ளடி என்பது இதுவரை காலமும் தாங்கள் சுமந்த துயரங்கள் துன்பங்கள் என்பவற்றினை தங்களின் காலத்திலேயே ஒரு முடிவுக்கு கொண்டுவர ஒரு மார்க்கத்திற்கான வழியை திறந்துவிடப்போகின்றார்கள்..

தமிழ் மக்கள் வீட்டுச்சின்னத்திற்கு வழங்குகின்ற புள்ளடி என்பது தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி என தமிழ் மக்களின் உரிமைக்கான உத்தரவாகவே நிச்சயம் இருக்கப்போகின்றது.

அத்தோடு பொதுவாக கொழும்பில் ஆட்சி அமைக்கப்போவது யார் என்பதைத் தெரிந்து கொள்ள நடாத்தப்படுகின்ற கருத்துக் கணிப்புக்களில் எல்லாம் ஐக்கியதேசிய முன்னணி ஆட்சி அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றது என்றும் இன்னுமொரு கணிப்பீடு, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்கக்கூடும் என்றும் எதிர்வு கூறல்களையும் கருத்துக்கணிப்பு முடிவுகளையும் மாறிமாறி கூறிவருகின்றனர்.

ஆனால் எந்த எதிர்வுகூறல்களையும் கருத்துக்கணிப்பு முடிவுகளையும் கூறும் எவரும் மாறாது கூறுவது எவர் ஆட்சி அமைப்பதாயினும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க முடியாததொரு நிலையே தோன்றலாம் எனக்கூறி வருவதே.

இதனை இன்று வாக்களிக்கச் செல்லும் ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்துகொள்வது அவசியம். ஏனென்றால் வரலாற்றின் ஒரு பிடி மானத்தை தமிழர் தம் கரங்களில் அமைக்கப்போகும் ஒரு காலகட்டத்தில் தற்போது நிற்கின்றனர்.

இந்த வரலாற்றுக் கட்டத்தில் தமிழர்களின் வாக்குப்பலம் சிந்தவோ, சிதறவோ கூடாது.

ஏனென்றால் இதுவரைகாலமும் களங்களிலும் தங்கள் தளங்களிலும் மாவீரர்களும், பொதுமக்களும் சிந்திய குருதிக்கு ஒரு அர்த்த பரிமாணத்தை அதன் பெறுமதியை தமிழர்கள் ஏன் வன்முறையை சுமந்தவர்கள் என்ற தெளிவை தமிழ் மக்கள் தங்களின் உரிமையை சனநாயக ரீதியாக உலகிற்கு உணர்த்தப் போகின்றார்கள்.

இன்னுமொருவகையில் தமிழ் மக்கள் இன்று சந்திக்கும் தேர்தல் அவர்களுக்கான ஒரு சனநாயகப்போர்.

இந்த சனநாயகப் போரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக்கோரி மக்களின்முன் நிற்கும் தமிழர் தலைமை போர்க்காலங்களில் தனித்து எவரது உதவிகளுமின்றி களங்களில் எப்படி வெற்றிகளை கண்டார்களோ, அவ்வாறே இந்த தேர்தல் களத்திலும் நிற்கின்றார்கள்.

பதிலாக தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு எதிராக நிறுத்தப்பட்டிருக்கும் ஏனைய கட்சிகளான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான ஈ.பி.டி.பி.யாக இருந்தாலும் சரிதான், ஆனந்தசங்கரியின் தலைமையிலான சுயேட்சைக்குழுவாக இருந்தாலும் சரிதான் தங்களின் பின்னணியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை தடுப்பதில் முனைப்பாக இருக்கும் சக்திகளின் உதவியோடு நிற்பதைப் புரிந்துகொள்ளலாம்.

தமிழ் மக்களின் அரசியல் விழிப்பும் அவர்களின் அரசியல் தெளிவும் இன்று தேர்தல் முடிவுகள் வெளிவரும்வரை கொழும்பு மைய அரசியல் சக்திகளை நிச்சயம் அச்சுறுத்திக் கொண்டே இருக்கப்போகிறது.

அத்தோடு தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் அந்த முடிவுகளே தமிழ் மக்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை சிங்கள அரசுக்கு அளிக்கப் போகின்றது.

ஏதாவது ஒரு கட்டத்தில் தமிழ் மக்களின் வாக்கு சிதைக்கப்படுமாயின் [illegible] அது தமிழ் மக்களின் உரிமை சிதைக்கப்படுகின்றது என்ற அர்த்தமாகவே இருக்கும்.

அல்லது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வாக்குகளின் எண்ணிக் கையில் பலவீனமாகக் காணப்படுமானால் அது தமிழர்கள் பலவீனமானவர்களாக மாறுகின்றார்கள் என்றே அர்த்தப்படும்.

ஆகவே இதனை தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்துகொண்டு தமது வாக்குளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிடும் வீட்டுச்சின்னத்திற்கு இடுதல் அவசியம்.

தமிழ் மக்கள் வழங்கும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க தமிழர்களின் பலம் பெறுகிறது என்பதாகவே அர்த்தப்படும்.

ஆகவே தமிழ் மக்கள் இந்த தேர்தலைத் தமது உரிமைகளுக்கான தேர்தலாகப் பயன்படுத்துதல் அவசியம்.

இந்த தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கப்போகும் பங்களிப்பானது தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு அளித்து வந்த தார்மீக ஆதரவுகளில் மிகவும் முக்கியத்து வமிக்க நிகழ்வாக வரலாற்றில் பதிவாகப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம்.

எனவே தமிழ் மக்களின் முன் இன்று ஒரு வரலாற்றுக்கடமையைத் தமிழர் தலைமை அளித்துள்ளது.

அது தமிழ் மக்களின் பண்நெடுங்காலமாக பாதுகாக்கப்பட்டுவரும் அரசியல் பட்டயத்தை மீண்டும் ஒரு முறை சர்வதேச சமூகத்தின் முன்னணிலையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே. இதனை இன்று வாக்களிக்கவுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்து தமிழர்களின் தேசிய அபிலாசையை வெளிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு வெளிப்படுத்தப்படும் முடிவு தமிழர்களின் உரிமைகளோடு சம்பந்தப்படும் தரப்புகள் எல்லோருக்கும் தீர்வுக்கான வழியையும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளின் வீரியத்தையும் நிச்சயம் வெளிப்படுத்தும்.

ஆகவே இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கச் செல்கின்றார்கள் என்பது தங்கள் உரிமைகளை உலகுக்கு உரக்கச் சொல்லப் போகிறார்கள் என்பதாகவே இருக்கும்.

## மதவடி மயிலர்



**செய்தி: புதிதாக அமைக்கவுள்ள அரசாங்கம் பிரபாகரனை அணுகியே ஆகவேண்டும் என்கிறார் சந்திரிகா.**

*மயிலர்: கடைசியில் அம்மையார் எது உண்மையோ அதனை வெளிப்படையாக சொல்லியே போட்டார் பாருங்கோ... உண்மை வெளியாக காலதாமதமானலும் அது வெளிவந்தே தீரும்.... சிறிலங்காவின் தலையெழுத்து யாரால் எழுதப்படவேண்டியுள்ளது என்பது இப்ப நல்லா விளங்குதுதானே.... அதுசரி அம்மணிக்கு இந்த ஆலோசனையை அவரின் அருமை ஆலோசகர்களான கதிர்காமரும், அனுராவும் சொல்லியிருக்கவே மாட்டார்கள். அவர்களுக்கு இந்தளவு அறிவிருந்தால் சிறிலங்கா எப்பவோ எங்கேயோ போயிருக்கும். நான் சொல்வது சரிதானே....*

**செய்தி: மேலும் 13 அமைச்சுக்களை சனாதிபதி ரத்துச்செய்வதாக அறிவிப்பு....**

*மயிலர்: அரசு வெறுத்துப்போய் வெகுகாலமாகிவிட்டது. அமைச்சுக்களை ரத்துசெய்து என்ன பிரயோசனம், அம்மணி செத்தபாம்பைத் திரும்பத்திரும்ப அடிக்கிறா அவ்வளவுதான்.*

**செய்தி: அரசாங்கத்தின் சொத்துக்களை இரு பிரதான கட்சிகளும் துஷ்பிரயோகம் செய்துள்ளன.**

*மயிலர்: நாடு நஷ்டப்பட்டா என்ன வீடு கஷ்டப்படக்கூடாது என்பதுதான் எல்லாக்கட்சிகளின்ரையும் ஒரே குறிக்கோள் பாருங்கோ.... அரசாங்கத்தின் சொத்துக்களை ஆட்சியில் இருப்போர் தங்கள் சொந்தச் சொத்தாகவே பாவிக்கும் பண்பு சிறிலங்காவின் ஆளும் கட்சிகளின் தனித்துவத் தன்மை பாருங்கோ...*

**செய்தி: தபால் முலம் வாக்களிக்க தமக்கு உரிமை மறுக்கப்பட்டதாக பொலிஸ் சாஜண்ட் முறைப்பாடு.**

*மயிலர்: எத்தனை அப்பாவி மக்களின் உரிமைகளை இவையள் தடுத்திருக்கினம். அந்த மக்கள் யாரிட்ட முறையிட முடியும். இப்ப இவருக்கே இந்தச்சோதனை இதைத்தான் சொல்லுறது பாருங்கோ, வேலி பயிரை மேய்வதென்றால் இந்த வேலியை என்னவோ மேய்வதை என்னவென்று சொல்லுறது.*

**செய்தி: பிரச்சாரத்திற்கு சென்ற ஈ.பி.டி.பியினர் பொதுமக்களால் விரட்டியடிப்பு.**

மயிலர்: சந்திரிகாவுக்கு வால்பிடிக்கும் இவையளை சனம் எத்தனை நாளுக்குத்தான் பார்த்துக்கொண்டிருக்கும். சனம் விரடிட்யடிப்பதை இவையள் சரியா புரிஞ்சு கொண்டா இவைக்கும் நல்லது இவைக்கும் இவைக்கு பின்னால இருக்கிறவைக்கும் நல்லது.

சுதந்திரமே, உன் பெயரில் எத்தனை கொடுமைகள் நடக்கின்றன! – மதாம் ரோலாந்து

நேர்நோக்கு

# இன்று வெளிப்படுத்துவோம்


1977 ஆம் ஆண்டுக்குப் பின் அதாவது சுமார் 27 வருடங்களாகின்றவேளையில் சமாதானச் சூழலில் இன்று ஒரு தேர்தல் நடைபெறுகின்றது. 1977 தேர்தலின போது சிங்கள மக்களதம்மை உணவுக்காக நீண்ட வரிசையில் நிற்கவைத்த சிறிமாவோ பண்டாரநாயக்காவை தண்டித்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை ஐந்தில் நான்கு பெரும்பானமையுடன் ஆட்சிபீடம் ஏற்றினார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தாம் இழந்துபோன இறைமையை மீட்டு தமிழீழத் தனியரசு ஒன்றை நிறுவுவதற்கான ஒருசர்வசன வாக்கெடுப்பாக இதனைப் பயன்படுத்தி அதிலே வெற்றிகண்டார்கள். இந்தத்தேர்தல் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி சிறிலங்கா நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரியகட்சியாகி எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெற்றுக்கொண்டது.

இதன்பின்னர் 17 வருடகாலம் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபுரிந்தது. இந்த ஆட்சியின் போது தான் தமிழ்மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஆயுதப்போராட்டமாகப் பரிணாமம் பெற்று தீவிரமடைந்தது குறிப்பாக 1983 ஆடியில் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட இன வன்முறை ஆயுதப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது. இதன் பின் இந்திய இராணுவத்துடனான போராட்டம் பின்னர் அதன் வெளியேற்றம் 1990 ஜூனில் 2ம் கட்ட ஈழப்போர் என இது மேலும் தீவிரம்பெற்றது. ஐ.தே,க.யின் தொடர்ச்சியான 17 வருடகால ஆட்சியின்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறை விகிதாசாரப் பிரதிநிதித்து வத்தேர்தல்முறை என்பவற்றைக் கொண்ட அரசியலமைப்பு உருவாக் கப்பட்டது மூன்று நிறைவேற்று அதி காரம் கொண்ட சனாதிபதிகள் இக் காலப்பகுதியில் ஆட்சிபுரிந்தார்கள். ஜே.வி.பி.யின் நடத்திய இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி கொடூரமாக ஒடுக்கப்பட்டது.

இந்நிலையில் அமைதியான சமாதான முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு ஆட்சியை விரும்பிய தென்பகுதி மக்கள் சந்திரிகா குமாரதுங்கவை 62 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை அளித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகப் பதவியிலமர்த்தினர். ஆனால் தான் பதவியேற்று பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாகவும் ஆறுமாத காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை நீக்குவதாகவும் வாக்குறுதி அளித்து ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அம்மையார் ஏழுவருடகாலம் கொடூரமான யுத்தமொன்றின் மூலம் தமிழ் மக்களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கியது மட்டுமல்லாது சிறிலங்காவின் பொருளாதாரத்தை மீளமுடியாத நிலைக்கு தள்ளிச் சென்றார். சிறிலங்காவை முழுமையாகவே அதலபாதாளத்தில் தள்ளினார்

இக்காலப்பகுதியில் அதாவது 1977 முதல் 2002 ஆம் ஆண்டு ஆரம்பம் வரையான 25 வருட காலமும தமிழ் மக்கள் தமது உரிமைக் கான போராட்டத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையிலே உறுதியாக எடுத்துச் சென்றனர். சிங்கள ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதம் பொருளாதாரத் தடைகள், பிராந்திய வல்லரசின் இராணுவத்திற்கு எதிரான போராட்டம் அதன் இராஜதந்திர ரீதியிலானதும் ஏனையவகையிலுமான அழுத்தங்கள் பல்




வேறு நாடுகளின் உதவியுடன் முழுவளத்தையும் திரட்டி சிறிலங்கா ஆட்சியாளர் நடத்திய யுத்தம் என்பவற்றையெல்லாம் உறுதியுடன் நின்று எதிர் கொண்டார்கள்.

அதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 7வருட கால ஆட்சி தமிழ் மக்களுக்கு மிகுந்த அல்லல்களை ஏற்படுத்தியதாக அமைந்தது. இடம்பெயராத மக்களே இல்லை எனும் அளவுக்கு மட்டுமல்ல பல இடப்பெயர்வுகளை சந்திக்கவேண்டிய அளவுக்கு அது இருந்தது.

விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை முறியடித்து இலங்கையின் வரலாற்றிலேயே தமது பரம்பரைக்கே பெருமை தேடிக் கொடுக்க நினைத்தார் சந்திரிகா அம்மையார். தனது கட்சியின் நிரந்தர அரசியல் முதலீடாக இந்த யுத்தத்தை அவர் கருதினார்.

ஆனால் இதனைத் தமிழ்த் தேசிய இனம் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று திரண்டு முறியடித்தது. தமது விடுதலைக்கான இப்போராட்டத்திற்காக பல்லாயிரக்கணக்கான போராளிகளை மனவுவந்து வழங்கியது. இப்போராளிகள் உலக வரலாற்றில் எங்குமே காணமுடியாத ஈகங்களையும சாதனைகளையும் படைத்தார்கள் எவராலும் நினைத்துப்பார்க்க முடியாத போரியல் வரலாற்றைப் படைத்தார்கள்.

களத்திலே. போராளிகளோடு தோளோடுதோள் நின்றும் இராணுவம் வீட்டு வாசலில் நின்ற வேளையிலும் தெருவிலே இறங்கி உரிமைக்குரல் கொடுத்தும் உலகில் எந்த மூலை முடுக்கில் வாழ்ந்தாலும் போராட்டத்திற்கு ஊட்டமளித்தும் தமிழர்கள் பூரணமாகப் புலிகளோடு நிற்கின்றார்கள் வெற்றிச் சாதனை படைத்தார்கள்.

இவ் யுத்தமானது தமிழ் மக்களை சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கியபோதும் அவர்கள் நடத்திய உறுதிமிக்க போராட்டமானது இது இராணுவரீதியில் தோற்கடிக்கமுடியாத ஒரு வீரசுதந்திர போராட்டம். இதற்கு தலைமைதாங்கும விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படமுடியாத ஒரு போராட்ட சக்தி என நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது கடந்த இரண்டு வருட காலமாக யுத்தம் நின்றிருக்கிறது; பொருளாதார நெருக்கடி தளர்ந்திருக்கிறது; தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அமைதிப்பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நோர்வே அரசின் ஏற்பாட்டில் சர்வதேச நாடுகளின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில்தான் சிறிலங்காவில் ஏற்பட்ட அரசியல் அதிகாரப் போட்டிகாரணமாக மீண்டும் ஒரு தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்தத்தேர்தல் நடைபெற முக்கிய காரணம், எங்கே சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்துவிடுமோ? என்ற சந்திரிகாவுக்கு ஏற்பட்ட அச்சமே என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரை சமாதானத்தையே அவர்கள் விரும்புகின்றனர். மீண்டும் ஒரு யுத்தத்திற்குச் செல்வதை அவர்கள் விரும்பவில்லை பேச்சு வார்த்தை மூலம் ஓர் இணக்கப்பாடு ஏற்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள் இதன் காரணமாக சிங்கள அரசியல்வாதிகள் விரும்பியோ விரும்பாமலோ சமாதானத்தையே இம்முறை தேர்தல் கோசமாக வைத்திருக்கிறார்கள். எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம், தன்னாட்சி உரிமையைவலியுறுத்தி தமது அரசியல் சுதந்திரத்தை வலுப்படுத்தவேண்டியவர்களாக உள்ள நிலையில் இன்றைய தேர்தலை எதிர் கொள்கிறார்கள்.

யுத்தம் நின்றிருக்கிறது ஆனால் உரிமைப்போராட்டம் முடிவடைந்துவிடவில்லை அது வடிவம் மாறியிருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமது ஏகப் பிரதிநிதிகளாக தமிழ் மக்கள் என்றோ ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால் அதனை உல கம் புரிந்து கொள்ளக் கூடிய மொழி யிலே இத்தேர்தலிலே சொல்ல வேண்டியிருக்கிறது.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டம் பயங்கரவாதமல்ல; அது உரிமைப்போராட்டம் என்பதை இன்றைய அமைதிச்சூழலில் அதற்குரிய வழிமுறையில் சொல்லவேண்டியிருக்கிறது. தமது தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்பதே தமது குறிக்கோள் என்பதைத் தேர்தல் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. அதனை இன்று வெளிப்படுத்துவோம்.

வேலவன்

# கைக்கூலிகளின் உண்மை முகம்

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் இன்னும் அச்சம் நீங்கிய ஒரு இயல்பு வாழ்வை வாழமுடியாத ஒரு துயர வாழ்வை அனுபவித்து வருகின்றனர்.

இந்த மக்கள் அச்சம் நீங்கிய வாழ்விற்கு படையினரின் ஆக்கிரமிப்பு ஒரு பிரதான காரணமாக இருக்கும் அதேவேளை, படையினரின் துணையோடு முகாம் அமைத்து மக்களுக்கு பெரும் இடையூறாக இருப்பது மக்களால் தேசத்துரோகக்கும்பல் என அழைக்கப்படும் ஈ.பி.டி.பி. போன்ற குழுக்களாகும்.

ஒரு காலத்தில் தீவகம் போன்ற பகுதிகளில் எல்லா வெளித்தொடர்புகளையும் துண்டித்து அப்பகுதியைத் தமது இரும்புப் பிடிக்குள் நெரித்து மக்களுக்கு இழைத்த அநீதிகள் ஏராளம்.

இந்தக் கும்பல்களால் இழைக்கப்பட்ட அநீதிகளைக்கண்டு கொதித்த மக்கள்தான், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வெளியேறி மீண்டும் இந்த தேசவிரோதக் கும்பல்கள் தீவுப் பிரதேசத்தில் தரையிறங்கிய போது நீண்ட நாட்கள் வரை எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர்.

அத்தோடு இவர்கள் மீதான கோபத்தின் உச்சம் பல இடங்களிலும் இவர்கள் மக்களால் விரட்டியடிக்கப்பட்டதுடன் அவர்களின் முகாம்களும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

இவற்றிற்குக் காரணம் மக்கள் மத்தியில் இருந்த தேசவிரோத கும்பல்கள் தொடர்பாக ஏற்பட்ட வெறுப்புணர்வேயாகும்.

இந்தக் கும்பல் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் அவர்களின் வளங்களுக்கும் அழிவுகளை ஏற்படுத்திய படையினரோடு சேர்ந்து பாடசாலை மாணவர்கள் மீதும், பல்கலைக்கழக மர்ணவர்கள் மீதும் தாக்குதல்களையும், பாலியல் வல்லுறவு முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.

தம்மை அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக் கொண்ட சனநாயக வாதிகள் என்றும், மக்களின் பிரச்சாரத்திற்கு தீர்வு காண புறப்பட்ட பிதாமகர்கள் என்றும் கூறிக் கொள்ளும் இவர்கள் கடந்த காலங்களில் தான் பல கொடிய செயல்களைப் [illegible]ார்கள் என்றால் தற்போதும் அதை [illegible] தியதாக தெரியவில்லை.

இதில் இரண்டு சம்பவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒன்று- கரம்பன் தெற்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரியில் இருந்து வீடு திரும்பும் வழியில் வைத்து பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருவர் மீதான பாலியல் வல்லுறவு முயற்சி.

இரண்டு- யாழ் பல்கலைக்கழக மாணவர்களான பகிரதன் மற்றும் புவிராஜ் போன்றவர்கள் மீது ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த மணிபல்லவராசன் மற்றும் ஜெகன் ஆகியோர் நடாத்திய மிலேச்சத்தனமான தாக்குதல் ஆகும்.

இந்த இரண்டு சம்பவங்களும் இந்த குழுவைச்சேர்ந்தவர்களின் தமது உண்மையான முகத்தை வெளிக்காட்டியிருக்கும் அத்தோடு இந்தத் தேர்தல் முடியும்வரை நடித்துக்கொண்டிருந்த ஒரு பொய்யான நாடகம் பாதியிலேயே தெரிந்து விட்டமை மக்களுக்கு ஒரு தெளிவான செய்தியை நிட்ச்சயம் வழங்கியிருக்கும்.

ஏனென்றால் இந்தக் குழுவின் தலைவரும், அதன் உறுப்பினர்களும் இன்றைய செயற்பாடுகளின் வழிவரும் போலி சனநாயகவாதிகள்.

இவர்கள் தங்களை நல்லவர்களாக காட்ட முயன்றாலும் ஒருபோதும் இவர்களின் செயற்பாடுகள் இவர்களை நல்லவர்களாக இனங்காட்டவிடாது.

இந்த நிலையில் தீவகம் கரம்பன் பகுதியில் மாணவி மீதான பாலியல் வல்லுறவு முயற்சியைக் கண்டித்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நடாத்திய கண்டனப் பேரணியானது மக்களுக்கு பொருத்தமான நேரத்தில் இனங்காட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையேயாகும்.

இந்த நிலையிலும் மக்கள் முன் மீண்டும் மீண்டும் வந்து வாக்குகளைப் பெறமுயலும் இந்த சக்திகளுக்கு இன்றையை தேர்தல் முடிவுகள் தெளிவாகவே பதிலளிக்கும்.

மக்கள் இந்த சக்திகளை நிராகரிப்பதன் மூலமே எமது மண்ணையும், எமது கல்வியையும் எமது மாணவர்களையும் அத்தோடு எமது பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும்.

இதனையே இந்தத் தேர்தலில் மக்களும் செய்யப்போகிறார்கள்.

நக்கீரர்

# யாழ். தேர்த்தல் களம்: மக்கள் யாருடன்?

ஞாபகன்



தேர்தலில் தமது வாக்குகளைச் சரியான முறையில் பிரயோகிக்கும் நாள் வந்துவிட்டது. வடக்கு-கிழக்குத் தமிழர்கள் தங்கள் தலைவிதியை இன்றய நாளில் எழுதுகின்றார்கள். காலை ஏழு மணிமுதல் மாலை நான்கு மணிவரையான எட்டுமணி நேரம் இனிவரப்போகும் சில ஆண்டுகால அரசியலைத் தீர்மாணிக்கும். பொழுதாகின்றது.

மறுபடியும் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் வருவதற்குள் இன்றய வாக்களிப்பு பிரதிநிதித்துவம் ஊடாகச் சாதிக்கப் போவதே அடுத்தபடி எப்படி என்பதை முடிவுசெய்யப்போகிறது. இத்தேர்தல் வாக்களிப்பில் யாழ்ப்பாணத்தேர்தல் தொகுதி மக்களின் நிலைதான் என்ன?

இத்தேர்தல் தொகுதியில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களுமான சின்னங்கள் போட்டியிடுகின்றபோதிலும் விவாதத்திற்கும் பதிலடிகளுக்கும் உரியனவாக மூன்று சின்னங்களே உள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. மற்றும் ஆனந்தசங் கரியின் சுயேட்சைக் குழு 1 என்பனவே அவையாகும்.

யாழ்பாணத்தொகுதியின் ஒன்பது ஆசனங்களும் இவற்றுக்குள்தான் பகிரப் படப்போகின்றன.

ஆனால், ஈ.பி.டி.பியும் ஆனந்த சங்கரியின் சுயேட்சைக்குழுவும் கூறுவது போல ஆசனங்களை பெறுமா என்பதே பிரதான கேள்வியாக உள்ளது.

ஈ.பி.டி.பி. ஏறத்தாழ ஆறு ஆசனங்கள் தனக்குக் கிடைக்கும் என்ற தோரணையில் கூறும் ஆருடம் பெரும்பாலும் பகற்கனவாகவே போகவுள்ளது. 1994, 2000, 2001ம் ஆண்டுத் தேர்தல்களில் முறையே ஒன்பது, நான்கு, மூன்று, ஆசனங்களை பெற்றது. ஒவ்வொரு முறையும் அந்த எண்ணிக்கையில் வீழ்ச்சியே ஏற்பட்டு வந்துள்ளது.

இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு. படிப்படியாக மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் வீதம் உயர்ந்தமை ஒன்று, மற்றயது பின்வரும் தேர்தல்களின் முன்னயதைப்போல கள்ள வாக்கு அளிக்கமுடியாமல் போனமையாகும். 1994 தேர்தலில் தீவகத்தின் ஒரு பகுதியில் மட்டுமே வாக்களிப்பு நடந்தது. அது ஈ.பி.டி.பி.யின் முழுக்கட்டுப்பட்டிலும் இருந்ததால் முழுமையான கள்ள வாக்குகளால் 7 ஆசனங்களையும் .பெற்றுக்கொண்டது.

மற்றைய இரு தேர்தல்களிலும் பெற்ற ஆசனங்களுக்கும் ஆயுதமுனையில் சிறிலங்காப்படையினரது துணையோடு அளித்த கள்ளவாக்குகளே காரணம். ஆனால், இந்தத் தேர்தலில் நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. ஈ.பி.டி.பி. இப்போது வெளிப்படையாக மக்களை அச்சுறுத்தவோ கள்ளவாக்குப்போடவோ முடியாத நிலைமை உருவாகிவிட்டது.

விடுதலைப்புலிகளின் மீழ்வருகையோடு ஈ.பி.டி.பி. தனது கோட்டையாகக் கருதிய தீவகத்தின் நிலைமைகூட எதிராகத் திரும்பிவிட்டது. ஈ.பி.டி.பி.யின் அச்சுறுத்தல் எதுவும் பலிக்காது என்ற நிலையில் மக்கள் தமது வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தும் முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைக்கான தேர்தலாக இதை மாற்றியமைத்து விடுத்திருக்கும் விஞ்ஞாபனம் பெற்றிருக்கும் உயர்ந்த மதிப்பு அதன்பால் அனைவரையும் ஈர்க்கும் யதார்த்தமே மேலோங்குகின்றது. இது போதாதென்று ஈ.பி.டி.பி. தேர்தல் நெருங்கும்போது மேற்கொண்ட அடாவடித்தனங்களும் சமூக விரோதசெயற்பாடுகளும் மிக எதிரான நிலை நோக்கி மக்களைத் தள்ளியிருக்கின்றது.

கடந்தவாரம் கொக்குவிலில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரையும் சக மாணவனையும் படுகொலை செய்ய மேற்கொண்ட முயற்சி, முதல்இரு தேர்தல்களிலும் ஈ.பி.டி.பி. செய்த படுகொலைகளின் தொடர்சிக்கான அடியெடுப்பாகவே கருதப்படுகின்றது. 2000ம் ஆண்டுத் தேர்தலில் அது, கள்ளவாக்குகளை அளித்ததை ஆதாரபூர்வமாக வெளியிட்டதால் பத்திரிகையாளர் நிமலராஜனைக் கொன்றது. 2001ல் இரு கூட்டமைப்பு ஆதரவாளர்களின் உயிரைப் பறித்தது.

கடந்த சனியன்று தனது கோட்டையென்று செல்லிக்கொள்ளும் தீவகத்திலேயே 12 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியது. இதுவும் கடந்த பத்தாண்டுகளாக அது மேற்கொண்டு வரும் தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வல்லுறவின் தொடர்ச் சியாகவே மக்களால் நோக்கப் படுகின்றது.

இந்த நிலையில் ஈ.பி.டி.பி.கூறும் ஆறு ஆசனங்கள் என்பது கனவாக, கானலாகத்தான் போகும் என நம்பலாம். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் வாக்காளர்கள் எதிரிகளின் சதி முயற்சியால் வாக்களிக்கத் தடுக்கப் படாவிட்டால் இதில் மாற்றமே இருக்காது. இப்போதும் இரகசியமாக ஈ.பி.டி.பி. பணத்தை எவ்வளவுதான் அள்ளி இறைத்தாலும் அது சாத்தியப்படாது என்பதை இன்றைய வாக்களிப்பு முடிவு செய்யும். சுயேட்சைக் குழு 1ல் போட்டியிடும் ஆனந்தசங்கரியின் கட்சி நிலை குறித்து தீர்மானகரமான நிலை இன்னும் வெளிப்படவில்லை என்றே சொல்லலாம். ஏற்கெனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ள இவர் தனது நிலையை எந்தளவில் வைத்திருக்கின்றார் என்பது தேர்தல் முடிவு வெளியானதும்தான் தெரியவரும்.

ஆனாலும் அவர் கடந்த தேர்தலின் பின் தடம்மாறி தன்னை நியாயப்படுத்த முன்வைத்த 36,000க்கும் அதிக வாக்குகளின் பலம் தனக்குண்டென்ற வாதம், இம்முறை இருக்கப்போவதில்லை என்பது மட்டும் தெளிவானது. அவர் தனது பழைய ஆதரவாளர்களுக்கு பிரத்தியேகக் கடிதங்களோடு தலா இரண்டாயிரம் ரூபா வரையிலான பணமும் அனுப்பிவருவதாகக்கூறப்படுகின்றது.

இதன் மூலம் தமிழ்த் தேசியத்திற்கு இழைத்த துரோகத்தை மூடி மறைக்கலாம் என அவர் கருதுகின்றாரா? கடந்த தேர்தலில் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்திற்காக அவருக்கு விருப்பு வாக்களித்தவர்கள் இதை, ஏற்றுவிடப் போவதில்லை.

முதியவர்களை இலக்கு வைத்ததாகவே முதியவர்களுக்கு மதிப்பளித்தல் என்ற கோஷத்தை பத்திரிகைகளில் வெளிப்படுத்துகின்றார். இது ஒருவேளை அவருக்கு கழிவுவாக்கை எண்ணும் முறையில் ஒரு ஆசனத்தை வழங்கலாம் என்ற எதிர்பார்ப்பில் செய்யப் படுகின்றது. ஆயினும் இதற்கான சாத்தியமும் மிக்க குறைந்தளவிலானதே என விடயமறிந்தவர்கள் சொல்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் கிடைக்கக்கூடிய ஆச னங்களின் எண்ணிக்கை என்னவென்பதைக் கணிப்பிடலாம் ஆயினும், இதற்கு இரண்டு பிரச்சினைகள் யாழ்ப்பாணத் தேர்தல் களத்தில் இடம்பெறாது இருக்க வேண்டும்.

ஒன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் வாக்களிக்க எத்தடையும் படையினரால் ஏற்படுத்தப்படக் கூடாது. இரண்டாவது தமிழ் விரோத சக்திகள் கள்ளவாக்குகளை அளிப்பது நடக்கக்கூடாது. ஆனால், இது இரண்டையும் எவ்விதத்திலேனும் செய்துமுடிப்பது என்றே சிறிலங்காப் படையினரும் ஈ.பி.டி.பி.யினரும் வரிந்து கட்டிக்கொண்டுள்ளனர்.


வாக்குச்சீட்டு ஒன்றினை 500 ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தில் மறைமுகமாக ஈ.பி.டி.பி. கொள்வனவு செய்து வருகின்றது. கடந்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு வந்து இரு நாள்கள் தங்கியிருந்த கடற்படைத்தளபதியும் உயரதிகாரிகளும் தீவக படைநிலைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். இது தேர்தலின்போது மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுக்கும் தயார்ப்படுத்தலா எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத் தேர்தல்களத்தின் இறுதி முடிவு என்ன என்பது பெரும்பாலும் நாளை தெரிந்துவிடும். ●





# உணவுக்கலாச்சாரம்



ஒரு சமுதாயத்தின் நெடிய வரலாற்றிலிருந்து உணவுக் கலாச்சாரம் பிறக்கின்றது. மக்களின் வரலாற்றை எடுத்துக் கூறும் தகுதி உணவிற்கு உண்டு. மக்கள் வரலாறு மாறும்போது உணவுப் பழக்க வழக்கங்களும் மாற்றமடைகின்றன. கலாச்சாரம் எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. அது காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றது; உணவுப்பழக்க வழக்கங்களில் கலாச்சார மாற்றங்களோடு இணைந்து மாற்றமடைகின்றன. உலக மாற்றங்களுக்கும், தொழில்நுட்ப வரவுகளுக்கும் இசைவாக உணவுக்கலாச்சாரம் வளைந்து கொடுக்கின்றது. மாற்றங்களை வரவேற்கும் அதேசமயத்தில் உணவு சம்பந்தமான மரபுகளைப் பேணிப்பாதுகாக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. உணவு தேசிய அடையாளமாக நோக்கப்படுகின்றது. அடையாளத்தை இழக்கலாமா? மாதத்தில் ஒருமுறையாவது எமது பாரம்பரிய உணவுகளைத் தயாரித்து உண்ணவேண்டிய தேவையை நாம் மறக்கலாகாது.

ஒரே மக்கள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உணவுக் கலாச்சாரம் காணப்படுகின்றது. அதேபோல் ஒரே நாட்டினுள் பல்வேறு உணவுக் கலாச்சாரங்கள் இடம் பெறுகின்றன. சின்னஞ்சிறிய சிங்கப்பூரில் மூவகை உணவு முறைகள் இருக்கின்றன. சீன,மலே,மற்றும் இந்திய உணவுப் பாரம்பரியங்கள் சிங்கப்பூரில் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளன. நொன்யா (NONYA) என்று சிங்கப்பூர் வாசிகள் அழைக்கும் உணவு முறை மலேப் பாரம்பரியமும் சீனப் பாரம்பரியமும் கலந்த கூட்டுச் சமையலாகும். மலேசியாவிலும் மேற்கூறிய மூன்று உணவுப் பாரம்பரியங்கள் இருக்கப்பெற்றாலும் இந்தோனேசிய உணவுப்பாரம்பரியம் மலே உணவுகளில் ஆதிக்கம் செலுத்து வதைக் காணலாம். நூறுவீதம் இந்து மதத்தினர் வாழும் இந்தோனேசிய பாலித்தீவில் கோயில் அர்ச்சகர்கள் மீன், மாமிசம் போன்றவற்றை வெளிப்படையாக உண்கின்றனர். வாழை இலையில் சாப்பிடநேர்ந்தால் பாலித்தீவினர் இலையின் கீட்புறத்தில் உணவைப் பரிமாறி



உண்கின்றனர்.

ஏறத்தாழ 18,000தீவுகளும் 200 மில்லியன் மக்களும் கொண்ட இந்தோனேசியாவில் ஏராளம் உணவுப்பாரம்பரியங்கள் காணப்படுகின்றன. தடைசெய்யப்பட்ட உணவுகள் இந்த முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாட்டில் பெருமளவில் காணப்படுகின்றன. மதச்சடங்குகளின் போது உண்ணும் உணவுகள், திருமணம் போன்ற பொது வைபவங்களில் உண்ணும் உணவுகள், உடலாரோக்கியத்திற்காக உண்ணும் உணவுகள் என்று வேறுபட்ட மரபுகள் இருக்கின்றன. இந்தோனேசியர்கள் தமது மரபுகளைப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர் என்பது நன்கு அறியப்பட்ட விடயம். கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.பத்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தவர்கள் சுமாத்திரா, மேற்கு மற்றும் மத்தியயாவாவில் பாய்க் கப்பல் மூலம் சென்று குடியேறினர்.

கி.பி.பத்தாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் யாவாத் தீவுக்கு அப்பால் சென்று பாலித்தீவிலும் அதற்கு அப்பாலும் தமிழர்கள் குடியேறியுள்ளனர். பாலித் தீவுக்கு அடுத்ததீவை அவர்கள் மதுரை என்று அழைத்தார்கள். இன்று அது மதுரா என்று அறியப்படுகின்றது. பாலித்தீவிலும் மதுராவில் பல இந்துக் கோயில்கள் இன்றும் உள்ளன. கி.பி. 1086ல் மத்தியயாவாவில் தமிழர்கள் கட்டிய ப்ரம்பனன் சிவன்கோயில் இன்றும் வழிபாட்டு இடமாக இருக்கின்றது. தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட சகுந்தலை, இராமாயணம் போன்ற திரைப் படங்கள் யாவாவில் 40 வருடங்களுக்கு முன் திரையிடப்பட்டன. இதன்பின் சகுந்தலா, சீதா,சித்திரா, அருணி என்ற பெயர்களை பெண் குழந்தைகளுக்கு இடத்தொடங்கினர்.

அரச பரம்பரையினர் அரசோட்சும் தாய்லாந்தில் அரண்மனை உணவுப் பாரம்பரியம் மிகவும் மேம்பட்ட நிலையில் இருக்கின்றது. பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட பரம்பரை உணவக ஊழியர்கள் சமையலறையில் பணியாற்றுகின்றனர். உணவு பரிமாறுவதற்குப் பொறுப்பான உயரதிகாரி அரண்மனையில் பணியாற்றுகிறார். அரச குடும்பத்தினருக்கும் அவர்களுடைய விருந்தினர்களுக்கும் வைபவரீதியாக உணவு பரிமாறப்படுகின்றது. பரிமாறும் உணவிலிருந்து விருந்தினரின் அந்தஸ்தைக் கணிப்பிடலாம். பரிமாறுவோருக்கு சீருடையையொத்த ஆடை அணிகள் வழங்கப்படுகின்றன. தாய் உணவுவகைகள் சீன -மலே கலப்புணவாகத் தோன்றி னாலும் அதற்கோர் சிறப்பான தனித்துவமும் சுவையும் உண்டு.

மிகக்கூடுதலான கிறிஸ்தவர்கள் வாழும் ஆசிய நாடு என்ற சிறப்பு பிலிப்பீன்ஸ் தீவுகளுக்கு உண்டு. ஸ்பீயின் மற்றும் அமெரிக்காவால் பிலிப்பீன்ஸ் தீவுகள் பன்னெடுங்காலமாக ஆட்சி செய்யப்பட்டுள்ளன. மேற்கத்திய உணவுகளை உட்கொள்வதோடு பாரம்பரிய உணவுகளை இந்த மக்கள் உண்கின்றனர். பிலிப்பீன்ஸ் மக்களின் பாரம்பரிய உணவுகள் மலே ரகத்தைச் சேர்ந்தது. தென் கிழக்கு ஆசிய நாடுகள் ஒரேவகை தட்பவெப்பத்தையும், கடலோரச் சூழலையும் கொண்டிருப்பதால் இந்த நாட்டு மக்களின் பாரம்பரிய உணவுகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியே இருக்கின்றன. எனினும் தனித்துவ அடையாளங்கள் நிறைய உண்டு. குறிப்பாகப்பிலிப்பீன்ஸ் தீவுகளில் நெல்லும் தேங்காயும் நிறையப் பயிரிடப் படுகின்றன. தீவுகளாக இருப்பதால் மீன்வளம் நிறைய உண்டு.

நத்தார் பெருநாளின் போது பிலிப்பீன்ஸ் நாட்டவர் ஸ்பேயின் உணவைத் தயாரித்து உண்கின்றனர். இதை வேறு ஆசிய நாடுகளில் காணமுடிவதில்லை. பிற ஆசிய நாடுகளின் கிறிஸ்தவர்கள் நத்தார் போன்ற திருநாளில் கேக் போன்ற வற்றைத் தயாரித்து உண்பார்கள். ஆனால் பிலிப்பீன்சில் காலை தொடக்கம் மாலை வரை முழுக்க முழுக்க ஸ்பேயின் உணவுகளை மாத்திரம் உண்பார்கள். அமெரிக்கா பிலிப்பீன்சை ஐம்பது வருடம் மாத்திரம் ஆட்சி செய்தது. இருப்பினும் அமெரிக்காவின் பொதி உணவுகளும் பானங்களும்



பிலிப்பீன்சில் மிகக் கூடுதலாக விற்பனையாகின்றன.

பிலிப்பீன்ஸ் தீவுகள், வியற்நாம், கோரியா (வடக்கு மற்றும் தெற்கு) ஆகிய நாட்டு மக்கள் நாய் இறைச்சியை விரும்பி உண்கின்றனர். சீனாவிலும் இந்த வழமை உண்டு. எமது பகுதிகளில் ஆடுகளை உணவுக்காக ஊட்டி வளர்ப்பதுபோல் இந்த நாடுகளிலும் நாய்களை உணவுக்காக வளர்க்கிறார்கள். சீனா மற்றும் தென்கொரியாவின் புதிய செல்வந்தர்கள் வெளிநாடுகளில் இருந்து நல்லின நாய்களை உணவுக்காக இறக்குமதி செய்கிறார்கள். சுவிற்சர்லாந்தில் இது பற்றிய சர்ச்சை அண்மையில் கிளம்பியது. சுவிற்சர்லாந்து மலைப் பிரதேசத்தில் வளர்க்கப்படும் செயின்ற்பேர்னாட் (ST.BERNARD) இன நாய்களை சீனாவின் வாடிக்கையாளர்களுக்கு விமான மூலம் அனுப்பியபோது நாய்ப் பாதுகாவலர் சங்கம்

## அன்பரசு

ார்க்கொடியைத் தூக்கியது.

தவளை,புனுகுப்பூனை (CIVETCATS), பாம்பு, ஓணான், பழவெளவால், சில எறும்புகளின் முட்டை, ஈசல், தத்துவெட்டி போன்றவற்றை பிலிப்பீன்ஸ், வியற்நாம்,கோரியா (வடக்கு,தெற்கு) சீனா ஆகிய நாட்டு மக்கள் இன்றும் விரும்பி உண்கின்றனர். புனுகுப் பூனைகள் சீனாவில் பெரும் எண்ணிக்கையில் உணவுக்காக வளர்க்கப்படுகின்றன. அண்மையில் சார்ஸ் எனப்படும் சுவாச அடைப்பு நோய் சீனாவில் பரவியபோது புனுகுப் பூனைகளுக்கு உயிராபத்து பெருமளவில் கூடியது. புனுகுப் பூனைப் பண்ணைகளில் இந்தநோய் உற்பத்தியாகின்றது என்ற காரணத்திற்காக வகைதொகையாகப் புனுகுப்பூனைகள் அழிக்கப்பட்டன.

அடை வைக்கப்பட்ட வாத்து முட்டையைக் குஞ்சு பொரிக்கமுன் எடுத்து உணவாக்கும் வழமை மேற்கூறிய நாடுகளில் காணப்படுகின்றது. பாலியல் வீரியம் இதன்மூலம் கிடைக்குமென்ற பலமான நம்பிக்கை இந்த நாடுகளில் நிலவுகின்றது. திபெத்து நாட்டின் உணவுப் பழக்க வழக்கங்களில் பல அதிர்ச்சியூட்டும் அம்சங்கள் இருக்கின்றன. யாக் எனப்படும் ஒருவகை மயிர் செறிந்த எருமை இமயத்தில் காணப்படுகின்றது. இது பொதி சுமப்பதற்கும் பால்- கறப்பதற்கும் பயன்படுகின்றது. பாலில் இருந்து யாக் பட்டரைத் திபெத்தியர்கள் தயாரிக்கிறார்கள்.அவர்கள் அதை உடனடியாக உண்பதில்லை. 'பட்டர் கிடங்கு'' என்ற குழியில் அதைப் போட்டுவைப்பார்கள்.அது கெட்டுப்போய் துர்நாற்றம் வீசத்தொடங்கியபின் சுடு தேனீருடன் கடைந்து உப்பும் அப்பச் சோடாவும் இட்டு அருந்துவார்கள்.

அரிசி, கோதுமை, பார்லி,முட்டை என்பன திபெத்தியர்களின் பிரதான உணவுகளாகும். யாக் பட்டரைப் போல் முட்டையையும் அவர்கள் கெட்டுப்போகும் வரை வைத்திருப்பார்கள். பின்பு அது பச்சை நிறமாகி துர்நாற்றம் வீசத்தொடங்கியபின் உண்பார்கள். வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோ இனத்தவர்கள் இறைச்சியை நிலத்தில் புதைத்து வைப்பார்கள். அதே இறைச்சியில் புழுப்பிடித்தபின் வெளியில் எடுத்து புழுக்களைப் பச்சையாக உண்பார்கள். மிக அண்மையில் இறச்சியில் இவ்வாறு தோன்றும் புழுக்களின் மருத்துவக் குணங்களின் தரவுகள் வெளிவந்துள்ளன. மனித உடலில் மாறாத புண் ஏற்பட்டால் அதில் இறச்சிப் புழுக்களை வைத்து காற்றுப் போகக்கூடிய துணியால் கட்டினால் நன்மை கிடைக்கும் என்கிறார்கள். புண்ணில் உள்ள அழுக்ககளை இப்புழுக்கள் உண்டு சுத்தப்படுத் துகின்றன. அத்தோடு தமது வாயில் சுரக்கும் ஒரு திரவத்தையும் புண்ணில் செறிய விடுகின்றன. மருந்துக்கு மசியாத மனிதப்புண் புழுவின் வைத்தியத்திற்குக் கட்டுப்படுகினறது. அவை மனித உடல் இறைச்சியை உண்பதில்லை, அழுக்கை மாத்திரம் உண் கின்றன. இப்போது பிரித்தானியா மருத்துவ மனைகளில் இந்தச் சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டு மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் அந்த மக்கள் வாழும் நாட்டின் அமைவிடம், தட்பவெப்பம், மண்ணின் இயல்பு மற்றும் வளம், என்பனவோடு செல்வச் செழிப்பு அல்லது வறுமை போன்ற பின்னணி விவரங்களையும் எமக்குத் தருகின்றன. ஒரு குறிப்பிட்ட உணவை உட்கொள்வோரின் மதம்



அல்லது சமூக நம்பிக்கைகளையும் உணவுப் பழக்க வழக்கங்கள் வெளிப்படுத்துகின்றன. உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்றத்தாழ்வு பார்க்க முடிவதில்லை. ஒருவருடைய நஞ்சு இன்னொருவரின் உணவாக அமைகின்றது. மனித உடல் எதைத்தின்று பழக்கப்படுகின்றதோ அதையே அது சிறந்தஉணவாகக் கருதுகின்றது. ஜப்பான் மக்கள் சில மீன்வகைகளைப்பச்சையாக உண்கிறார்கள். எஸ்கிமோ மக்களின் உண்மைப்பெயர் இன்நூயிற் (INNUIT) எஸ்கிமோ என்றால் 'பச்சை இறைச்சி தின்னிகள்' என்று அர்த்தம். தமிழர்கள் என்றால் உணவைக் கடுமையாக அவித்துத் தின்பவர்கள் என்று அர்த்தமோ தெரியவில்லை.

ஊக்கத்தால் சாதிக்கப்பட்டு, காலத்தின் கடுகிய போக்கில் முழுமை பெறுவது, அனுபவம். - வில்லியம் ஷேக்ஸ்பியர்.

# நடுங்கும் மேனி -ஆனால் நடுங்காத கொள்கை -இதுவே தந்தை செல்வா

*தந்தை செல்வா அவர்களின் நூற்று ஆறாவது பிறந்த தினம் மார்ச் 3ஆம் திகதியாகும்.*

*தந்தையின் பிறந்த தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*

**மா.க. ஈழவேந்தன்**

ஊதிவிட்டால் விழத்தக்க குச்சிவடிவம் தாங்கி நடுநடுங்கும் கை காலுடனும் நடுங்கும் மேனியுடனும் நம்மிடையே காட்சியளித்தவர் தந்தை செல்வா. ஆனால் அவரிடம் நடுங்காத கொள்கையிருந்த தினால் இந்நாட்டை ஆண்ட அரசுகள் அவரைக்கண்டு நடுங் கின. இந்திய விடுதலை வர லாற்றிலும் பாகிஸ்தான் விடு தலை வரலாற்றிலும் இருபெரும் தலைவர்கள் இத்தகைய வடிவம் கொண்டே விளங்கினர். ஒருவர் அண்ணல் காந்தி. மற்றயவர் முகமதலி ஜின்னா. முன்னைய வர் பிரித்தானியப்பேரரசை ஆட்டம் காணச்செய்தவர். பின்னையவர் இந்திய அரசியலை ஆட்டிப்படைத்தவர்.

ஒரு [illegible]ட்டினைத் தலைமை தாங்குவதற்கு உடல் உறுதியைவிட உள்ள உறுதியே முதன்மை வாய்ந்தது என்பதை இத்தலைவர்களின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய தலையாய பண்புகள் உள்ளத்தூய்மையும், சிந்தனைத் தெளிவும், செயலில் துணிவு என்பதை யாம் மறக்காது இருத்தல் நலம்.

நெருக்கடிக்கு ஈடுகொடுக்கின்ற தலைவனிடம் இப்பண்புகள் குடிகொண்டிருந் தால்தான் அவனால் வெற்றி பெறமுடியும். இவை அனைத் திற்கும் மேலாக "எமைநத் துவயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்" என்ற விலைபோக மறு[illegible]ன்ற உறுதிப்பாடும் ஒரு தலை வனிடம் நிலைபெற்றிருக்க வேண்டும். எம் தந்தை வேலுப் பிள்ளை செல்வநாயகத்திடம் இப்பண்பு நிறைந்திருந்தது. இன்று தம்பி வேலுப்பிள்ளை பிரபாகரனிடமும் இதேபண்பு தலைதூக்கியுள்ளதால் எம்மை வழிநடாத்தும் தளபதியாக தலை வனாக மலர்ந்துள்ளார்.

பல பேசக்காமுறாது சில சொற்களையே அளந்து பேசியவர் தந்தை செல்வாசொற் கள் மீது காதல்கொண்டு என் வழக்கை இழக்க யான் ஆயத்த மில்லை என்பது அடிக்கடி அவர் வாயில் இருந்துவரும் சொற்கள். மேற்கூறிய சொற்களோடு வாயில் புன்னகை பூத்த நிலை யில் அவர் கூறும் மற்றய சொற்றொடர் வழக்கில் வெற்றி பெறுவது எளிது. ஆனால் கொள்கையில் வெற்றி பெறுவது கடினம் என்பதே யாகும். வேறுசொற்களில் விளம்பின் தந்தை செல்வா பேசியது மிகக்குறைவு. எழுதியது அதைவிடக்குறைவு. ஆனால் எம் நிலைபற்றி ஆழ்ந்து சிந்தித்துச்செயலாற்றினார். ஆகவேதான் அவர் வாயில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லையும் தமிழ் மக்கள் உன்னிப்பாகக் கவனித்தனர். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்குகளில் ஒளி பிறக்கும் என்ற பாரதியின் கூற்று தந்தை தான். குறிப்பாக தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து அனுப்பிய தலைவர்கள் நம்பிக்கைத்து ரோகம் செய்தால் அவர் பல்லை



சொற்களைப்பொறுத்தவரை முற்றிலும் பொருத்தமுடையதே.

தந்தையைப் பொறுத்தவரை மாறுபடும் கருத்துக்களைப் பொறுமையோடு செவிமடுப்பார். ஆனால் தான் அந்த சிந்தனை யின் அடிப்படையில் எடுத்த முடிவுகளை விட்டுக்கொடுத்த தில்லை மாற்றாரின் புன்முறு வலோ மயக்கும் மொழிகளோ தந்தையை என்றும் மயக்கிய தில்லை. மாறாகத் தானும் புன் முறுவல் பூத்துத் தன்கருமத்தில் கண்ணாயிருந்தார். எதிர்த்து அழிக்கமுடியாத தலைவர்களை அணைத்துப் புகழ்மாலை சூட்டி பட்டம் பதவிவழங்கி அழிப்பது அரசியலில் எதிரிகள் கையாளும் ஒரு சூழ்ச்சி அரசியலில் நிறைய அனுபவம் பெற்ற தந்தை அவர் கள் இத்தகைய நிலையற்ற மாயைகளில் மயங்க மறுத்தார்.

சட்டத்துறையில் அவர் மிக உன்னத நிலையில் இருந்தபோதும்... அரசவழக்குரை ஞராக விளங்கியபோதும் நான் என்ற அகந்தை - நான் என்ற செருக்கு அவரை ஆட்சி கொண்டதில்லை. காட்சிக்கு எளியவராய், கடுசொல் அற்ற வராய், வன்சொற்கள் மொழியப் பட்டபோதும் தமக்கேயுரிய புன்முறுவல் பூத்துத் தன்ன டக்கத்தின் திருவுருவமாக விளங்கியவர் எம் தந்தை அவர்கள்.

தந்தையை எவரும் எளிதில் கோபத்திற்கு ஆளாக்கமுடியாது. ஆனால் அவரின் கோபத்தைத் தூண்டக்கூடியசெயல் ஒன்று இருந்ததென்றால் அது நம்பிக் கைத்துரோகச்செயல் ஒன்று நெருடிக்கோபித்த காட்சிகள் இன்னும் எமக்கு நினைவிற்கு வருகின்றன.

தந்தை செல்வா தனி மனிதரை எல்லைமீறிப் புகழ் வதையோ - தனிமனிதர் வழி பாட்டையோ விரும்பியதில்லை. மாறாக வெறுத்தார் என்றே கூறமுடியும். தலைவர்கள் தடம் புரண்டாலும் கொள்கைகள் நிலைத்து வாழவேண்டும் என்பது அவரின் நிலையான கோட்பாடு. ஆகவேதான் இன்று தோன்றி நாளை மறையக்கூடிய தலைவர்களுக்கு முக்கியத் துவம் கொடுப்பதை விடுத்துத் தத்துவத்தை வழிபடுங்கள் என்று அடிக்கடி வலியுறுத்துவது உண்டு. நானோ கிழவன் நாளை நான் சாகக் கூடும். ஆகவே என்னைக்கும்பிடாதீர்கள் என் கொள்கையைக் கும்பிடுங்கள், என்று மீள மீள வற்புறுத்தி யுள்ளார்.

தந்தை செல்வாவோடு அடிக்கடி காரில் பயணம் செய் கின்ற வாய்ப்பு எனக்குக் கிடை த்ததுண்டு. குறிப்பாக திருகோண மலை மாவட்டத்தின் குக்கிரா மங்கள் எல்லாம் நாம் சென்று பார்வையிட்ட போதெல்லாம் "மூன்றுபோக விளைச்ச லுள்ள இந்தப் பூமியை நாம் இழப்பது" என்று உணர்ச்சி வசப் பட்டு கண்கள் கலங்கிய நிலை யில் அவர் கூறிய கூற்றுக்களை இன்று எண்ணுகின்றபோது கூட எம்மையறியாமலே எம்கண் களில் நீர் வரும் தந்தை செல்வா வழியில் நிலப்பாது காப்புப் பற்றிச் சிந்தித்த திரு.வன்னியசிங்கம். டாக்டர் நாகநாதன். சிந்தனைச்சிற்பி கதிரவேற்பிள்ளை அவர் களையும் நாம் மறப்பதிற் கில்லை.

"தமிழ் இனத்தின் உரி மைப்போராட்டத்தில் இரத்தம் சிந்தியும் சிறையேற்றும் பொருள் நட்டமடைந்தும் உயிர் துறந்தும் அல்லல் உற்றுள் ளோம். இதற்கான வெற்றி கிடைக்கும் நாள் வெகு தூரத் தில் இல்லை.

கடந்த காலங்களில் பலகஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதிவெற்றி தமிழ் இனத் திற்கே என்பது சந்தேகமறத் தெளிவாகிவிட்டது. இருந்தாலும் பூரணவெற்றி கிடைக்கும்வரை போர்க்கோலமிருந்தேயாகவேண்டும்.

"நாம் விடுக்கும் தனி நாட்டுக் கோரிக்கை மாற்றமுடி யாத முடிவாகும். இது வெறும் பேரம் பேசுவதற்காக விடுக்கப் பட்ட கோரிக்கையல்ல தனி நாட்டுக் கோரிக்கையென்பது புதியதுமல்ல எம்மிடம் இருந் ததை, இழந்ததை மீண்டும் நிலை நாட்டுகிறோம்".என்று தனது கொள்கையை தெட்டத் தெளி வாகக் கூறியவர் நம் தந்தை செல்வா அவர்கள்.

எம்மைப்போல் தந்தை செல்வாவுடன் மிக நெருங்கிப் பழகியவர் சுதந்திரன் ஆசிரியர் திரு.கோவை மகேசன் அவர்கள். பின்பு அவர் புலிகளின் வீர வேங்கை இதழின் ஆசிரியரா கவும் விளங்கியவர். எனவே தந்தை செல்வா பற்றியும் தம்பி பிரபா பற்றியும் இணைத்துக் கூறும் கருத்துக்கள் எம் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை.

"இணைப்பாட்சி இனி யில்லை, எம்முன்னோர் கண்ட ஈழத்திருநாட்டை மீட்பதொன்றே தமிழினம் தப்பிக்க ஒரே வழியென்று தரணியெல்லாம் அறிந்திட நீ முழங்கி நின்றாய் தமிழர்க்கு நீ தந்த இறுதி ஆணை தமிழா நீ போராடு ஈழம் காண!

சோதனைகள் வேதனை கள் சூழ்ந்திட்டாலும் சோராதே தமிழா நீ புலியாய்மாறு" என்று எம் தந்தை செல்வா புகழ்பாடும் கோவை மகேசன் அவர்கள் நீங்கள் மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடிய நிலையில் "ஓயவில்லை தமிழர்படை ஒவ்வோர் நாளும் பாய்கின்றது புலிகள்படை சிங்களத்துப் பகை வர் படை சாய்கிறது. உந்தன் பேரன் பிரபாவின் தலைமையில் மலரும் ஈழம்" என்று உறுதி யோடு 'தமிழீழம்' மலரும் என்று அவரும் முழங்கிச் சென்றுள்ளார். இன்று எம்மிடையே தந்தை செல்வாவும் இல்லை- கோவை மகேசனும் இல்லை" ஆனால் அவர்கள் கண்ட கனவு நனவாகும்.

தந்தை செல்வா அற வழியில் ஈழம்காண முனைந் தார். ஆனால் சிங்கள பேரின வாதம் அசைய மறுத்ததால் அவர் பேரன் பிரபாகரன் காலத்தின் மாறுதலுக்கு ஏற்ப மறவழியில் ஈழம்காண ஆயுதம் ஏந்திப் போராடவேண்டியதாயிற்று. வேலுப் பிள்ளை செல்வநாயகம் தொடக்கிவைத்த பணியை வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்கிறார். ஈழத்தின் தோற்றம் காலத்தின் கட்டாயம். வரலாற் றின் தீர்ப்பும் அதுவேயாகும்.

## ஓகோ! அப்படியா!



மகிந்தராஜ பக்ச தங்காலையில் கூட்டமொன்றில்

ஐக்கிய தேசிய முன் னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாடு அழியும். மக்கள் உணர்ந்து வாக் களிக்க வேண்டும் என் கிறார்.

### ஓகோ !அப்படியா!



பிரதமர் ரணில் கம்பளையில் நடைபெற்ற கூட்டமொன்றில்.

நிரந்தர சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த ஐ.தே.முவிற்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும்

### ஓகோ !அப்படியா!



டில்வின் சில்வா கண்டியில் நடை பெற்ற கூட்டத்தில் தெரி விப்பு.

டோக்கியோவில் வாக் களிக்கப்பட்ட இலங்கைக் கான நிதி தேவையில்லை. ஐ.தே.மு ஆட்சியில் அமைச் சர்கள் கொள்ளையடித்த பணமே போதும்.

### ஓகோ !அப்படியா!



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நிந்தவூரில் நடைபெற்ற கூட்டத்தில்

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியா தென்பதை நிரூபிப்போம்.

### ஓகோ !அப்படியா!



அமைச்சர் கரு ஜெயசூரியா ஊடகவிய ளாலரிடம் தெரிவிப்பு.


ஐ.தே.மு மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு அமைக்க துரிதநடவடிக்கை.

### ஓகோ !அப்படியா!



றொனி டிமெல் மாத்தளையில் நடைபெற்ற கூட்டத் தில்.

ஜே.வி.பீனர் சனநாயக வழிக்கு வரகாரணமானவர் கள் ஐ.தே.க கட்சியினரே.




# தூவானம்

மார்கழி மாதக் குளிர்காற்று எங்கும் சூறாவளியாய் சுழன்றடித்த படி.... ஒற்றையாய் தனித்துநின்ற பெருமரங்களுக் கெல்லாம் சிலு சிலிர்ப்பூட்டிக் கொண்டிருந்தது.

அந்த நிசப்தமான இரவுப் பொழுதில் சடசடத்துக்கொண்டி ருந்த மரக்கிளைகளைத் தவிர வேறு எவருமே விழித்திருக்க வில்லை.

வானத்திலோ பெருந்திர ளான கருமுகிற் கூட்டங்கள் சூழ் கொண்டு பெரும் மழை பொழி வதற்குத் தயாராகிக்கொண்டிருந் தன..... ஆங்காங்கே கண்ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுக்களுடன் இடிமுழக்கங்கள் வேறு காதைப் பிளந்தபடி.....

சிறிது நேரத்திற்கெல் லாம் ஊதல் காற்றுடன் சிறு சாடலாய் சடசடத்துக்கொண்டிருந்த மழைத்துளிகள் சற்றுப் பெரி தாகி.... இன்னும் பெரிதாகி.... ஒன்று சேர்ந்த துளிகளாய் பேரிரைச்சலுடன் எங்கும் பொழியத் தொடங்கின. எங்குமே அடைமழை...!

வீதி, வாய்க்கால், தெருக் களிலெல்லாம் மழை வெள்ளம் கரைபுரண்டோடத் தொடங்கியது. வீசிய அகோரக் காற்று அங்கு நின்ற பெரு மரங்களையெல்லாம் வீதியின் குறுக்கும் நெடுக்குமாகப் புரட்டி எறிந்துகொண்டிருந்தது.

கிட்டத்தட்ட அந்தக் கிரா மத்திலுள்ள எல்லாக் குடிசைகளுக்குள்ளும் இப்போது குப்பிவிளக்குகள் ஒளிரத்தொடங்கியிருந்தன மத்தியி லிருக்கும் அந்த ஒருபனை யோலைக் குடிசையைத் தவிர!

● ● ●

சதக்.....!சதக்...!சதக்...!

காய்ந்துபோய்க்கிடந்த பனையோலைக் கூரைக்குள்ளால் வழிந்துகொண்டிருந்த மழைத்துளிகள் காதோரத்தில் விழ.... திடுக்குற்று எழுந்த சரவணன் சுற்றும் முற்றும் பார்த்தான். எங்குமே இருள்! வெளியே மழை "சோ"வெனப் பொழிந்துகொண்டிருந்தது. குளிர் ஊசிபோல உடலைத் துளைத்தது!

எழுந்தவன் சிறிது நேரமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.....

கண்கள் நித்திரைக்குக் கெஞ்சின. ஆனாலும் அவனால் முடியவில்லை. உள்ளே குளிர் மட்டுமல்லாமல் அந்தக் குளிரால் அவனுக்குள்ளிருந்த நோயும் தன்பாட்டில் எழுந்து வருத்தத்தொடங்கியது.

"முட்டு" அவனை நிமிர விடாமல் அவஸ்தைக்கு உள்ளாக் கிக்கொண்டிருந்தது. மூச்சுவிடுவதே கஷ்டமாகி....! பக்கத்தில் படுத்திருந்த தாய் பாக்கியத்தை எழுப்புவோமா? என யோசித்தான். மனம் பரவா யில்லை! பிரிந்துபோன ஒரு ஓலைப் பாயில் தன் உடலை வளைத்துச் சேலையால் போர்த்தியபடி படுத்திருந்தாள்.

அவளுக்கு அருகில் அவனது தமக்கை துளசி, தங்கை சுமதி... என வரிசையாகப்படுத்திருந்தனர். மழை ஒழுக்கையும் உணராமல்.


பார்ப்பதற்கு அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

"பாவம்... நேற்றுமுழுக்க ஒழுங்காச் சாப்பிடல்ல.... வைரவர் கோயில்ல நேற்று தங்கச்சி வாங்கிவந்த புக்கையைத்தானே அம்மா.... எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தா.... அது எந்த மூலைக்குக் காணும்?"

"ம்ம்...ம் ஒரு நாளைக்கே நான் வேலைக்குப் போகாததால இப்பிடியெண்டால் நான் இல்லாட்டி?"

நினைக்கவே அவனுக்கு நெஞ்சில் நெருப்பெரிந்து சூடான கண்ணீர் வழிந்தோடியது!

நெஞ்சுக்குள் "முட்டு" மேலும் வலியைக்கொடுக்கவே கண்களை அகல விரித்து.... நெஞ்சைத் தடவி.... மேலும் தாங்க முடியாமல்...



தாயையும் தமக்கையையும் மாறி மாறிப் பார்த்தான்! இருவரும் ஆழ்ந்த உறக்கம்! சுடுதண்ணி குடிக்கவேணும் போல் இருந்தாலும்... வேண்டாம்.... என்ர கஷ்ரத்துக்காக ஏன் அதுகளை எழுப்பி.... கஷ்ரப்படுத்துவான்.

தனக்குள்ளேயே தீர்ப்புக் கூறித் தனக்குள்ளேயே வலியை அடக்கி.... நெஞ்சைப் பொத் தியபடி குப்புறப்படுத்தான்.

நித்திரை அவனை மெல்ல மெல்ல அணுகத்தொடங்கியது.

"சே.... இந்த மழை விடாதுபோல இருக்கு. முட்டுக் குளிசையும் முடிஞ்சு போச்சு! வேலைக்குப் போகாட்டிலும் இண் டைக்கு ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்!"

முணுமுணுத்தபடியே சாரத்தை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

கண்களுக்குள் தந்தையின் முகம் நிழலாய்த் தெரிந்தது! சரவணனின் தந்தை ஓர் கடற்றொழிலாளி. ஆரம்பத்தில் வறுமைக்குள் அமிழ்ந்திருந்த குடும்பத்தை அந்தக் கடல் தொழில்தான் ஓரளவுக்கு மிதத்தி வந்தது. கடலை நம்பித்தான் அவர்கள் வாழ்வு! எல்லோர் வீட்டிலும் அடுப்பெரிந்தாலும் சரவணன் வீட்டில் மட்டும் தகப்பன் கடலிலிருந்து வந்த பின்தான் அடுப்புப் புகையும். சில வேளைகளில் அவர் வரப்பிந்தி விட்டால்கூட கடற்கரையில் போய் தனியாக குந்திவிடுவாள் பாக்கியம். வீட்டுக்குள்ளே மூன்று ஜீவன்களின் வயிறும் அழுதுகொண்டிருக்கும். ஆனால் அந்த ஏழை ஜீவன்களின் மீது கூட காலனுக்கு இரக்கம் வரவில்லை.

வழமைபோலவே அன்றும் கடலுக்குச் சென்றவர் சில மணித்தியாலங்களின் பின் பசியுடன் காத்திருந்த பிள்ளைகளுக்கு முன்னால் பலத்த சூட்டுக்காயங்களுடன்தான் கடலில் மிதந்து வந்தார்.

எவ்வளவோ போராடியும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவர்களை விட்டு அவர் பிரிந்தே போய்விட்டார் நிரந்தரமாக!

அன்றே பிள்ளைகளோடு தானும் தொலைந்து போகத் தீர மானித்தவள். கடைசியாக தன் கணவன் மரணப்படுக்கையிலிருந்து சொன்ன ஒரே ஒரு வார்த்தைக்காகத்தான் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வாழவைக்கிறது!

எல்லா தந்தையினதும் கனவைப் போலவே "தன் பிள்ளைகளையும் படிப்பித்து நல்ல ஒரு நிலைக்கு கொண்டு வந்து ஒரு இடத்தில் கரை சேர்த்துவிடவேண்டும் என்பது. அவர் அவா.

**வளலாய் செல்வகுமார்**

அதற்காகவே அவள் இவ்வளவு காலமும் வீடு வீடாகச் சென்று அரிசி இடித்து, மா அரைத்து, கிடுகு பின்னிக்கொடுத்து தன் பிள்ளை களுக்கு உயிர் கஞ்சி வார்த்து வந்தாள்.

அவளாலும் இயலாமல் போகவே இப்போ சரவணனின் தலைமையில் தான் எல்லாக் குடும்பச் சுமையும். பாடசாலை போகும் தங்கை, திருமண வயதில் இருக்கும் துளசி.... எல்லாவற்றிற்கும் மேலாக. மகள் துளசியின் திருமண வாழ்க்கையைக் கண்டுவிட்டு உயிர்விடக் காத்திருக்கும் தாய்.....

●

எல்லாவற்றையும் எண்ணித்தான் தன் பள்ளிக்கூடப் படிப்பையும் விட்டு விட்டு அந்தச் சிறு வயதிலேயே தொழிலுக்குப் புறப்பட்டான் சரவணன்.

ஆரம்பத்தில் அவனை கடல் தொழிலுக்கு அனுப்ப பாக்கியம் தயங்கினாள்தான்! ஆனாலும் நாட்டில் இப்போது நிலவும் சமாதானம், போர் நிறுத்தம் என்பவற்றால் கடலில் ஏதும் அசம்பாவிதம் நடவாது என்பதில் ஓரளவு நிம்மதி இருந்ததால் பக்கத்து வீட்டு நைனார் அப்புவுடன் கடலுக்குப் போக சம்மதித்தாள்.

நைனாரும் அவனுக்குச் சம்பளமாக ஒரு தொகைப் பணத்துடன் ஒவ்வொரு நாளும் மீனும் கொடுத்து வந்ததால் வயிற்றுப் பசி இல்லாமல் ஓரளவுக்கு வாழ்க்கை ஓடியது.

* * * *

"எட தம்பி சரவணை... சரவணை... எழும்படா..."

பக்கத்தில் படுத்திருந்த தாய் சுருதி குறைந்த குரலில் திருப்பள்ளியெழுச்சிபாட.....

"என்னனை.. விடிஞ்சு போச்சே" என்றவாறு உடலை முறித்தபடி கண்களை மெல்லத் திறந்தான் சரவணன்...

மழை ஓரளவுக்கு விட்டிருந்தாலும் மீண்டும் வலுக்கும் நிலைதான். வீட்டுக்குள் இன்னமும் மழை நீர் ஒழுகிக்கொண்டிருந்தது. எங்குமே குளிர்காற்று. அடுப்பில் பாத்திர மொன்றினுள் தேனீர் கொதிக்க வைத்துக்கொண்டிருந்தாள் தங்கை துளசி.

"ம்ம்..ம்... இண்டைக்கு வேலையை நிப்பாட்டிப் போட்டு ஆஸ்பத்திரிக்குத்தானே போறது... அங்கையும் வேளைக்குப் போனாத் தான் வரிசையில நிண்டு கெதியா மருந்தெடுக்கலாம்...!

மனதுக்குள் எண்ணிய படியே பாயை விட்டெழுந்தான். தாழ்வாரத்தில் வழிந்தோடிய மழைத் தண்ணீரில் வாயைக் கொப்களித்துக்கொண்டவன் முகத்தையும் அலசி கட்டியிருந்த சாரத்தால் துடைத்தபடி அடுப்படிக்குள் வந்து குந்தியிருந்தபடி தேனீரைக் குடித்தான். இனிப்பு அவ்வளவாக இல்லாவிட்டாலும் அந்தக் குளிருக்கு அது இனிமையாகத் தான் இருந்தது.

குடித்து முடித்து விட்டு ஆஸ்பத்திரிக்குப் போக வெளிக் கிட்டவனை...

"எட.. சரவணை..பக்கத்து வீட்டு நைனார் அப்பு வெள்ளன கூப்பிட்டுச் சொன்னவர்.. தான் அங்காலி வீட்டில வலையை எடுத்துக்கொண்டு போறாராம்.. உன்னை அந்த மிதவையை இழுத்துக்கொண்டு கடற்கரைக்கு வரட்டாம்...சுறுக்காப்போ மோனை. நேற்றைக்கும் நீ போகேல்லை. பிறகு அந்த மனிசன் உன்னை வேலையிலிருந்து நிப்பாட்டிப் போடும் நீயும் ஏதோ போனால் தானே... வயித்துப் பாட்டுக்கெண்டாலும் நாங்கள்....

வறுமை தோய்ந்த குரலில் தாய் சொல்லிக் கொண்டிருந்தாலும் இந்தளவுக்கு மேல் சரவணனால் எதையுமே கிரகித்துக்கொள்ள முடிய வில்லை. நெஞ்சுக்குள் இதுவரை நேரமும் உறுத்திக்கொண்டிருந்த "முட்டு" வருத்தம் சட்டென்று எங் கேயோ ஓடி மறைந்தது போலிருந்தது.

அவன் பதிலுக்கு ஏதும் கூறவில்லை! தாயைப் பார்க்கும் போது பரிதாபமாக இருந்தது. அவ ளும் என்ன செய்ய முடியும்? என்னை நம்பித்தானே எல்லாம்! வேண்டாம் என் வருத்தம் எனக்குள்ளேயே இருக்கட்டும். என் னால ஏன் அதுகள் பட்டினி கிடக்கவேணும்..."

நினைத்தபடியே தொழிலுக்குச் செல்வதற்காக உடுப்புகளை மாற்றிக் கொண்டவன். உரப்பை ஒன்றிற்குள் சுற்றி வைக்கப்பட்டிருந்த வலையை எடுத்துக்கொண்டு புறப்பட்ட போது அவனை இடைமறித்த துளசி..."தம்பி கொஞ்சப் பழஞ்சோறுதான் கிடக்கு என்று வார்த்தையை இழுத்தாள்.

"இஞ்சத்தயவிட கடலுக்க நிக்கேக்கதாண்டா அதிகமாப் பசிக்கும் அதால விடிய வேலைக்கு வரேக்கையே நிறையச் சாப்பிட்டு வரவேணும்..."

நைனார் அப்பு அடிக்கடி சொல்லுவது அவனுக்கு இப்போது ஞாபகத்தில் வந்தது.

தமக்கையை நிமிர்ந்து பார்த்தவன்... "எனக்குச் சாப்பாடு வேண்டாமக்கா பசிக்கேல்லை! அதை பள்ளிக்கூடம் போற தங்கச்சிக்குக் குடு. எனக்கும் சேர்த்துத்தான் நைனார் அப்பு அங்க சாப்பாடு கொண்டு வருவார்..."

கூறிவிட்டு அவன் செல்லவும் சுமதி பள்ளிக்கூடம் வெளிக்கிடவும் சரியாக இருந்தது. அவசர அவசரமாக சாப்பிட்டவளை வெளிக்கிடுத்திவிட்டு வீதியில் போன இன்னொரு பிள்ளையின் குடைக்குள் அவளையும் சேர்த்து அனுப்பிவிட்டு பாக்கியமும், துளசியும், வெறு வயிற்றுடன் சரவணனை எதிர்பார்த்த படி காத்திருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல சரவணலனக் காணாது பாக்கியத் துக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்யத் தொடங்கியது. போர் நிறுத்தம் எண்டாலும் கடலுக்குள்ள நேவிக்காரன் எப்படியோ...

ஏங்கிக்கொண்டிருந் தவளுக்கு படலையைத் திறந்தபடி வந்த முருகேசு வாத்தியாரைக் கண்டதும் மனம் ஓரளவு நிம்மதி யடைந்தது.

வாத்தியார் வருவதென்றால் ஏதோ ஒரு நல்ல விசயத்துடன்தான் வருவார் என்பது அவளுக்குத் தெரியும்.

நேற்றுத்தான் அவருடைய வீட்டுக்குப் போய் மகள் துளசியின் சம்மந்தம் பற்றிப் பேசிவிட்டு வந்திருந்தாள் பாக்கியம்.

சீதனம் ஏதும் குடுக்க வசதி இல்லாததால மாற்றுச் சம்மந்தமா... அவையின்ர பொண்ணுக்கு சரவணனைச் செய்து வைத்து துளசியை அவையோட மகனுக்கு செய்யி

➡

☞ நேர்மையின் முத்திரை பதித்த முகங்களே, அழகு. - எல்லன் பி. அல்லிஸ்டன்

➡ றதுக்கு சம்மதம் கேட்கும்படிதான் வாத்தியாரை நாகலிங்கம் குடும்பத்திடம் நேற்று அனுப்பியிருந்தாள். அதனால் அதைப்பற்றிக் கதைக்கத்தான் வாத்தியார் வருகிறார் என்று அவள் நினைத்துக்கொண்டாள்.

"என்ன முடிவு சொல்லிச் சினமோ?... ஓமெண்டிச்சினமோ..?" என எண்ணற்ற எதிர்பார்ப்புக்களுடன் வெளியே எழுந்து வந்த பாக்கியம். அவசரப்பட்டவளாக உள்ள வாங்கோ... உள்ள வாங்கோ... என்று வாத்தியாரைக் கூப்பிட்டாள்.

மனமில்லாவிட்டாலும்! உள்ளே கூப்பிடுகிறாளே என்பதற்காக வீட்டுக்குள் சென்றவர். நனைந்து போய்க் கிடந்த திண்ணையில் "தொப்" என இருந்து கொண்டார்.

அவர் முகம் வாடிப்போய் இருந்ததையும் கவனிக்காத பாக்கியம் அவசரப்பட்டவளாக...

"என்ன...என்ன வாத்தியார் ஓமெண்டிச்சினமோ... சம்மதமாமோ? என்று அடுக்கிக் கொண்டே போனாள்...

அவளை ஒரு முறை நிமிர்ந்து பார்த்த வாத்தியார். "பாக்கியம்... அவை எல்லாத்துக்குமே ஓமெண்டிட்டினம், சம்மதம். ஆனால்.. ஆனால்...

என்று வார்த்தைகளை விக்கி விக்கி கதைத்தவர் அதற்கு மேலும் உண்மையை மறைக்கமுடியாமல் ஓவென்று அழத்தொடங்கினார்... அவர் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென வழிந்தோடியது.

அதிர்ந்து போன பாக்கியம் எதுவுமே புரியாமல் எ...எ...என்ன வாத்தியார்! என்ன நடந்தது... சொல்லுங்கோ..." பதட்டப்பட்டாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த வாத்தியார்... அழுத படியே... "பா...பாக்கியம் நீ பாக்கியசாலி இல்ல. எல்லாத்தையுமே இழந்திட்டாய்... கா..காலமை கடலுக்குப் போன சரவணனையும் நைனாவையும் நேவிக்காரன்..." அ...அதைச் சொல்லத்தான் வந்தனான்...

அதற்கு மேலும் வார்த்தைகள் கூறமுடியாமல் அவர் விக்கித்துப் போய் அழ... பக்கத்து நைனாரது வீட்டில் அவர்கள் ஒப்பாரி வைத்து அழும் சத்தம் கேட்கவே எல்லாவற்றையும் புரிந்துகொண்ட பாக்கியம் பதறியபடியே ஓடினாள்... கனவுக் கோட்டைகள் இடிந்துபோய்...

தனியாக இருந்து அழுதுகொண்டிருந்த வாத்தியார் நீண்ட சோகத்துடன், சால்வையை விலக்கிப்பார்த்தார் தூரத்தே சரவணனினதும், நைனாரதும் உடல்கள் சவ அடக்கத்திற்காக சுடலைக்குப் போய்க்கொண்டிருப்பது நிழலாய்த் தெரிந்தது.

பிள்ளையளின்ர கலியாணக் கோலத்தைப் பார்க்க இருந்தவளுக்கு இப்படியும் ஒரு காட்சியைக்காண வேண்டுமெண்டு தலையெழுத்து. போர் நடக்கிற காலத்திலதான் தகப்பனை நேவிக்காரன் சுட்டுப்போட்டானெண்டு பார்த்தால்.... இப்ப சமாதான காலத்திலையும்....ம்ம்...ம்.." பெரு மூச்சொன்றை விட்டவாறே வெளியில் எட்டிப்பார்த்தார். பலத்த காற்றுடன் பெய்த அகோர மழை இப்போது ஓய்ந்துபோயிருந்தது. மழை விட்டென்ன! இன்னும் தூவானம் விடவில்லையே? ●

---

## உருவகம்




நீண்டநாட்களுக்குப்பின் இளையமகன் வந்துதன்முன்நின்ற போது தாய் மெய்சிலிர்த்துப் பூரித்துக் கொண்டாள். சின்னக்குழந்தையென்றால் அள்ளி அணைத்து முத்தமிட்டுக் கொள்ளலாம். ஆனால் இவன் இளையவனானாலும் வளர்ந்துதானே விட்டான். மனதில் பொங்கிய தாய்மைப் பரிவோடு ராசா இந்த வெயில்களை தீர இந்தமோரைக்குடி என்றாள் மரகதம்மா.

வெயில் வெக்கை ஒரு புறமும் உள்ளத்தில் வெப்பியாரம் ஒரு புறமுமாக வந்த இளையவன் ராசா மோரை வாங்கி அண்ணாக்கில் அப்படியே தன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டான்.

ராசா எப்பிடியப்பு எங்கை பார்த்தாலும் ஈழக்கிழாரின் தோட்டம் செழிப்பு - வனப்பு - அது - இது என்று புழுகித்தள்ளுறாங்கள். தோட்டம் எப்பிடி இருக்குது? அம்மா ஆசையோடுதான் மகனிடம் கேட்டாள்.

அதுவா..? ம்.. சொல்லுவார் சொல்லக் கேட்பாருக்கு மதி என்ன? என்ற நிலைதானம்மா. என்று ஏதோ பூடகமாகப் பேசினான் ராசா.

மரகதம்மாவின் முகத்தில் கவலையின் கோடுகள் கோலமிட்டன. அவர் தனது நேரடிக்கண்காணிப்பில் ஒழுங்குபடுத்திவரைகள் செய்து பாகைக்கணக்கிலை இடைவெளிகள் எல்லாம் கணிப்பீடு செய்து பெருமளவு திட்டத்தோடு வளர்த்தெடுத்த தோட்டம். நீ சொல்வது ஏதோ புதினமாயிருக்கு...? என்னதான் அப்பிடிநடந்து போச்சுதோ...? என்று கேட்டுநிறுத்தினாள் மரகதம்மா என்ற அந்தத்தாய்.

அம்மா மற்றவையென்ன அயற்தோட்டம் அங்காலைஅங்காலையெண்டு தூரத்துத்தோட்டக்காரரெல்லாம் வியந்து கொண்ட தோட்டம் தான் எங்கடை தோட்டம். செழிப்பு - ஒல்லியே இல்லாத காய்கள் - அணில் கோதிவீழ்த்தாத இளநீர்... வட்டெலி கூட எங்கள் தோட்டத்தில் இல்லை என்று பெருமையில் மார்தட்டிப் பேசிக் கொண்டனாங்கள்தான்... இப்பதான்... என ராசா இழுத்தான்.

ராசா ஏனப்பு இழுக்கிறாய் என்ன இப்ப திடீரென்று ஏதும் நடந்திட்டுதா? கேட்டுவிட்டு மகனின் பதிலை எதிர்பார்த்தாள் அன்னை.

ஆ.. அம்மா எங்கடைதோட்டத்துத் தென்கிழக்குப்பக்கமாக ஒரு தென்னை இப்ப சிலநாளா வீசின காத்தோடை அப்பிடியே சரிஞ்சு முடத் தெங்காய்போய் பக்கத்துத் தோட்டத் தென்னை ஒன்றின் முகத்தோடுமுகம் வைத்து முத்தாடிக் கொண்டிருக்குது. எங்கடை எல்லையைவிட்டு ஐஞ்சாறு அடிக்குமேலை அவங்கடை தோட்டத்துக்கு உள்ளை போட்டுதம்மா. தேங்காயென்ன பாளையென்ன ஓலையென்ன எதுவுமே எமக்கு கிடையாது. எங்கடை பசளையிலை பராமரிப்பிலை வளர்ந்து நல்லபேரெல்லாம் எடுத்த அந்தத்தெங்கு இப்ப முடத்தெங்காகி நின்று கலகலக்குது... ம்.. காற்றிலை அந்த ஓலைக் கீற்றுக்கள் வித்தியாசமாக கலகலத்துக்கொண்டிருக்குது.

அப்ப என்ன செய்யப்போறியள்? அன்னையின் அழாக்குறையாக எழுந்தகேள்விக்கு அசையாமல் அப்படியே பதில் சொன்னான் ராசா. அம்மா அப்பாவுக்கு சொல்லிப் போட்டு அந்த முடத்தெங்கை தறித்துவிடுவமோ..? என இழுத்தான்.

ராசா...என்ன உடனை அப்பிடிக் கதைக்கிறாய்... உந்தச்சாய்ந்த கோபுரமென்று பெரிய உலக சாதனைக் கட்டடத்தை - அந்தக்கோபுரத்தையே நிமிர்த்தியிருக்கிறாங்கள். என்று சொல்லி மகனின் முகத்தைப் பார்த்தாள் அன்னை.

மகன்ராசா அப்படியே தாயின் எண்ணத்தைப் புரிந்தவனாக அம்மா... சாய்ந்த கோபுரம் சடப்பொருள் கிறெயின் பலத்தைக்கொண்டு ·சாதனங்களின் உதவியோடை சாதிச்சது மெய்தான். ஆனால் இது உயிப் பொருளம்மா... இதை ·அப்பிடி இனி நிமிர்த்தினால் சரிவராது அது.. அப்படிச் செய்தாலும் சின்னக்காற்றுக்குக் கூடச் சரிந்துதான்போகும். அதாலை மற்றப் பிள்ளையளுக்கும் பெரிய இடைஞ்சல் தீமை என்று வந்து தோட்டமே நாசமாகிப்போகும் என்றான் ராசா...

முடத்தெங்கை அழிக்கிறதாலை என்ன நன்மைதம்பி...?

அம்மா...மற்றைய தென்னைகள் அப்படியேநிற்கும்.. அடுத்த தோட்டத்து எலிகள் எங்கடை தோட்டத்துக்கை வந்து குரும்பையினையே அறுத்து நாசம் செய்யும்... இப்பிடிக்கன கரைச்சல் எல்லாம் வரும். எங்கடை பசளையிலை மாற்றான் தேங்காய் பறிக்க... சே... வேண்டாம்.. அப்பா எங்கை போட்டார்...

அங்கைபார் அவரும் வந்திட்டார்...

ம்...ராசா... முடத்தெங்கு எமக்கு கூடாது...அதை வைச்சிருப்பதிலும் தறித்துவிட்டால் தொல்லைகள் குறையும் என்றார் தந்தை. அப்படியானால் அப்பா... தொல்லை இல்லாத நல்லபணி அதைமெல்ல தறித்து விடுவம் என்றான்ராசா... தனது எண்ணத்தை தகப்பனார் ஆதரித்த பெருமகிழ்ச்சி அவனுக்கு.

தந்தை ஈழக்கிளார் மகன் ராசாவின் மனநிறைவைக்கண்டு மகிழ்ச்சியோடு சொன்னார், "ராசா தென்னையை பிள்ளை என்றுதான் தமிழ்சொல்கிறது. அதனால் நிறைவான ஒரு தோப்பில் முடத்தெங்குகள் இருக்காது. இருக்கக்கூடாது. அப்படி இருப்பின் அந்தத்தோப்பு அழிந்து போகும். அந்த அழிவிலிருந்து காப்பதற்காக முடத்தெங்குகள் தறிக்கப்படத்தான் வேண்டும். என்று கூறினார். தந்தையின் ஆணையை மனதிற்கொண்டு மகன் ராசாவும் அமைதியாகச் சென்று மறைந்தான் நிறைவோடு.

**வளவை வளவன்**

---

## இதிப்படி...

நட்டவிதையைவிடவும்
வெடித்துப்பறந்து
விளைவிடம் தேடிப்
புதைந்து கொண்ட விதை
வீரியத்துடன் துளிர்த்தது
சுதந்திர உயிர்ப்பு...
தாயகம் விட்டுக் காற்றில் ஏறிய
இறகு முளைத்த விதை
புகலிடமொன்றில் விருட்சித்தது.
அந்நிய மூச்சு...
தாய் மரத்தினின்றும் வில்லங்கமாக
முறித்தெடுத்து நட்டகிளை
முறித்தவன் வீட்டில் முளைவிட்டு
செடியானது
முறிந்த வாழ்வு...

பாதுகாப்புடன் நட்டு
பராமரிக்கப்பட்ட விதை
வெள்ளத்தில் அழுகி விட...
மரணித்தது முளைக் கரு.
கருகிய நம்பிக்கை...

ஊரோடியோடி
உயிர்தேடும் நாளில்
வேரோடிய வாழ்வும்
கிளையோடிய வாழ்வுமென
மேலே -
கிளை விரித்தும்
கீழே
வேர் விட்டும்
வித்தை காட்டும்
விதி வித்தின் வித்துவம்.

**ராதேயன்**

---

## தெருவிலிறங்கிய உயிர் திரும்பி வருமா வீட்டிற்கு?

முன்னைய காலத்தில்
திருக்கலில் வருவதாகச் சொல்வார்கள்

ஏ~றைன் திறப்புடன்
சாதாரண...
ஆடம்பரமான ஏசி வாகனங்களில்
குஷியாகத் திரிகிறது,
யமன்.

மாரிகாலத்தில்
தெருவழிகளில் சரக்கட்டைகள்
நெரிபடுவது போல...
எவருயிர்,
எந்த வீதியில்,
எவ் வாகனத்தினால்,
அரையும் குறையும், முழுமையாய்!
நசுக்கப்படுமென்பது
எவருக்கும் தெரியாது.

வீட்டிலிருந்து
பயணம் வெளிக்கிடுகையில்
"போட்டுவாறன்"
என்ற வார்த்தைக்கு
உத்தரவாதமில்லாததாய்
வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது.

**ஆவரங்கால் சுதன்**

☞ உடம்பின் மனச்சான்று, அடக்கம். – ஒனோரே தெ பல்ஜாக்





# வீரன் கஜபதி!

நந்தி நிகே தனம் என்னும் நாட்டுக்கரசன் நந்திவர்மன். நல்லாட்சி புரிந்த நந்தி வர்மன் ஆட்சிக்காலத்தில் நாட்டு மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

இதனைக் கேள்வியுற்ற அண்டை நாடான இரத்தின புரிவேந்தன் பொறாமை கொண்டு நந்தி நிகேதனத்தின் மீது படையெடுத்தான்.

'சிறுவர் சிறுமியர், முதியவர்கள் தவிர மற்ற யாவரும் போர் செய்ய வந்துவிடவேண்டும்' என்று நந்திவர்மன் ஒரு பிரகடனம் செய்தார். உடனே அவர் ஆணைப்படிமக்கள் போரிடத் திரண்டனர்.



அந்த நாட்டில் உள்ள சிற்றூர் ஒன்றில் கஜபதி என்னும் சோம்பேறி இருந்தான். ஒரு ஆள் குறைந்ததால் ராணுவத்தின் பலம் அப்படி என்ன வீணாகிப் போகப்போகிறது! என்று தலைமறைவாகி வீட்டுக்குள்ளேயே ஒளிந்துகொண்டிருந்தான்.

கஜபதியின் வயதான தாய், தன் மகனின் சோம்பேறித்தனத்தை எண்ணி வருந்தினாள். அவனை வீரனாக்க எண்ணி கிராம அதிகாரியிடம் சென்று ஒரு நாடகம் நடத்த உபாயம் ஒன்றினைக் கூறி வந்தாள்.

அன்றிரவு நாலைந்து திருடர்கள் கஜபதியின் வீட்டுக்குள் நுழைந்தனர். கஜபதி எதிர்த்துப் போராடினான். முடியவில்லை அந்தச் சமயம் அவன் அம்மா வெளியே சென்று கூச்சலிட்டாள். அண்டை அயல் வீடுகளிலிருந்து பலர் வந்து சண்டையிட்டுத் திருடர்களை விரட்டிவிட்டனர்.

அப்போது கஜபதியின் தாய், "கஜபதி பார்த்தாயா. உன் ஒருவனால் மட்டும் திருடர்களைச் சமாளிக்க முடிந்ததா? அண்டை அயலார் பலர் வந்துதானே விரட்டினார்கள். இந்த வீடு உன் தாய் வீடல்லவா. இதைக் காப்பாற்ற உன் ஒருவனால் பலரைச் சமாளிக்கமுடியாமல் போய்விட்டது. அண்டை அயலார் உன்னைப்போல அவரவர் வீடுகளில் இருந்து விட்டிருந்தால் நம் கதி என்ன ஆகியிருக்கும். நாம் அனைவரும் ஒன்று திரண்டால் தான் வெற்றிகிட்டும்" என்றாள்.

இதனைக் கேட்டதும் கஜபதி தன்தவறை உணர்ந்தான். கஜபதியும் மறுநாள் காலையில் படையில் சேரக் கிளம்பிவிட்டான்.

## வாரம் ஒரு குறள்



'செல்வம்' என்பதனுள் நாம் உள்ளடக்கிக் கொள்வது காசு, பணம், சொத்து விபரங்களைத்தான். ஆனால் அவை எல்லாம் செல்வம் என்று கூறப்பட்டாலும் இவற்றைவிட மேன்மையான செல்வங்கள் நம் உடலில் இருக்கின்றது.

அவற்றில் ஒன்று தான் எமது செவிகள் (காது) செவி வழி கேட்பது எல்லாவகை சந்தோஷங்களிலும் மிகப்பெரிய சந்தோஷசம் கேட்டல் என்பதனால் நிறை அறிந்து கொள்ள முடியும். கற்றவர்கள், கல்லாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி கேட்டல் மூலம் தெரியாத, புரியாத பல விடயங்களை கேட்டறிந்திட முடியும். அதனால்தான் "செவிக்குணவு நல்லணவற்றை கேட்டல்" என்று வர்ணிக்கப்படுகின்றது.

அதனால் எமக்குக் கிடைத்திருக்கும் இரண்டு செவிகளும் எல்லாவகைச் செல்வங்களிலும் மிகப் பெரிய செல்வங்கள் என்பதை நாம் அறிந்திட வேண்டும். இதனைத்தான்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 29

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ | ன் | செ | கு | ள் | வ | தி |
| ளி | றீ | பு | சி | ல் | னா | சீ |
| அ | வு | ச் | ரே | வ் | ம் | ன் |
| றா | வா | சு | ப | ர் | சை | செ |
| ண் | ல | ப் | வெ | மா | ட | ப் |
| லே | பு | லை | ர் | நீ | ரா | சி |
| றே | மு | சு | கே | கி | க | ய் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 27 இன் விடைகள்

01. ஆடு.
02. கோழி.

01. வைகாசி.
02. கார்த்திகை.
03. மார்கழி.

### சொற்சிலம்பம் - 27 இன் பரிசுக்குரியவர்

மா.துஜேந்திரன், தரம் -04,
சிவபாத கலையகம்,
பொன்நகர் - கிளி.

### சொற்சிலம்பம் - 27 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. எ.இசைப்பிரியன், கோரகலிமடு, மட்டக்களப்பு.
02. ம.பாலகுமார், இல.141, புதிய புன்னை நீராவி நகர்.
03. ஆர். கவிதா, இலுப்பைக்கடவை, மன்னார்.
04. அ.பிரவீன், மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.
05. கோ.றங்கேஸ்வரன், மகிழடித்தீவு - தெற்கு, கொக்கட்டிச்சோலை.
06. செ. தர்ஷிகா, இல-649, 7ம்யூனிற்,இராமநாதபுரம்.

01. கோயிலுக்கு செல்லும் நாட்கள்?
01) ........................................
02) ........................................

02. வானவில்லில் தோன்றும் நிறங்கள்?
01) ........................................
02) ........................................
03) ........................................

சொற்சிலம்பம்-29
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................

## அன்னை

* கௌரவத்திற்குரிய யாவர்களுள்ளும் அன்னையே அதிகக் கௌரவத்துக்குரியவர்.
* அன்னையை எவருடனும் ஒப்பிடுதல் கூடாது ஏனெனில் அவள் ஒப்புவமையற்றவள்.
* அன்னைக்குப்பின் எதுவுமே இந்த உலகத்தின் அன்புக்குச் சமமாகாது.
* அன்னையின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம்.

செ.ஜீவிதா,
யாழ்/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரக்கல்லூரி.

## கவிதைப் புனல்

குழந்தையை அணைத்து
கொஞ்சிக் குழாவுவது
தாயவளின் சந்தோசம்

நிலவைப் பார்த்து
கைதட்டி சிரிப்பது
குழந்தையின் சந்தோசம்

மழை முகி[illegible] கண்டு
தோகை[illegible]டுவது
மயிலின் ச[illegible]தாசம்


நீர் நிலைகள் தனியே
துள்ளிக் குதிப்பது
மீன்களின் சந்தோசம்

இயற்கையில் ஒவ்வொரு
அசைவுகளையும்கண்டுஇரசிப்பது
மனித மனங்களின்
சந்தோசம்

போர்ச்சூழல் அற்ற
நிரந்தர சமாதானம் நம்
நாட்டு மக்களின்சந்தோசம்

மு.துஸ்யந்தினி,
கிளி/இந்துக்கல்லூரி.

## நகைச்சுவை



சு.கௌரீஷன்

ராமு:- "வெய்யிலை விட மழை தான் உயர்வானது"

சோமு:- "எப்படி சொல்லுறாய்?"

ராமு:- எவ்வளவு கடுமையாய் வெய்யிலடிச்சாலும்" பாடசாலையில லீவு விட மாட்டார்களே, கடுமையா மழை பெய்தா லீவு விடுறாங்களே அதுதான்.

## சுத்தம் சுகம் தரும்

"அரிது அரிது மானிடராதல் அரிது - அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல்" என்றார் ஔவைப் பாட்டியார். அரிய, பெரிய மானிடப் பிறப்பைப் பெற்றவர்கள் நாங்கள். நாம் அறிவில் சிறந்த மானிடர்கள். ஆம்! நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என வாழவேண்டாமா? நோய் வராமல் பாதுகாக்கவேண்டும். நோய் வந்துவிட்டால் உடன் பரிகாரம் தேடவேண்டும்.

சகோதர சகோதரிகளே!


இன்றைய காலம் அறிவியலின் காலம். மனிதன் அவசரமாக விஞ்ஞான உலகத்தில் சஞ்சரித்து விட்டான். அவசரமாக எதையும் செய்கிறான். அமைதி இழந்து காரியங்களைச் செய்கிறான். அதனாலே நோய்களுக்கு ஆளாகிவிடுகின்றான்.


நாம் அன்றாடம் உண்ணும் உணவுகளில் அவதானமும், கட்டுப்பாடும் உடையவர்களாக வாழப் பழகவேண்டும். கொதித்தாறிய நீரையே தினமும் பருக வேண்டும்.

"சின்னச் சின்னக் குருவிகள் -எங்கள்
சிறுவர் சிறுமிக் குருவிகள்
வண்ண வண்ணச் சட்டைபோடும்
வாயாடிக் குருவிகள்
நாளையிந்த நாட்டை இங்கு
நடத்தப் போகும் குருவிகள்"

என்ற பாடல்போல, நாளைய உலகு எமக்கே உரியது ஆதலால் உள்ளத்தால் அகச்சுத்தமும், உடலால் புறச்சுத்தமும் உள்ளவர்களாக வாழுவோம். அசுத்தத்தால் உண்டாகும் நோய்களைத் தடுப்போம். தொற்று நோய்களை விரட்டியடிப்போம் "வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்பர் பெரியோர். ஆதலால் வாய் விட்டுச் சிரிப்போம்.

## ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





# புரிதலும் தெளிதலும்

எங்களுடைய மக்களில் வாழும் ஒரு குறிப்பிட்ட வயது சென்றவர்களை குறிவைத்து திட்டமிட்ட சில தேர்தல் பிரச்சார உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அதாவது இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றபோது அந்தத்தேர்தல்களில் அதிக தடவைகள் வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிட்டியவர்கள் நோக்கிய உத்திகளே இவை.


கட்சி சார்ந்த அரசியல் களத்தில் அப்போது பயன்படுத்தி ஏமாற்றப்பட்ட மக்களை தற்போதும் அதே உத்தியைக் கைக்கொள்ளும் தந்திரோபாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக பூட்டுச்சின்னத்தில் போட்டியிடும் ஆனந்தசங்கரி தான் கிளிநொச்சிப்பகுதி மக்களிடம் இருந்து அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்பட்டுவருகிறார்.

ஆனால் இதில் கவனிக்கப்படவேண்டியது. ஆனந்தசங்கரி இன்று ஊடகங்களில் கூறுவது போல இவர் இந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவார் என்று வைத்துக்கொண்டால் கூட எதனை இவரால் சாதிக்கமுடியும்.

இத்தனை வருட காலம் நாடாளுமன்றம் சென்று குறிப்பிடும்படியாக தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுத்துள்ளார்?

அதிலும் இன்றைய தேர்தல் இலங்கைக்கான நாடாளுமன்ற ஆசனங்களினை தீர்மாணிக்கும் தேர்தலாக மட்டுமன்றி தமிழ்மக்கள் இழந்த தங்கள் உதிரங்களின் தியாகத்திற்கான பெறுமதிகளை அளவீடுசெய்யும் ஒரு அளவுகோலாகக்கூட பயன்படுத்




தப்படும் நிலையில் ஆனந்தசங்கரியார் இன்றும் மக்களை ஏமாற்றும் கைங்கரியத்தில் ஈடுபடுகிறார்.

உண்மையாக இவர் தமிழ் மக்கள் மீதும் இனத்தின் மீதும் பற்றும்பாசமும் கொண்டவராக இருந்திருந்தால் இந்த தேர்தலிலிருந்து ஒதுங்கி வழி விட்டிருத்தல் வேண்டும்.

அதன்மூலம் தனது இனத்தின் மீதான பற்றைக் காட்டியிருக்கவேண்டும்.

பதிலாக தன்னை நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர்என்று பறை சாற்றிக்கொள்ளும் இவர் ஒரு மூன்றாம் தரத்துக்கு தாழ்த்திக்கொண்டு மக்கள் முன் வருவது எந்தளவுக்கு மக்கள் மத்தியில் அவருடைய செல்வாக்கு எடுபடும்.

இதற்கு ஏற்றாற்போல சங்கரியாரின் அற்ப சலுகைகளுக்காக அவரின் சில பழைய தொண்டர்கள் அவருக்காக வாக்கு வேண்டி கிளிநொச்சியில் பல வீடுகளுக்குச் சென்ற சம்பவங்களும் உண்டு.

உதிரம் சொட்டச் சொட்ட தாயகம் மீட்க களங்களில் மடிந்த தம்பிள்ளைகளின் உடல்களை தங்கள் கண்களால் தரிசித்த சிலர் இத்தகைய காரியங்களில் தாங்கள் ஈடுபட்டது மட்டுமன்றி மக்கள் முன் சென்று சங்கரிக்காக வக்காளத்து வாங்கியதுதான் மகா துரோகம்.

இத்தகையவர்கள் தங்களையும் இந்த இனத்தையும், காலத்தையும் எடைபோட மறந்துபோன மரக்கட்டைகள்.

இவர்கள் தங்கள் பாதங்களின் கீழ் மிதிபடும் இந்த மண்ணின் மகத்துவத்தை புரியாது இந்த மண்ணுக்கு பாரமாய் இருப்பவர்கள்.

**வேழினி**

தொடர் - 12




கென்ய மலையின் இந்த அடிவாரப்பிரதேசங்கள் சிறந்த விவசாய நிலங்கள் என்பது புலனாகிற்று. காலனித்துவ காலங்களில் இங்கு குடியேறிய வெள்ளை இன விவசாயிகளின் வழித்தோன்றல்களுடன், கிக்கியு மக்களும், மற்றும் அவர்களுக்கு மிக நெருக்கமான எம்பு, மேரு, போன்ற இனக்குழு மக்களும் இங்கு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் எனப்பின்னர் அறியமுடிந்தது. மலையின் வடபுற அடிவாரத்தில் பரந்துள்ள சமவெளிகள் கோதுமைச் செய்கைக்கு மிக உகந்த நிலங்களாகக் கருதப்படுகின்றன என்று சொன்னார்கள்.

போகப்போக, இத்தோட்டங்களும் மறைந்து பெருமரங்களே சூழ்ந்த ஒரு பிரதேசம் வரலாயிற்று. காட்டாறு ஒன்று கனவேகத்துடன் குறுக்கிட்டது. மற்றெல்லா ஓசைகளையும் விழுங்கிவிட்டு அதன் பிரவாகப் பேரிரைச்சலே மேலோங்கிற்று. கனத்த இரும்புப் பாலத்தின் மேலாக எமது வாகனம் மெல்ல நகர்கையில் கீழே நுங்கும் நுரையுமாகப் பொங்கிப்பாய்ந்த அந்த அழகுப் பயங்கரத்தைச் சற்று ஆறுதலாகத்தான் பார்க்கலாமே என்ற ஆசையில், 'இங்கே நிறுத்த முடியாதா? என்றேன். 'நோ!' என்றார் அயூப், திடமாக. இந்த இடமும் நேரமும் சரியில்லை. முடிந்தால் நாளை இதே வழியாகத் திரும்பும்போது இன்னோரிடத்தில் நிறுத்துகிறேன்'

'இன்னோரிடத்தில்' என்பதன் பொருள், சில நிமிடங்களிலேயே விளங்கிவிட்டது: அந்த - அதே - ஆறு, அதே வேகப்பிரவாகத்துடன் எமது பாதையில் மீண்டும் மீண்டும் குறுக்கிட்டது. ஒவ்வோரிடத்திலும் ஒவ்வோர் கோலம் பாதை, போகப் போக ஒடுங்கலாயிற்று.

ஒரு வளைவு திரும்பியதும் வாகனம் நின்றது. எங்கிருந்தென்றில்லாமல் இருவர், சீருடையுடன் ஆயுத பாணிகளாய் எம்முன் தோன்றினர்.

'இங்கயும் ஆமியா?' என்ற வார்த்தைகள் செல்வாவின் வாயிலிருந்து அவரறியாமலே வந்தன. மரமறைவில், அப்பின்னணியுடன் சேர்த்து உருமறைப்புச் செய்திருந்த காவற்சாவடி கண்ணிற்பட்டது. அயூப் இறங்கிப்போய் அவர்களிடம் ஏதேதோ ஆவணங்களைக் காட்டுவதும் தெரிந்தது. எங்கே போனாலும் இதே விதி தானா என்ற எண்ணத்துடன் இதயம் பலமாக அடித்துக்கொண்டது. அயூப் திரும்பி வந்தார். நாங்களும் இறங்கத்தான் வேண்டுமோ என்று ஆயத்தமானபோது, அவர் உள்ளே ஏறினார்.

'வனத்துறைக் காவலர்கள்!' என்றபடி, என்ஜினை ஸ்ராட் செய்தார்.

அடர்ந்தோங்கி நெடுத்திருந்த மரங்களும், அவற்றின்மேலே வானமும், கறுத்து, அந்தப் பிற்பகல் வேளைக்கு ஒரு மாலை மைம்மலைக் கொடுத்திருந்தன. காட்டின் கனம் மெல்ல அழுத்தலாயிற்று.

'இப்போதான் ஒரு யானைக் கூட்டம் இந்தப்பாதையைத் தாண்டியிருக்கிறது' ஓரிடத்தில் வேகத்தைச் சற்றுக் குறைத்த அயூப், முன்னால் தெட்டம் தெட்டமாகத் தெரிந்த, குலையாத, லத்திக்கும்பல்களைக் காட்டினார்.

'இன்னமும் அருகில்தான் இருக்குமா?' என்ற விமுக்தியின் கேள்விக்கு அவர் அக்ஸிலரேட்டரை அழுத்தி மிதித்ததில் எழுந்த என்ஜின் இரைச்சலே பதிலாகிற்று. மழை இருளின் பின்னணியில், மரங்களின் கீழே வரவேற்பு வளைவுபோல் கறுத்துத் தெரிந்த ஒரு பெரிய இரட்டைப் படலையின் முன்னால், ஐந்து நிமிடங்களின் பின் எங்கள் வானைக் கொண்டுபோய் நிறுத்திய அவர். 'மலை விடுதிக்கு வந்தாயிற்று' என்றார்.

மலைவிடுதி, உள்ளுக்குள் ஒருசிறிய மாளிகைபோலவே இருந்தது. ஆனால், எல்லாமே ஆபிரிக்கத்துவத்தைப் பறைசாற்றும் அடையாளங்கள். கறுப்பே கோலோச்சிற்று. மேற்தளம், சுவர், படிக்கட்டு, தூண், எல்லாமே மரம். அந்த மரங்களை மறைத்துக் கோரைப் புல் தட்டிகள் ஆங்காங்கு அமைத்திருந்த அலங்காரங்கள், கலைப் பொருட்கள் - யாவும் மண் மணம் வீசின. ஆபிரிக்க இனக்குழுத் தலைவன் ஒருவனின் வசிப்பிடத்தில் இருப்பது போன்ற உணர்வை விருந்தினர் மனதில் தூண்டும் சூழல். அறைகளுங்கூட, அமைப்பில் இப்படித் தானிருந்தனவெனினும், அங்கு நவீனத்துவமும் கலந்தே இருந்தது மின் வசதிகள், வெந்நீர் - தண்ணீர் வசதிகளுடன் கூடிய குளியலறை என்று.

அவசர அவசரமாகக் குளித்து உடைமாற்றிக்கொண்டு உணவு மண்டபத்தில் நுழைந்தபோது, ஐந்து மணியாகிக்கொண்டிருந்தது - வழமையாகப் பிற்பகல் மூன்றுமணிக்கு மூடி, பின், இரவுஏழு மணிக்குத் திறக்கிற அந்தக் கூடம், அன்று எமக்காக இடையில் திறந்தது. ஒரே சமயத்தில் எழுபது , எண்பது பேர் உட்கார்ந்து உணவருந்தக்கூடிய விசாலம். முற்றுமுழுதும் மேலைத்தேய பாணியிலமைந்து மலைவிடுதியுடன் ஒட்டாத ஒன்றாய்த் தெரிந்தது. என்றாலும் அந்த மாடி ஜன்னல்களின் கீழும் சூழவும் சணைத்திருந்த காடு கதகதத்தது.

பரிசாரகர்கள், தமக்கேயுரிய சீருடையில் பளிச்சென்றிருந்தார்கள். தந்த உணவுப்பட்டியலை வாங்கிப் பார்த்தபோது, வியப்பாய் மட்டுமன்றி ஆறுதலாயுமிருந்தது. எனக்கிருந்த பல பயங்களில் சாப்பாட்டைப் பற்றியதும் ஒன்று. நான் பிறவிச் சைவம்: முட்டை கூடச் சாப்பிடாத முழுச்சைவம்! முன்னர் ரஷ்யாவுக்குப் போனபோது, அங்கே அப்போது வசந்த காலமாயிருந்தபடியால், பழங்கள், காய்கறி - என்று அந்தப் பிரச்சினையே எழவில்லை. இங்கு வந்தபோதும், ஒரு முற்று முழுதான தாவரப்பட்சணி ஆப்பிரிக்காவுக்குப் போவதிலுள்ள முரண் உறுத்திக் கொண்டேயிருந்தது. இணையம் வேறு - இந்த விஷயத்திலுங்கூட - மிரட்டியேயிருந்தது! ஹோட்டல்களில், ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை,




காண்டாமிருகம் - எல்லாங்கிடைக்கும் - ஸ்பெஷல் தயாரிப்புகளாக - என்றும் பார்த்த நினைவு. எப்படியிருந்தாலும், எங்குபோனாலும், பிஸ்கற்றுகளுக்கும், வாழைப்பழத்திற்கும் நிச்சயம் தட்டுப்பாடு வராது என்ற துணிவில்தான் விமானமேறியிருந்தேன்.

எனவே, இப்போது இந்தப் பட்டியல் என்னை ஆசுவாசப்பட வைத்ததில் வியப்பில்லை: முக்கால் வாசி தாவர உணவுகள்! கத்தரிக்காய், வாழைக்காய், உருளைக்கிழங்கு, கெக்கரிக்காய், கிறீன்பீஸ், என்று! போதாக்குறைக்கு - கொஞ்சமாகத்தான் பிறகு வந்ததென்றாலும் - சோறு வேறு! அப்பாடாவென்றிருந்தது. அசைவ ஐட்டங்களும் தாராளமாகவே இருந்தாலும் என் நிமிர்த்தம் எந்தத் தயக்கமும் வேண்டாமென்று ஏற்கெனவே சொல்லியிருந்ததாலும், செல்வாவுக்கும் விமுக்திக்கும் கூட அப்பாடாவென்றுதான் இருந்திருக்கும். காட்டு விடுதியில் நாம் கொண்ட அடுத்த் இரு வேளை உணவுகளும், அடுத்தடுத்த நாட்களில் ஏனைய இடங்களில் உண்டவையுங்கூட இதேபோலத்தானிருந்தன. இன்னும், தக்காளி, அவரை, கோவா, போன்றவையும். ஆனால் தயாரிப்புக்கள் மட்டும் வேறுவிதம். பழங்களில் வாழையும், பப்பாசியும் நிறைய. காலையிலும் இரவிலும் வேண்டியளவு பால், பட்டர், அயூப் குறிப்பிட்டது போல மூன்று வெவ்வேறு தயாரிப்புகளில் சீஸ். மஸாய்மாறாவில், ஒரு காலை உணவில் தேன்கூட - இயற்கையோ, செயற்கையோ தெரியாது - இருந்தது. தேயிலை, கோப்பி, சீனி, பாற்பொருட்கள், காய்கறி, பழங்கள், இறைச்சி - எல்லாமே உள்ளூர் உற்பத்திகள் தானென்று சொன்னார்கள். என்றாலும், கென்யக்குடிமக்கள் எல்லோருக்குமே இவையாவும் தட்டுப்பாடின்றிக் கிடைக்குமா என்பது தெரியவில்லை. கென்யாவிலிருந்த நாட்களிலெல்லாம் என்னுள் இரண்டு கேள்விகள் எழுந்த வண்ணமே இருந்தன: இவ்வளவு இயற்கை வளமிருந்தும் இன்னமும் ஏன் அது ஒரு ஏழைநாடாகவே உள்ளது? இந்த இதமான - மிதமான - காலநிலை வருடமுழுவதுமிருந்தும், இந்த மக்கள் ஏன் இவ்வளவு கறுப்பாகவே இருக்கிறார்கள்?

சாப்பிட்டுவிட்டு வந்தபோது ஐந்தரைக்கும் மேலே. 'இயற்கைச் சூழலில் ஒரு நடைபோய் வருவோமா? விடுதியின் 'இயற்கை வள வழிகாட்டி' அழைத்தார். மழை கலைந்த மப்பும் மாலை வெய்யிலுமாய்க் கலந்து, வெளியே காடு ஒரு மாயாலோகமாக மாறியிருந்தது. இனந்தெரியாத எத்தனையோ பறவைகள் - பிராணிகளின் குரல்கள் - வா,வா, என்பது போல் குளிர்மட்டும் ஒவ்வொரு கணமும் கூடிவருவது தெரிந்தது.

'இருட்டிவிடாதா?'

'அதற்கு முதல் திரும்பிவிடலாம், அரை மணிக்குள்'

நானும் செல்வாவும் புறப்பட்டோம், மேலங்கிகளை இறுக மாட்டியபடி. ஆளுக்கொரு பெரிய குடைதந்து விட்டார்கள் - வழிகாட்டியிடமும் அது மட்டுமே இருந்தது போலிருந்தது.

'பயமில்லையா?'

'என்ன பயம்?' என்றார்.

மாலையில் மட்டுமல்ல, மத்தியானத்தில் கூட அந்த நிலத்தில் சூரியஒளி பட்டுவிட முடியாது என்கிறமாதிரி அடர்த்தி. பாதை வளைந்து நெளிந்து இருந்தாலும் தெளிவாயிருந்தது.

(தொடரும்)

## மழை, மற்றவை, மனிதன்

நிலம் தின்று மீந்த நீர்
குளமாகிநிற்க,
நேற்றிரவு நல்லமழை,

வரண்ட மண்ணில்
மிரண்டிருந்த பயிர்க்கெல்லாம்
மழையை தலைசாய்த்து(வணங்கி)
தம்முள்ளே ஏற்றன.

தாகத்தால் தவித்த தருக்களெல்லாம்,
சோகத்தைமறந்து
மேகத்தை வாழ்த்தின.

தூசிபடர்ந்த புற்களெல்லாம்
ஊசிமழையில்...
ஆசைதீரக் குளித்தன.

தவளைகட்கெல்லாம்
சரியான சந்தோஷம்,
பவள வாய்திறந்து பல்லவி பாடின.

பட்சிகள் எல்லாம்
கூட்டுக்குள் இருந்தபடியே
குதூகலித்துக் கொண்டிருந்தன.

"ஆ"வென்ற குளங்களும்
"ஓ"வென்ற கிணறும்
"ஹோ" வென்று குதித்து நீரை
உள் நிரப்பிக் கொண்டன.

இப்படியாய்...
ஓரறிவும், ஐந்தறிவும்
உற்சாகம் கொண்டிருக்க..
ஆறறிவு ஜடமோ...?
ஆழ்ந்த உறக்கம்
மழையினால் கெடுகிறதாம்.
"மூதேவிமழை"யென்று
முணுமுணுத்துக் கொள்கிறது.

## எவ்வழி காட்டும்...?

இன வெறியும்
கொலை வெறியும்
மலிந்து போன
வன்மம் நிறைந்த
வாழ்வு என்னை
ஈண்றெடுத்துள்ளது.
இரத்தத்தில் நின்று
பல்லிளிக்கும்மனிதம்
வரவேற்பே இல்லாத
என்வரவை...
எங்கனம் ஏற்று
எவ்வழி காட்டும்??

கு. துவசீலன

## அன்னை

விழிகாணும் தெய்வமாக
வழிகாட்டும் சுடராக – எம்வாழ்வில்
ஒளிதந்த பௌர்ணமி
தன் உதிரத்தின் ஒருபாதியை –
பிள்ளைக்கு
உணவாக சுரந்து
பாசமழை பொழிந்து
தேசம் எங்கும் புகழ்பெறும்
வாசம் வீசும் மல்லிகை...
உள்ளத்தில் ஊக்கம் கொண்டு
உலகத்தில் உயர்வு பெற்று
நல்வழியில் நாம் நடந்திட
வழிகாட்டும் கலங்கரை
சோதனைகளைத் தாண்டி
சாதனைகள் பல புரிந்து
சரித்திரம் படைத்திட
ஏற்றிவைக்கும் ஏணியவள்.

க.முருகானந்தன்.

### மழை

பூமியின் வறட்சி
கண்டு
ஆகாயம் சிந்தும்
கண்ணீர்

### நிலவு

நட்சத்திரப்
படைவீரருடன்
வான்வெளிதனில்
ஆட்சி நடத்திவரும்
வான்மேகத்து அரசி

### சூரியன்

உலகுக்கே
உணவளிக்கும்
உழவர் குடியின்
ஒளி விளக்கு!

ச. ஜீபத்

## ஊக்கமாத்திரை

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அறிவுவகிக்கின்ற பங்கின் அளவிற்குமனமும் வகிக்கின்றது. எமது மனது அமைதியாக, நிதானமாக இருக்கின்ற போதுதான், அறிவுபூர்வமாக தெளிவாக எம்மால் சிந்திக்க முடிகிறது, குழப்பமான மனதினால் அறிவு பூர்வமாக சிந்திக்க முடியாதல்லவா?

பார்க்கப்போனால் நாம் பெறுகின்ற வெற்றி தோல்விகளுக்கும்,



## மனமே... மனமே...

உயர்வு தாழ்வுகளுக்கும் நமது மனமே காரணமாகிறது. எமது மனம் பக்குவப்பட்டுவிட்டால் எம் வாழ்வில் எல்லாமே இலகுவாகிவிடுகிறது. சம்பவங்கள் எப்படி இருக்கிறது என்பதை விட, அவற்றை நாம் எப்படி உணர்கிறோம் என்பதிலேயே பல விடயங்கள் தங்கியிருக்கிறது.

நடக்கும் சம்பவங்கள் ஒன்றாக இருந்தாலும், அவை எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியான உணர்வுகளைத் தோற்று விப்பதில்லை. இதற்குக்காரணம் மனம்தான் ஒவ்வொருவரும் எப்படிப்பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தே உணர்ச்சிப்பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. நம்மிடமுள்ள பல குறைபாடுகளை நாம் உணர்ந்து கொள்வதில்லை. இதனால் எமது மனப்பாதிப்புக்களுக்கு நாமே காரணமாகிவிடுகின்றோம்.

வெறுப்பு,கோபம்,பொறாமை,சலிப்பு போன்ற எதிர் விளைவு தரக்கூடிய உணர்வுகள் எமக்கு ஏற்படுவதற்கும் மனப்பான்மையே காரணமாகி விடுகிறது.

ஒரு நிகழ்வை எப்படிப்பார்க்கிறோம் என்பதைப்பொறுத்தே, அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் அமைகின்றன. ஆராய்ந்து பார்த்தால் வாழ்க்கையில் சந்திக்கும் எல்லா நிகழ்வுகளும் மனதைப்பொறுத்து அமைவதை உணரமுடியும். கடிவாளம் இல்லாது,மனம் போனபடி நடந்தால் நாம் பலவற்றில் தோல்வியடைய நேரிடுகிறது. அதேசமயம் நம் கட்டுப்பாட்டில் மனதை இயக்கின்றபோது உயர்வடைகிறோம்.

மனக்கட்டுப்பாடு இல்லாமல் எவராலும் முன்னேற்றம் காண்பது சாத்தியமில்லை. மனதுக்கு கட்டளையிட அறிவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

புரிந்துகொள்ளுதல் என்பது முற்றிலும் மனதைப்பொறுத்தது தான். சரி,தவறு என்பதெல்லாம் வெறும் அபிப்பிராயங்களே. மனம் பக்குவப்பட்டால் எதையும் புரிந்துகொள்வது எளிதாகிவிடுகிறது. மனம் வகிக்கின்ற பங்கினைப் புரிந்து கொள்பவர்களே சாதனை புரிகின்றார்கள். இவ்வாறு புரிந்துகொள்ளும் மனதையே மனப்பக்குவம் என்று சொல்லுகின்றோம்.

வாழ்வில் சந்திக்கும் நெருக்கடிகளில் நிதானத்தை இழக்காத மனப்பக்குவம் இருக்கவேண்டும். இப்படி இருந்தால்தான் எந்த நெருக்கடியையும் சமாளித்து முன்னேற முடியும்.

தரிசிக்கும் சம்பவங்களால் ஏற்படுகின்ற உடனடியான தாக்கங்களுக்கு ஏற்ப செயற்படுகின்ற பழக்கத்தை மாற்றிக்கொண்டால் தான், நம்மை முன்னேற்றக் கூடிய சாதகமான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடமுடியும். இல்லாவிட்டால் சோர்வும், சலிப்பும், அவநம்பிக்கையும் எமது வாழ்வின் வெற்றிகளை ஏப்பம் விட்டுவிடும்.

ச.முருகாநந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 64

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | 07 |
| 08 | | | | 12 | | |
| | 16 | | | | | |
| | | 24 | 25 | | | |
| | | | | 33 | | 35 |
| | | | | | 41 | |
| | | | | | | |

பெயர்:-..................................
முகவரி:-..................................
..................................
..................................

### இடமிருந்து வலம்

01. மன்னன்.
06. தாய்.
08. வாரம்.
12. புத்திரன் (தலை கீழாக உள்ளது).
16. சோறு.
24. கிராமத்திற்கு எதிரானது.
33. பூ.

### மேலிருந்து கீழ்

01. பூமி.
07. அம்புயம்.
16. நெருப்பு.
24. சிநேகிதன்.
25. திருடன்.
33. சந்திரன்.
35. சண்டை (தலைகீழாக உள்ளது.)
41. யானை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.62 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நவராத்திரி.
11. திருடன்.
19. கோயில்.
25. ஆணவம்.
32. மல்லிகை.
39. காலை.
49. ஆதி.

**மேலிருந்து கீழ்**

01. நண்பன்.
02. வந்தனம்.
05. திருகோணமலை.
17. கதிரவன்.
36. கரி.
39. காது.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.64
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.62 இன் பரிசுக்குரியவர்

**யோ.அபிராமி, தரம் -09,**
**மு/தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.62 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. கு.பிரஷாந்தன், தரம் - 05, கிளி/வட்டக்கச்சி ம.வி.
02. யோ. குலக்ஷிகா, 7ம்,வட்டாரம், புதுக்குடியிருப்பு.
03. த.சங்கீதா, கந்தரோடை, சுன்னாகம்.
04. இ.கிருபா, இல.15, ஸ்கந்தபுரம்.
05. ந. சஜீபரன்(சசி), மல்லாவி மத்திய கல்லூரி யோகபுரம்.
06. வீ. கணேஸ், 101,அம்மன்கோயில்வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.




# இலக்கியப் பகிர்வு

1980களில் ஆரம்பிக்கப்பட்ட இணுவில் கலைஇலக்கிய வட்டமானது அண்மையில் நாடகக் கலைஞர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் “நாடக வழக்கு” என்னும் நூலை வெளியிட்டுள்ளது.

பல்வேறு இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்த அந்த வட்டமானது பல நூல்களின் வெளியீட்டு, அறிமுக விழாக்களை நடாத்திவருவதோடு இன்னுமொரு தளத்தில் தனது பணியை நகர்த்தியது.

அதன் அடிப்படையில் கவிஞர். சோ.பத்மநாதன் அவர்களின் “ஆபிரிக்க கதை” என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் “நிதர்சனத்தின் புத்திரர்கள்” என்னும் நாடக நூலையும் வெளியிட்டுள்ளனர்.

வட்டத்தின் அங்கத்தவர்கள் செயற்பாட்டு வீரர்களாக உள்ளனர். அன்றும் சரி இன்றும் சரி ஒவ்வொருவரும், ஒவ்வொரு துறையில் சிறப்பாக மிளிர்ந்தாலும் பலதுறைவிற்பனர்களாக உள்ளார்கள்.

பொதுவாக கலைஇலக்கியவாதிகளாக இருந்தால் என்ன யாராக இருந்தால் என்ன ஒவ்வொருவரும் தனித்தனியாக வளரவேண்டும். அந்த வளர்ச்சி அவர்களின் ஆளுமை என்பது தனியே அவர்களை முன்னுக்குக்கொண்டு வரும் என்பதைவிட அவர்களால் இந்த மண்ணும், இந்த சமூகமும் முன்னுக்கு வரவேண்டும். அதுவே தேவையானது.

எங்களது எந்தச்செயற்பாடும் எங்கள் சமூகத்தை மேம்படுத்தக் கூடியதாக. எங்கள் எதிர்கால சந்ததிக்கு முன்னுதாரணமாக இருக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

இங்கே இப்போது இந்த வட்டத்தில் விற்பனர்கள் குழந்தை ம.சண்முகம் அவர்களின் நூலை வெளியிட்டு வைத்துள்ளார்கள் என்றால் இத்தகைய ஒரு பின்னணியே முக்கியகாரணம்.

ஏனெனில் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் இந்த நூல் நாடக ஆர்வலர்களுக்கு மாத்திரம் உரியதல்ல. பல பெறுமதிமிக்க சமூக பெறுமதிமிக்க அரிய பல கருத்துக்களை சிந்தனைகளை உள்ளடக்கிறது.

வட்டத்தில் கணிசமானோர் அவருடன் ஏதோவிதத்தில் தொடர்புபட்டவர்கள். அவருடைய செயற்பாட்டால் ஈர்க்கப்பட்டவர்கள். இது வெறும் இரசிகர் மன்ற வெறியல்ல.



உள்ளார்ந்தமானது.

அதனால்தான் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் நூலை வட்டத்தினர் வெளியிட்டுள்ளனர் எனக்கருதுகின்றேன்.

“அவர் அடக்கமே உருவானவர். தம்மை அதிகம் வெளிப்படுத்திக் கொள்ளாதவர். எதையும் தூரநின்று ஞானிநிலையில் பார்ப்பவர். தன்செயல்களை என்றுமே அவர் பெரிதுபடுத்திக் கூறியதில்லை. ஆனால் அவர் செயல்களோ மிகப்பெரியவை” என்று பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் கூறியது உண்மையானது. என்பதை நீங்கள் உணருவீர்கள்.

“சண்முகலிங்கம் அவர்களின் பெறுமதி இன்னும் பலருக்கு தெரியவில்லை என பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார். அது உண்மைதான்.

ஆனால் அவருடைய பெறுமதியை அவருடைய முக்கியத்துவத்தை உணர்ந்ததால்தான் கலை இலக்கிய வட்டம் அவருடைய நூலை வெளியிட்டுவைத்துள்ளது . போலும்.

சண்முகலிங்கம் அவர்கள் சிறந்த சமூக உணர்வாளர். சமூக அநீதிகளை அழிப்பதற்கு அவர்கள் ஒன்றல்ல, இரண்டல்ல பல கத்திகளை தூக்கமுடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் தன் கருத்துக்க்ளுக்கு தானே சாட்சியாக செயற்பட்டுக்கொண்டு உள்ளார்.

இவ்வளவு அனுபவமும் பட்டறிவும் பெற்ற பின்னரும் கூட கூட்டுச் செயற்பாட்டில் நாடகம் ஒரு கூட்டுக்கலை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இளையவர்களையும், புதியவர்களையும் இணைத்து அணைத்து செயற்படும் பரந்த நோக்கம் கொண்டவர். அவரது அந்தப் பண்பின் வெளிப்பாடுதான் இந்த நூல் வெளியீடு.

“இன்றுவரை எத்தனையோ இளைஞர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறேன். இவை எல்லாவற்றினதும் எச்சம்தான் நான்”

என குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் கூறுவதைப்போல எத்தனை பேர் சொல்லுவார்கள் அவ்வாறு சொல்லக்கூடிய மனோபலம் எத்தனை பேருக்குவரும்.

அவருடைய அந்த மனோ பலத்தினாலேயே அவர் தனித்தன்மை கொண்டவராக இப்போதும் திகழுகின்றார். அவருடைய நாடகவழக்கு என்னும் நூலை தொகுத்து வெளியிட்ட ஆங்கில விரிவுரையாளர் கந்தையா சிறிகணேசன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

**இணுவையூர்**
**சிதம்பரச் செந்திநாதன்**




## சில பழமொழிகள்

நரி உபதேசம் பண்ணத்தொடங்கினால் நீ உன் கோழிகளைக் கவனிக்கத் தொடங்கு.

நீ உன் அயலவனை நேசி ஆனால் வேலியை எடுத்துவிடாதே.

பல காரணங்களைச் சொல்பவன் பல பொய்களைச் சொல்கிறான்.

வதந்தி பரப்புபவனைவிடவும் நித்திரை கொள்பவன் சமூகத்திற்கு அதிக நன்மை செய்கிறான்.

ஒரு எலும்புத்துண்டிற்காக நேர்மையான மனிதன் நாயக மாறவிரும்பான்.

## சில கேள்விகளும் பதில்களும்

மூன்றாவது உலக மகாயுத்தம் ஏற்பட்டால்...

வரலாறை எழுத ஆளும் இருக்காது தாளும் இருக்காது.

தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு காரணம்?

பல்லிசொல்லியதையும் மேடைப் பேச்சு அரசியல்வாதி சொல்லியதையும் நம்பியதே.

மரணம் என்பது என்ன?

ஏழைக்கு பசியிலிருந்து விடுதலை. பணக்காறனுக்கு ஆசனத்திலிருந்து விடுதலை.

மகுடியார்.

## சில விளக்கங்கள்

### குறட்டை

நாடாளுமன்றத்தில்
எமது உறுப்பினர்கள்
தொகுதிக்காக
கொடுக்கும்
குரல்.

### தமிழன்

எங்கே பிழைக்கப்
போனாலும்
திரும்பும் போது
அகதி

### உபதேசம

புத்தகம் முழுவதும்
பொதுவுடைமை தத்துவம்
அட்டையினுள்ளோ
சகல உரிமையும்
ஆசிரியருக்கே என்ற
தனியுடமைக் கோஷம்

ஜெயாபாரதிப்பிரியா

## இவை சில நறுக்குகள்

### நெருப்பு

பாலைவனமே
இல்லாத என் மண்ணை
பாலைவனம்
ஆக்கினாய்..
எரிமலை ஆயிற்று
எரிமலையே இல்லாத
என்மண்.

### அரண்

என்
வலக்கையின்
ஐந்து விரல்கள்
உண்ணவும்
எழுதவும்
வணங்கவும் மட்டுமல்ல
அறையவும்...
காசி ஆனந்தன்

பொறுக்கி.

## படித்ததில் பிடித்தது

### வருகை

*செனகல் நாட்டுக்கவிதை*

பிற்பகலொன்றின்
மனதுக்கு நெருக்கமான
அரையிருளில்
கனவுலகில் ஆழ்ந்திருந்தேன்
பரவைக் கடலின்
தொடுவானத்திலிருக்கும்
கிராமத்தின்
இறந்தவர்களது
இறுதி ஊர்வலம்போல்
அந்த நாளின் களைப்பும்
அந்த வருடத்தில் இறந்து
தசாப்தமொனிறின்
நினைவுப் பொருட்களாய்
ஆகிவிட்டவர்களும்
என்னை
ஆட்கொள்கின்றனர்.
மாயைகளால் மங்கிப்போன
அதே சூரியன் தான்...
மறைவான பிரசன்னங்களால்
அமைதியிழந்து போன
அதே வானம் தான்...
மாண்டு விட்டவர்க்கு
கணக்குத் தீர்க்க வேண்டியோரால்
அஞ்சப்படும்
அதே வானம் தான்.
திடீரென
என்னுடைய மாண்டோர்
என்னை
நெருங்கி வருகிறார்கள்.

ஆங்கிலத்தில்:- லியோபோல்ட் செடார் செங்ஹொர் செனகல்,
தமிழில்:- வின்சென்ற் புளொறன்ஸ்.

புத்தகமொன்றினை இரவலாக வாங்குவதற்காக நண்பரொருவரிடம் கடந்த வாரத்தில் மூன்றுதடவைகள் போயிருந்தேன். மூன்று தடவைகளிலும் அவரைச் சந்திக்கமுடிய வில்லை. (கணனி மயமாகிவரும் இன்றைய உலகில், எல்லாமே எலெக்ரோனிக்கும் இன்ரநெற்றுமாக மாறிவரும் சூழலில் இன்னும் புத்தகத்தை இரவலாக வாங்குவதற்கு மூன்று தடவைகள் ஒரு மனிதப்பிறவி அலையுமா என யாரும் யோசிக்கக்கூடும். ஆனால் புத்தகங்கள் என்றென்றைக்குமாக இருக்கப்போகின்றன என்பது ஒரு நிரூபணமாகும் உண்மை)

நான் தேடிச்சென்ற நண்பர் வீடு ஒன்றினைப் புதிதாகக் கட்டுகிறார். அதற்காக ஓடித்திரிகிறார் என்று அவருடைய வீட்டில் தகவல் சொன்னார்கள்.

“கலியாணத்தைச் செய்துபார், வீட்டைக் கட்டிப்பார்” என்று சொல்வார்கள். இரண்டும் எங்களுடைய சமூகச் சூழலில் மிகவும் கடினமான காரியங்கள்தான். “எனது திருமணம் இலகுவாக நடந்துவிட்டது. ஆனால் வீடுகட்டுவதுதான் இரட்டிப்புக்கஸ்ரமாக இருக்கிறது” என்றார் வேறொரு நண்பர்.

வீடுகட்டுவதும் கல்யாணம் செய்வதும் கடினமானதால்தானோ தெரியாது திருமணத்தின்போது வீட்டையும் சீதனமாகக் கொடுக்கிறார்கள் சிலர். வீட்டைச் சீதனமாகக் கேட்கிறார்கள் பலர். இருக்கும் வீட்டை விற்றுச் சீதனம் கொடுத்தவர்கள் பலருண்டு. அப்படி வாங்கிய மணமகன்கள் பலரையும் எங்களுக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும்.

சில மணமகன்மார், குறிப்பாக வெளிநாடுகளில் இருக்கின்ற சிலர் தங்களுக்குக் காசுதான் வேணும், வீடோ காணியோ வேண்டாமென்று சொல்கிறார்கள். சிலரோ ‘காசைத்தருகிறோம் நாட்டில் (அவர்கள் நாடு என்று அழைப்பது தாங்கள் பிறந்த - எங்களுடைய இந்தத் தேசத்தைத்தான்) காணியை வாங்கிவிடுங்கள். காசை அனுப்புகிறோம் வீட்டைக் கட்டிவிடுங்கள்’ என்கிறார்கள். இப்படியே போகிறது வீடும் எங்களின் வாழ்க்கை எண்ணங்களும்.

எப்படியோ வீடு ஒரு முக்கியமான தேவையாகிவிட்டது.

வீடில்லாமல் வாழமுடியாதா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேணும். மனிதனுடைய அடிப்படைத்தேவைகளில் வீடு முக்கியஇடம் பெறுகிறது. உணவு, உடை, உறையுள் என்று சிறிய வயதில் படித்ததே ஞாபகம் வரும் அளவுக்கு வீடு முக்கியமானது.

இந்த வீட்டை எப்படி நாங்கள் பார்க்கின்றோம் என்பதும் முக்கியமானதே.

தங்குவதற்கு, பாதுகாப்பாக இருப்பதற்கு, பொருட்களை வைப்பதற்கு, ஏன் பொதுவாகச் சொன்னால் வாழ்வதற்கே வீடு அவசியமாக இருக்கிறது என்று சொல்லலாம்.

ஒரு வீடு வசதியாக இருந்தால். நல்ல அமைப்புடன் இருந்தால் மகிழ்ச்சி தானாகவே பிறந்து விடுகிறது என்பார்கள்.

வீடில்லாதவர் எதுவும் இல்லாதவராக, நடைபாதைகளிலும் கடைவிறாந்தைகளிலும் ஒண்டிக்கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

வீடு ஒருவரை அமைதியாக வைத்திருக்கிறது; ஆனந்தம் தருகிறது; வாழ்வை நம்பிக்கையோடு நகர்த்திச்செல்கிறது; சமூக வாழ்வுடனும் உறவுகளுடனும் பண்பாட்டுடனும் கலந்து வாழவைக்கிறது.

வெறுமனே கல்லும் மண்ணும் கம்பியும் கொண்டமைந்த சடமல்ல ஒரு வீட்டின் அமைப்பு. அது ஒரு உயிர்ப்புள்ள மையம்.

சிலர் தங்களுடைய அந்தஸ்தை வெளிக்காட்டுவதற்கும் வீட்டைக் கட்டுகிறார்கள். சிலர் ‘தலைமுறைகளாக தங்கள்குடும்பம் வாழவேணும்’ என்ற திட்டத்தோடு அமைக்கிறார்கள். வேறுசிலரோ கூட்டுக்குடும்ப வாழ்க்கைக்குத் தோதாகக் கட்டுகிறார்கள். இன்னும் சிலர் தங்களுடைய தொழில் வசதிக்கேற்றமாதிரி வீட்டைக்கட்டுகிறார்கள். உதாரணமாக விவசாயி ஒருவரின் வீடு அவருடைய விவசாய உற்பத்திப் பொருட்களையும் உற்பத்திக் கருவிகளையும் களஞ்சியப்படுத்துவதற்கான நோக்கத்தோடு கட்டப்பட்டிருக்கும்.

இப்படியெல்லாம் வெவ்வேறு விதமாக, புதிதாகக் கட்டப்படும் வீடுகளின் கதையைப்பார்த்தால் சில சுவாரஸ்யமான விடயங்கள் புலப்படும். இங்கே ஒன்றைமட்டும் பார்ப்போம்.

எங்களிற்பலரும் வீட்டினைக் கட்டத் தொடங்கும்போது அதனை உரியமுறையில் திட்டமிடுவதாயில்லை. அறிவுபூர்வமாக அதனை அணுகுவதும் இல்லை. இது எங்களிடம் எல்லா விடயங்களிலும் பொதுவாகவும் ஆழமாகவும் தொடர்ச்சியாகவும் உள்ள ஒரு பெருங்குறைபாடு.

வீடுகட்டும்போது பெரும்பாலும் முதலில் எங்களிற்பலரும் உடனே நாடுவது சோதிடரைத்தான். அதுவும் ஒரு சீசனில் அந்த அயலில் எந்தச் சோதிடர் கொஞ்சம் புகழுடன் இருக்கிறாரோ அவரைத்தான்.

அவர் வீட்டுக்கான தெரிவிடத்தை நிர்ணயித்தபிறகு அடுத்ததாக வருபவர் மேசன்.

மேசன்தான் எங்களுக்கு எல்லாமாக இருப்பவர். வீட்டைக்கட்டத் தொடங்குவதிலிருந்து முடித்துவைப்பதுவரையில் அவர் ஒரு முடிசூடாத ராசாதான்.

வீடுகட்டுவதில் பெரும்பங்கு வகிப்பவர் அல்லது பிரதான மையங்களிலொன்று மேசன்தான் என்றாலும் நாங்கள் மேசனைக் கருதிவைத்திருக்கும் விதம் வேறானது.

எங்களுடைய மேசன்மார் படவரைஞராகவும் தொழில்நுட்பவியலாளராகவும் பொறியியலாளராகவும் மேசனாகவும் சிலவேளைகளில் கூலியாளாகவும் ஒரு வீட்டு நிர்மாணத்தில் இயங்குகிறார். இதுதான் பொதுவாக எங்கு

# ஏன்? சிந்திக்க மறுக்கிறோம்



முள்ள யதார்த்தநிலை.

அனுபவ அறிவினூடாகவே அதிகமான மேசன்மார் தொழிற்படுகிறார்கள். படிப்புக்கும் தொழிலுக்கும் சம்பந்தமில்லாத வாழ்க்கைமுறைதான் எங்களில் இன்னும் கூடுதலாக இருப்பதால் இதிலும் அதுதான் நிலைமையாகவுள்ளது.

மேசனே வீட்டினுடைய மாதிரிப்படத்தை வரையவேண்டியிருப்பதால் அவர் தன்னுடைய அனுபவத்தின் அடிப்படையில்தான் ஒரு வீட்டைக்கட்டத் திட்டமிடுகிறார். இது ஒரு சீசனில் அல்லது ஒரு காலகட்டத்தில் ஒரேமாதிரியான வீடுகள் கட்டப்படுவதற்கான பிரதானமான காரணமாகிவிடுகிறது. தன்னுடைய அனுபவ எல்லைக்குள் மட்டுமே இயங்கவேண்டிய நிர்ப்பந்தம் மேசனுக்கு இருப்பதால் அவர் தான் கட்டும் வீட்டையும் அந்த எல்லைக்குள்ளேயே நிர்ணயிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இதில் உருவாகிவிடுகிறது.

நவீனமாகவும் புதுமைப்பாட்டோடும் வசதிகளுடையதாயும் கட்டப்படவேண்டிய வீடுகள் அதிலிருந்து விலகி ஒரே சூத்திரத்தன்மையிலேயே மாதிரிக்கிராமங்களைப் போல கட்டி முடிக்கப்படுகின்றன.

தொழில்நுட்ப உத்தியோகத்தருக்குரிய பாத்திரத்தையோ பொறியியலாளருக்குரிய பங்கையோ கொடுக்காமல் மேசனே அதனையும் செய்யவரும்போது தேவைக்கு அதிகமான பொருட்செலவு, நேரச்செலவு உழைப்புச் செலவு, ஆகியவற்றையும் செலுத்தவேண்டியிருக்கிறது; வீண் விரையமாக்கவேண்டியுமுள்ளது.

கட்டடமொன்றினை நிர்மாணிக்கும் மண்ணின் தன்மையில் இருந்து அச்சூழலின் பௌதீக அமைப்புக்கள் எதனையும் அறிவுபூர்வ

**வெளிவாசல் பாலன்**

மாக ஆய்வுக்குட்படுத்தி தீர்மானமெடுக்கும் வழக்கத்தை மேசன்மார் தெரிந்திருப்பது குறைவு. பதிலாக அவர்கள் சராசரியான ஒரு பொது வாய்ப்பாட்டுத்தனத்துடன் எல்லாக் கட்டடங்களையும் நிர்மாணிக்கமுயலும்போது அந்தக் கட்டடங்களில் (வீடுகளில்) காலப்போக்கில் வெடிப்புகள் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. அல்லது சரிவுகள் நிகழ்கின்றன. இதனைத் தடுப்பதற்காக அவர்கள் கூடுதலான மூலப்பொருட்களை (கம்பி, சிமெந்து, கல்) கட்டடத்தினுள் செலுத்தி அதற்கு வைரம்பாய்ச்சப் பார்க்கிறார்கள்.

‘கொங்கிறீற்றை அப்படிப்போட்டால் பயமில்லை. இவ்வாறு செய்தால் வெடிக்காது, அப்படிச்செய்தால் பயப்படத்தேவையில்லை, இப்படி அமைத்தால் அசையாது’ என்று வீட்டு உரிமையாளருக்கு உறுதிமொழிகளை அள்ளிக் கொடுத்துவிட்டு தமது அனுபவத்துக்கு ஏற்ற மாதிரி எப்படியெல்லாமோ கட்டிமுடித்துவிடுகிறார்கள்.


இப்படியெல்லாம் செய்து கட்டப்பட்ட வீடுகளில் பாதிக்குமேல் எப்படியோ அவர்களுடைய உறுதிமொழிகளையும் சத்திய வசனங்களையும் மீறி உடைந்துவிடுகின்றன. ஆகக்குறைந்தபட்சம் வெடித்தேனும்விடுகின்றன. பல வீடுகள் மழைகாலத்தில் ஒழுகும் அல்லது கசியும்.

அப்போது யாரைக்குறை சொல்ல முடியும்? சொல்லித்தான் என்ன பயன்?

பல படித்தவர்கள் கூட தங்களுடைய வீட்டைக்கட்டும்போது மேசனிடமே முழுப் பொறுப்பையும் கொடுத்துவிடுகிறார்கள். கட்டடப் பொறியியலாளரின் அறிவையோ கட்டடத்துக்கான படவரைஞரின் பங்களிப்பையோ தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தொடர்ந்த அவதானிப்பையோ வீடு கட்டுவோர் நாடுவதில்லை. இவ்வாறு துறைதேர்ந்தவர்களிடம் நாடுவதை அவசியமற்றதாகக் கருதி மேசனையே முழுதாக நம்பிவிடுகிறார்கள்.

இதில் ஆகக்கூடிய விசித்திரம் என்னவென்றால் போனகிழமை மேசனுடன் உதவியாளாக நின்றவர் இந்தக்கிழமை ஒரு முதன்மை மேசனாக புதிய வேலைகளைப் பொறுப்பெடுக்க வருகிறார் என்பதுதான். அப்படி வரக்கூடாது என்பதல்ல இதன் பொருள்.

இப்பொழுது தமிழர் பிரதேசங்களில் உருவாகியிருக்கிற அமைதிச்சூழலில் சில புதிய நிர்மாணவேலைகள் நடக்கின்றன. யுத்தத்தின்போது வீடுகளை இழந்த மக்களும் தமக்கான வீடுகளைக் கட்டுகிறார்கள். இதனால் திடீரென மேசன்மாருக்கான கேள்வியும் அதிகரித்திருக்கிறது. வெளியூர்களிலிருந்துகூட பலமேசன்கள் வேலை செய்வதற்காக தமிழ்ப் பகுதிகளுக்கு வருகிறார்கள்.



ஒரு மேசன் நாளொன்றுக்கான சம்பளம் ரூபா ஐநூறு. ஒரு மேசனின் மாதச்சம்பளம் சராசரியாக பன்னிரண்டு பதின்மூன்று ஆயிரமாகும். பொறுப்பான தொழிலோடு இவ்வாறு வருமானம் பெறுவோர் தொழிற்திறனை அதற்குரிய அறிவியற்தளத்திலும் வளர்த்துக்கொள்வது அவசியமாகிறது. இதற்குத் தனியே மேசன்மாரைமட்டும் பொறுப்புச் சொல்லமுடியாதுதான். இவ்வாறான தொழிலாளர்களுக்குரிய கல்வியையும் புதிய வளர்ச்சிநிலைகளையும் அவர்கள் அறிவதற்கான வழிமுறைகளைச் செய்யும் அமைப்புகள் எமது சூழலில் உருவாக்கப்படவேண்டும். இதற்குப் பொறுப்புள்ள தரப்புகள் சிந்திக்கவேணும்.

ஆகக்குறைந்தது கட்டடக்கலைகள் பற்றிய கருத்தமர்வுகள் விளக்கங்களையேனும் யாரும் இவர்களுக்குச் செய்யலாம் அல்லவா. கட்டடத்தின் நுணுக்கங்கள், அவற்றின் அடிப்படைகளைப்பற்றி விளக்கலாமல்லவா. கட்டடத்திணைக் களத்தினரேனும் இதுபற்றி சிந்திக்கலாம்.

தொழிற்தகைமை ஒன்று அத்தொழில் சார்ந்த துறைதேர்ந்த அறிவோ அனுபவத்தினூடாகவேதான் வரவேண்டும். அதுவும் நிலையான அடிப்படையைக்கொண்ட வீடொன்றை - கட்டடத்தைக் கட்டுவதற்குரிய அறிவு மிகவும் தேர்ந்ததாக இருக்கவேவேணும்.

நண்பரைத்தேடி அவர் புதிதாகக்கட்டிக் கொண்டிருக்கும் புதிய வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே சுவர் நெளிந்து நெளிந்து மேலெழுந்து கொண்டிருந்தது. 'ஏனிப்படி நெளிகிறது' என்று அங்கே வேலை செய்துகொண்டிருந்த மேசன்களில் ஒருவரைக்கேட்டேன்.

‘அது முதலில் வேலை செய்தவர் விட்டபிழை, என்று சாட்டினார் சட்டென.

இதுதான் இப்போது பரவலாக நடக்கிறது. ஒருவர் ஒரேகாலத்தில் பலவேலைகளைப் பொறுப்பெடுத்துவிட்டு பின்பு ஒன்றையும் நேர்த்தியாக முடிக்காமல் இழுபடவிடுகிறார். எல்லாவற்றிலும் கைவைப்பதனூடாக தங்களுக்காக காக்கவைக்கும் ஒரு உத்தியையும் அதே வேளையில் அந்த வேலை தங்களை 'விட்டு வேறொருகைக்குப் போய்விடக்கூடாது என்ற நோக்கமும் மேசன்மாரிடம் பொதுவழக்கமாயிருக்கிறது. இதிலிருந்து சிலர் விதிவிலக்காக இருக்கலாம்.

இப்படியான ஒரு நிலைமையில்தான் நண்பர் முதலில் வேலைசெய்த மேசனை நீக்கிவிட்டு பின்பு இன்னொருவரை அழைத்து வந்து பொறுப்புக்கொடுத்திருக்கிறார்.

“அப்படியென்றால் இதை எப்படிச் சரிக்கட்டப்போகிறீகள்” என்று திரும்பவும் அந்த மேசனிடமே கேட்டேன்.

“அதைப்பூசும்போது எடுக்கலாம்” என்றார் அவர். இப்படி ஒருவரில் ஒருவர் பந்தை எறிவதும் பிழையைத் திருத்த முயலும்போது ஏற்படுகின்ற எல்லாவிதமான செலவுகளும் சிரமங்களும் கொஞ்சமல்ல என்பதை வீடுகட்டும் ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும்.

சில இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு தலைமை மேசன் ஒரு வேலையைப் பொறுப்பெடுத்துவிட்டு அந்த வேலைக்கு வெவ்வேறு ஆட்களை மாற்றி மாற்றி வசதிக்கு ஏற்றமாதிரி விட்டுக்கொண்டிருப்பார். வேலையோ கோணல்மாணலாக நடந்துகொண்டிருக்கும். காரணம் கேட்டாலோ சுட்டிக்காட்டினாலோ ஒருவரை ஒருவர் சாட்டி தாங்கள் பிழையைப் பொறுப்பெடுக்காமல் தட்டிக்கழிப்பதையும் பலர் பார்த்திருப்பீர்கள்.

பொதுவாக எங்களிடம் தொழில் தகைமையின் அடிப்படையில் ஒருவரைத் தேர்வுசெய்யும் வழக்கம் இன்னும் இல்லை. எல்லாத்தொழிலாளர்களையும் நாங்கள் அவர்களின் அனுபவப் பரப்பிலுள்ள நம்பிக்கையின் அடிப்படையில்தான் தேர்வு செய்கிறோம்.

துறைசார்ந்த தொழிற்தகைமை ஒரு தொழிலின் உச்ச மேம்பாட்டை அடையவும் செலவைக் குறைக்கவும் சிரமத்தை இல்லாமற்செய்யவும் உதவும்.

வெளிநாடுகளில் - வளர்ச்சிபெற்ற நாடுகளில் எந்தத் தொழிலைச் செய்வதற்கும் பதிவுசெய்யப்பட்ட தகைமையுள்ள ஒரு நிறுவனத்தின் தொழிற்தகைமைச் சான்றிதழ் ஒருவருக்கு இருந்தால்தான் அவர் அந்த வேலையைச் செய்யலாம். அது எந்த வேலையாக இருந்தாலும் சரி இப்படியான ஒரு நிலைப்பாட்டுக்கு அவர்கள் வந்தபடியால்தான் அவர்கள் மேலும் மேலும் வளர்ச்சியை நோக்கிப் போகிறார்கள்.

நாங்களோ நம்பிக்கையின் அடிப்படையிலும் பாரம்பரிய முறைகளின் சேற்றுப் பரப்பினுள்ளும் தான் இன்றும் நடந்துகொண்டிருக்கின்றோம். அறிவை அணுகுவதற்கு அவ்வளவு கூச்சம் நமக்குண்டு. கொஞ்சமேனும் அறிவுபூர்வமாக ஒன்றைப் பார்ப்பதற்கு முடியாத கடுந்தயக்கம் பெருஞ்சுவராக எங்களிடம் வளர்ந்திருக்கிறது.

அறிவு பூர்வமாகச் சிந்திப்பதற்கும் எதையும் அறிவு பூர்வமாகச் செய்வதற்கும் தொடர்ந்தும் தயங்குவோமாக இருந்தால் என்றைக்கும் வளர்சிநோக்கி நாங்கள் பயணிக்க முடியாது. பதிலாக எல்லோரும் முன்னே சென்றுவிட அவர்களுக்குப்பின்னே அடிதொடருவோராகத்தான் நாங்களிருக்கமுடியும்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

*நெல்லும்,* கோதுமையும் உலகத்து மக்களின் பிரதான உணவாக உள்ளது. காரணம் உடலுக்குத் தேவையான 80% சக்தியை நெல், கோதுமை போன்றவற்றில் அடிப்படைப்பொருளான மாப்பொருள் வழங்குகிறது.

நாளாந்தம் 570 கிராம் மாப்பொருளை பிரதான சக்திதரும் உணவாக நாம் உட்கொள்கிறோம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கோதுமைப் பயிரானது எங்கள் பாரம்பரிய உணவு அல்ல அது இடையில் ஏற்பட்ட பழக்கமாகும்.

எமது தேவைகளை நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களே பூர்த்தி செய்து வந்தன. ஆனால் கோதுமையின் வரவினால் சிறுதானியப் பாவனை அருகி அழிவு நிலைக்கு வந்து விட்டது



பாரம்பரியமாக நாம் பாவித்து வந்த குரக்கன், தினை, சாமை, வரகு. கௌபி, பயறு போன்றன அருந்தலான பண்டங்களாக மாறிவிட்டன.

போசனைப் பெறுமானத்தைப் பொறுத்தவரையில் எல்லா சிறு தானியங்களும் ஏறத்தாழ ஒரே பொதுப் பெறுமானத்தைக் கொண்டதாகச் சொல்லப்படுகின்றது.

100 கிராம் சிறுதானியம் 300 தொடக்கம் 500 கலோரி சக்தியை வழங்கக்கூடியது. அத்துடன் ஒப்பீட்டு ரீதியில் அரிசி கோதுமையை விட உயர்வு போசனைப் பெறுமானம் உடையது.

"பற்றிக்கமிலம்" எனும் அமிலம் சிறிய அளவில் சிறுதானியங்களில் உள்ளது இதனால் இரும்பு, சுண்ணாம்புக் கனிப்பொருட்கள் மனித உடலில் விரைவாகச் சேரும் தன்மை கொண்டதாக அமைந்து விடுகின்றது.

இரத்தச் சோகை உள்ளவர்களுக்கும், நீரிழிவு நோயாளர்களுக்கும் உண்மையில் இவை ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இவை ஒரு சில தகவல்களே. மேலும் பல நன்மைகள் சிறுதானியத்தால் உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## அளவுக்கு அதிகமான இரசாயனப்பசளைகளின் பாவனையால் மண் மாற்றமடைந்து வருகின்றது

**யாழ்** குடாநாட்டில் அளவுக்கு அதிகமான இரசாயனப் பசளைகளையும், கிருமி நாசினிகளையும் பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மாற்றம் அடைந்து வருவதுடன் கிணற்று நீரும் மாசடைந்து வருகின்றது. இதனால் மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இந்த ஆபத்தை உணர்ந்து பாவனையாளர்களின் நன்மை கருதி இயற்கைக்கு மாறான இரசாயனப் பொருட்களைப் பாவிப்பதில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க விவசாயிகள் அனைவரும் முன்வர வேண்டும்.



தற்போது செயற்கைப் பசளைகளின் பாவனை குடாநாட்டில் அதிகரித்துள்ளது. இயற்கைப் பசளைக்கான மூலகங்கள் கைவசமிருந்தும் அவற்றைப் பயன்படுத்தி கூட்டெரு தாயாரிப்பதில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்துவதில்லை. சுலபமான முறையில் கூடிய வருமானத்தைப் பெறுவதே விவசாயிகளின் நோக்கமாக இருக்கிறது. இது மனித வளர்ச்சிக்கும், சக வாழ்விற்கும் அழிவையே ஏற்படுத்துகின்றது. இயற்கைப்பசளைகளைப் பாவிக்கும் உணவுப்பொருட்கள் அதிக நாட்களுக்கு இருப்பதில்லை. விரைவில் பழுதடைந்து விடுகின்றது. அத்தோடு அதன் தரமும் குறைவாகவே இருக்கும். எனவே வீடுகள் தோறும் வீட்டுத்தோட்டங்கள் உருவாக்க வேண்டும். கூட்டெருவை உற்பத்தி செய்து பயன்படுத்த வேண்டும். இதனால் மக்கள் நோய் நொடிகள் இன்றி வாழமுடியும். அரசாங்க மானிய விலையில் இரசாயன உர வகைகளை வழங்குவதினால் மக்கள் கட்டுப்பாடற்ற முறையில் அளவுக்கு அதிகமான இயற்கைப் பசளைகளைப் பாவிக்கின்றார்கள். இயற்கைப்பசளையில் பயிருக்குத் தேவையான 16 வகையான மூலகங்கள் இருக்கின்றன.

தற்போது இரசாயன மருந்து வகைகள் பாவித்த பழ வகைகள் யாழ்குடாநாட்டில் விற்பனையாகின்றன. இயற்கையான பழத்திற்கும் செயற்கையான பழத்திற்கும் இடையிலே நிறைய வித்தியாசம் காணப்படுகின்றது. இயற்கை முறையில் பழுக்கும் பழங்கள் அடிப்பாகத்தில் இருந்துதான் மஞ்சள் நிறமாக மாறிவரும். செயற்கை முறையில் பழுக்க வைக்கும் பழம் நுனிப்பக்கத்திலிருந்து பழுத்து விடும். அத்துடன் இடைக்கிடை பச்சை நிறமாகவும் தெரியும். வன்னிப் பகுதியில் தற்போது இரசாயனப் பசளைப் பாவனைக்கும், கிருமிநாசினிப் பாவனைக்கும், கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஏ9 தரைப் பாதையால் வருபவர்கள் மரக்கறி வகைகளை எடுத்து வருவதில் ஈடுபட்டுள்ளார்கள் குடாநாட்டில் கிணற்று நீரில் நைதரசன் அதிகம் கலந்து இருக்கின்றது. இயற்கைப்பசளை அளவிற்கு அதிகமாக பாவிப்பதால் பசளையில் உள்ள நச்சுத்தன்மை நிலத்திற்கு அடியில் சென்று நீருடன் கலக்கப்படுகிறது. அளவிற்கு அதிகமான நீரை பயிருக்கு விடுவதினாலும் நீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. நீரை அளவோடு பயன்படுத்தி நீரை சேமிக்க விவசாயிகள் முன்வர வேண்டும். யாழ் குடாநாட்டில் சுமார் 80 வீதமான விவசாயிகள் வாழ்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் ஒரே விதமாக பயிரைச் செய்வதால் கூடுதலான நன்மை பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது. கால நிலைக்கு, மண் தன்மைக்கு, தேவைக்கு ஏற்ற மாதிரி திட்டமிட்டு விவசாயத்தில் ஈடுபடவேண்டும்.

❖ ❖ ❖

## ஆழச் சுழியோடி.....

"உங்களை நீங்கள் காதலிக்கிறீர்களா?" என்று வினவியபோது இது என்ன கேள்வி? என்று பலர் கிண்டல் பண்ணுவது எனக்குக் கேட்கிறது. "தன்னைத் தான் காதலிக்காதவன் ஒருவன் உலகில் இருக்கிறானா? என்று நீங்கள் என்னைக் கேட்பதும் கேட்கிறது.

நான் உங்களுடன் சண்டைக்கு வரவில்லை. ஆனால், உண்மையொன்றைச் சொல்லவேண்டிய நிலை. இன்பத்தை நாடுவது உயிரியல்பு. துன்பத்தை நீக்கி இன்பமாக வாழ்வதற்கு முயலும் எம்மக்கள் பலர் துன்பத்திலேயே அழுந்திவருந்துகின்றார்கள். தமக்காகத் தம் நல்வாழ்வுக்காகப் பின்விளைவு நோக்காது எதையும் செய்யமுயல்வார்கள். தாம் இன்பமடைந்தாற்போதும் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கின்றது.

இவர்கள் தம்மைப்பற்றிக் கவலைதான் உடையவர்கள் பிறரைப்பற்றி சிறிதும் கருதாதவர்கள். இவர்களிடம் "பிறருக்கு தீங்கு செய்யாதீர்கள்," "பிறரிடத்தில் அன்பு காட்டுங்கள்', "பிறருக்கு உதவி செய்யுங்கள்" என்று எடுத்த எடுப்பில் கூறிவிட்டால் இதற்கு சற்றும் செவிசாய்க்கமாட்டார்கள். இவர்கள் தான் தம்மைத் தாமே காதலிப்பதாக எண்ணிக்கொண்டு செயற்படுபவர்கள்.

அண்மையில் TAG (Theatre attack Group) இன் வழிகாட்டலின் படி நாம் எமது கிராமத்து ஊர்களுக்குள் இறங்கி இப்படியானவர்களைச் சந்தித்தோம். அங்கு நடந்த ஒரு சம்பவம்.

வசதிபடைத்த குடும்பம், மூன்று பிள்ளைகள் கடைசிப்பிள்ளைக்கு வயது-02 அவர்களின் உரையாடல் இதுதான் "தம்பி 4 மணியாச்சு T.Vயைப் போடுங்கோ, சுதாக்குட்டி இஞ்சவாங்கோ மம்மியமறைக்காமல் இதில இருந்து பாருங்கோ. வனிதா இஞ்சவாடி தம்பி கக்காக்கு இருந்திட்டார். தூக்கிக்கொண்டுபோய் கழுவிப்போட்டு பவுடர் போட்டு தம்பியத்தந்திட்டு கக்காவை அள்ளிப்போட்டு உடுப்புக்களைத் தோய்" அம்மாவின் தொடர்கட்டளை சிறிது நேரம் அவர்களுடன் படம் பார்த்த நாங்கள் அவர்களின் ஒவ்வொரு நகர்வுகளினூடும் வனிதா வேலைக்காறப்பெண் என்பதை உணர்ந்து கொண்டோம். இங்கிருந்த ஒவ்வொருவருடனும் உரையாடினோம். பின்னர் எல்லோரும் வெளியிலே வந்தோம். வனிதாவுடன் உரையாடிய உறவு கூறியது இதுதான். வனிதாவுக்கு அப்பா அம்மாவைத் தெரியாதாம். எந்த ஊர் என்பது கூடத் தெரியாத 12 வயதுச் சிறுமி அவள். படிக்க விருப்பமாம். படிக்கவிடாமல் அந்த கலாச்சார வர்ணம் பூசப்பட்டவர்கள் வேலைககாக வைத்திருக்கிறார்கள். வனிதா கதைக்கும் போது கண்ணீர்மல்கத் தன் சொந்த அபிலாசைகள் அழிந்துபோன கதையைக் கூறினாள் என்றார்.



என்ன இதற்குப் பிறகும் எங்களை நாங்கள் காதலிக்கின்றோம் என்று சொல்கிறீர்களே. எங்களை நாங்கள் காதலிக்காமலா இந்த நாய்படாப் பாடுபடுகின்றோம் என்கிறீர்களே, ஏன் எங்களை இப்படி மடக்குகிறீர்கள், இப்படிச் சொல்ல உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் என்று கேட்கிறீர்கள்.

நெருப்பைத்தொட்டால் சுடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவன் உங்களைப் பழித்தால் நீங்கள் துன்பமடைகிறீர்கள். எனவே நீங்கள் பிறரை நெருப்பாலே சுட்டால் அது அவர்களைச் சுட்டெரிக்கும் என்பதையும், நீங்கள் பிறரைப் பழித்தால் அது அவர்களைத் துன்புறுத்தும் என்பதையும் ஏன் உணர மறுக்கிறீர்கள். உங்களுக்குத் துன்பம் தருபவற்றை நீங்கள் பிறருக்குச் செய்யாதுவிட்டாலே எமது சமூகத்தில் பல பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பது உண்மையல்லவா?

இந்த நாட்டில் நடக்கின்ற பூசல்கள், போட்டிகள், முட்டல்கள், மோதல்கள், கொலைகள், கொடுமைகள் எல்லாம் தன்னைத் தான் காதலிப்பதன் மூலம் விரட்டியடிக்க முடியுமல்லவா? நோயில்லாமல் துன்பமில்லாமல் கேடில்லாமல் வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால் பிறருக்கு தீமைகளை, கொடுமைகளை, துன்பங்களைச் செய்யாது மற்றவர்களுக்கும் இடம்கொடுத்து வாழ்ந்தால் உச்ச வாழ்வை அடையலாம் என்பது TAG இனால் ஆழச்சுழியோடி எடுக்கப்பட்ட உண்மைகளாகும். இவ்வுண்மையை நீங்கள் ஏற்று நடப்பீர்களா...?

**பா.றுஜினா**

## எங்கள் வசந்தம் தொலைந்து வருடம் ஆறானதா?

பிறப்பு 29 - 09 - 1971



வீரச்சாவு 02 - 04 - 1998

### மேஜர் எழிலரசன்/வசந்தன்

(நவரெத்தினம் வசந்தன்)

வேலணை.

மகனே! நீ.....
மழலையாய்.. விடலையாய்...வீரனாய்...
ஆடிய மணற்பரப்பில், நனைந்த விழிகளோடு நாம்...
உன் பாதச்சுவடுகள் பார்த்தபடி....
அகல்வதாய் உள்ள அலைகள்... திரும்பி
எங்கள் திசை வருவதாய் இல்லையே
ஏன்...?

இவருடன் கடலிலே கரைந்த கப்டன் ஒப்பிலாமணிக்கும் கண்ணீர் மலர்களை அர்ச்சித்தபடி...

*'கலையகம்'*
*வேலணை-01*

(சி-9281)

*பெற்றோர், சகோதரர்கள்*
*உறவினர், நண்பர்கள்.*

## விண்ணப்பம் கோரல்

ஈழநாதம் நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01.உதவி ஆசிரியர்கள்

கல்வித்தகமை:

I. பல்கலைக்கழகப்பட்டதாரி

அல்லது

II. க.பொ.த.(உயர்தர)த்தில் சித்தியுடன் ஊடகத்துறையில் அனுபவம்

### 02.அலுவலக செய்தியாளர்கள்

கல்வித்தகமை:

I. க.பொ.த (உயர்தர)த்தில் சித்தி

### 03.ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஒலிப்பதிவு நாடாவில் இருந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் மொழிபெயர்க்கும் ஆற்றல்.

குறிப்பு: சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் 10-04-2004 சனிக்கிழமை காலை பத்துமணிக்கு முதன்மைச்சாலை கிளிநொச்சியில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு சமுகம் தரவும்.

**நிர்வாகம்**
**ஈழநாதம்**

## நொர்தேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்ட்

## NORTHERN TECHNOLOGY(PVT)LTD.

*Special Offer*
*April 02 to April 22*
*(tamil new year)*

### INTEL CELERON FULL SYSTEM

Intel Celeron 1.7Ghz Processr
MSI Mother Board
128 MB DDR Ram
32 MB VGA Gard
40GB Hard Disk
1.44 MB Floppy Drive
15'' Digital Color Monitor
Multimedia Speaker
52X CD Rom Drive
Keyboard
Mouse & Pad

37900/= Without Free

Discount Special

41200/= With Free

Free! Free!! Free!!!

UPS OR
Computer Table OR
Computer Chair OR
Change "17" Monitor OR
2.1 Creative Woofer

### P4 FULL SYSTEM

Intel pentium 4 1.8 OR 2.0 Ghz Processr
MSI Mother Board
128 MB DDR Ram
32 MB VGA Gard
40GB Hard Disk
1.44 MB Floppy Drive
15'' Digital Color Monitor
Multimedia Speaker
52X CD Rom Drive
Keyboard

44250/= Without Free

Free! Free!! Free!!!

UPS OR
Computer Table OR
Computer Chair OR
Change "17" Monitor OR
2.1 Creative Woofer

47900/= With Free



(சி-9282)

*JAFFNA*
**Branch Office:**
**#20.Kannathiddy Road,**
**Jaffna, Srilanka.**
**Tel: (0094) 21-2225653**

*VAVUNIYA*
**Head Office:**
**#52. 2nd Cross Street,**
**Vavuniya, Srilanka.**
**Tel: (0094) 24-2221649**

*MANNAR*
**Branch Office:**
**Hospital Road,**
**mannar, Srilanka.**
**Tel: (0094) 23-2232125**

# "அந்நியமாதல்"

# தமிழர் வாழ்வில் தொடர் கதையா?

நாம் சமூக வாழ்வில் அறிந்தோ அறியாமலோ பல சந்தர்ப்பங்களில் "அந்நியமாதல்" (Alianation) என்ற எண்ணக்கருவோடு தொடர்பு படுகின்றோம். மனித வாழ்வு முறையில் எமது செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கை வலையமைப்பினை அவதானிப்பதனூடாக இவ் எண்ணக்கருவோடு நாம் பின்னிப்பிணைந்திருப்பதைக் காணலாம்.

அந்நியமாதல் என்பது ஓடும் புளியம்பழமும் போன்று அகலாது, அணுகாது (ஒட்டியும் ஒட்டாமலும்) சமூகத்தில் வாழும் நிலையியல் எனக்கொள்ளலாம்.

வரலாற்றுக் காலங்களை எடுத்து நோக்கும் போது ஹெகல் (Hegal), மாக்ஸ்(Marx) போன்றவர்கள் தமது கோட்பாடுகளை விளக்குகின்ற போது அந்நியமாதல் (Alianation) என்ற எண்ணக் கருவிற்கு அதிக முக்கியப்பாட்டினைக் கொடுத்துள்ளனர். இதேபோன்று இருப்பு வாதிகளும் பல வேளைகளில் இவ் எண்ணக் கருவினைத் தொட்டுச் செல்வதைக் காணலாம்.

அந்நியமாதல் நிலையை மனித உறவுகளில் அவதானிக்கலாம். நண்பர்கட்கிடையில், கணவன் - மனைவிக்கிடையில், குழந்தை-பெற்றோருக்கிடையில் எனப் பல நிலைகளில் வெளிப்படுகின்றன. இதேபோன்றே புலம்பெயர் வாழ்வில் எமது தமிழ் வாழ்வுகளுக்கிடையில், போர் முறைக் கலாச்சார வாழ்க்கையில் தமது சொந்தங்களுக்கிடையில் மொழி, கலாச்சாரம், மதம், பண்பாடு, கல்வி என்பவற்றில் அந்நியமாதல் என்றநிலை அதிகளவில் காணப்படுவதனை நோக்க முடிகின்றது.

இதேபோல் சித்தாந்த வாதிகளை எடுத்துக்கொண்டால், இவர்கள் சில கருத்துக்களோடு கொள்ளும் தொடர்பும் இத் தன்மையினதாக அமைகின்றது. சில குறிப்பிட்ட அரசியற் கோட்பாடோடு உடன்படுபவர்களாகவும் அதற்காக அதற்குள் முற்றும் அமிழாதவர்களாகவும் தமது கருத்துக்களை முன்வைப்பார்கள். இதனையே அந்நியமாதல் என்ற இவ் எண்ணக்கரு விளக்குகின்றது.

விடுதலைப்புலிகளின் அடிப்படைக் கட்டமைப்பும் அவர்களின் அடிப்படைச் சித்தாந்தமும் உறுதியானதும் குறிப்பாக ஒரு இலட்சியப்பாதையை நோக்கி நகர்த்தப்படுவதாகும். ஆனால், ஏனைய தமிழ் கட்சிகள் அரசியல் சக்கரத்தில் சுழன்று சந்தர்ப்பப் பொறிக்குள் நுழைந்த உரிமைக் குரல்கள் ஆகும்.

ஹெகல் (Hegal) என்ற தத்துவஞானி "ஆன்மா" வின் இயல்புபற்றிக் கூறும்போது இவ் எண்ணக்கருவினைக் கையாள்வதைக் காணலாம். இவர், ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவிலும்" தூய எண்ணம்" ஒன்று உள்ளது. இது மற்றவர்களுக்காக வாழுதல், தன் சகோதரனுக்காக விட்டுக் கொடுத்தல், தனது உழைப்பு, உற்பத்தி என்பவற்றில் இயல்பாகவே அந்நியமாகின்ற நற்பண்பு ஒன்று உளது என்கின்றார்.

சாதாரண மக்கள் உழைப்பு உற்பத்தியில் ஈடுபடுவது நிபந்தனைப்படுத்தப்பட்ட செயலன்று. இயல்பாகவே மற்றவருக்கும் உதவுதல் என்ற நற்பண்பே காரணமாகும். அதனாலேயே அவன் அந்நியமாகிறான் என ஹெகல் குறிப்பிடுகின்றார்.

மார்க்ஸ் அந்நியமாதல் பற்றிக் குறிப்பிடும்போது அவ்வாறானதோர் நிலையிருப்பதை ஹெகல் இனம்கண்டு கொண்டமை வரவேற்கத்தக்கது. ஆனால், அவர் அதைத் தவறாக இனம்கண்டுவிட்டார்.

ஏனெனில் உழைப்பாளி, தொழிலாளர்கள் அவர்களது உழைப்பிலிருந்து, உற்பத்தியிலிருந்து அந்நியமாக்கப்படுகின்றார்கள் எனக் குறிப்பிட்டார். உடமைகளையும், உற்பத்தி சாதனங்களையும், மூலதனத்தையும் தனதாக்கி வைத்துக்கொண்டிருக்கின்ற முதலாளி வர்க்கம் தொழிலாளர்களையும் உற்பத்தியாளர் களையும் அவர்களது உற்பத்தியிலிருந்து உழைப்பிலிருந்தும் அந்நியமாக்கிவிடுகின்றார்கள் என்பதே உண்மையானது எனக் குறிப்பிடுகின்றார்.

இத்தகையதொரு நிலைப்பாடே இன்று ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழர்களுக்கிடையிலான அந்நியமாதலுமாகும். ஐரோப்பிய கம்பனிகளில் ஓயாத வேலைகளில் ஈடுபடும் இவர்களை அக்கம்பனிகள் உற்பத்தியிலிருந்தும், உழைப்பிலிருந்தும் இவர்களை அந்நியமாக்கிவிடுகின்றன. மேலும் இவர்களது தொடர் வேலைகள், குறைந்தளவு ஓய்வு நேரம் என்பன கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள் மற்றும் உறவுகளிடமிருந்து அந்நியமாக்கிவிடுகின்றது. இதன் பயனாக மன உழைச்சல், உள்ளககுடும்ப முரண்பாடு, மனமுறிவு என்பவற்றோடு அடிப்படை மதவாத சக்திகளின் கைகளில் அகப்பட்டுத் தமது வாழ்வினைத் தொலைத்துவிட்டு-தேடும் நிலையே இன்று காணப்படுகின்றது.

மேலும் வேற்றுமொழி, கலாச்சாரம் என்பனவும், ஒப்பந்த முறைத் திருமண வாழ்வும் (பிரசா உரிமைக்காகச் செய்யப்படும் திருமணங்கள்) தமிழர் தமது பண்பாடு-கலாச்சாரம் என்பவற்றிலிருந்து அந்நியமாதலையே தூண்டுகின்றது.


19ஆம் நூற்றாண்டின் பின்பு முன்வைக்கப்பட்ட கலை, அரசியல், மதம், அறிவியல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இருப்புவாதம் (பிரான்சு நாட்டைச் சேர்ந்த கலை, இலக்கியவாதிகளே இதனை முதலில் அறிமுகஞ்செய்தனர்.) அந்நியமாதல் என்பதனையும் ஆராய்ந்துள்ளது.

மரணம் நிட்சயம் என்பதால் மரண பயத்திலிருந்து அந்நியமாகி இவ்உலகில் தமது இருப்பை நிறுவ வேண்டும் என்பர். இவ் இருப்புவாதிகளில் இன்னொரு பிரிவினர் மரணபயம் நிட்சயம் என்பதால் இவ் உலக ஆசாபாசங்களிலிருந்து அந்நியமாகி மரணத்தின் பின் கிடைக்கப் போகின்ற வாழ்வுக்காகத் தமது இருப்பை நிட்சயப்படுத்திக் கொள்ள வேண்டும என்பர்.

இவ்வாறே தமிழ் போராட்ட வரலாறும் மரணத்துக்காக வாழ்க்கை என்ற நிலையிலிருந்து வாழ்க்கைக்கான மரணம் என்ற செயல் நிலைகலனை உருவாக்கியுள்ளது. எனவேதான் தமிழர்களாகிய நாம் எல்லோரும் எமது நாடு, கலாச்சாரம், மொழி ,பண்பாடு என்பவற்றிலிருந்து அந்நியமாத லைத் தவிர்த்து ஒன்றிணைவோம்.

இதற்காக நாம் எல் லோரும எமது தனிப்பட்ட பேதங்களிலிருந்து அந்நியமாதல் வேண்டும்.

**எஸ்.ஜெயா**



## படத்திற்கு மெருகூட்டுங்கள் –62



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –62

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –61



கி.கனிதா,
ஓட்டுநர் பயிற்சிக்கல்லூரி
விசுவமடு.

### பரிசுக்குரிய வரிகள்

*புத்தொளியை நெஞ்சிருத்தி மனமகிழும் வீரம்-எம்*
*தீர தலைவன் திட்டமதால் பூத்த திரு ஞாமம்-பிஞ்சு*
*மனம் கெஞ்சுதலில் விடுபட்ட கீதம்- துட்டர் நிலை கலங்க*
*உரிமையதைத் தாவென்று கேட்குமிந்த தளிர்களது நாட்டம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இன்று செஞ்சோலை குயில்களாக நாளை தமிழீழ முத்துகளாக*
*எம் தலைவர் வளர்த்தெடுப்பார் கலங்காதீர்கள்*
*அந்நியரால் உம் உறவுகள் மாண்டாலும் உங்கள்*
*புன்னகை மாறாவிடும் தலைவன் காலத்தில்.*

க.கலைமாறன்,
கணேசபுரம்.

**அழகான உம்சிரிப்பை அந்நியன் அழித்தபோதும்**
**அரவணைக்கும் உம் உறவை உமைவிட்டுப் பிரிந்தாலும்**
**அணைத்திற்கும் அன்னையாய் உமை ஏற்ற**
**தலைவன் மடி தவழ்வதனால் இச்சிரிப்பா**

த.அறிவொளி,
தர்மபுரம்.

*பிஞ்சு மழலைகளின் சந்தோசத்தை பாருங்களேன்*
*பிரிந்தவர்கள் கூடினால் சொல்லவும் வேண்டுமா?*
*மிகுதி உறவுகளும் ஒன்று சேர்ந்திட- தேசிய*
*தலைவரின் காலத்தில் வழி அமைத்திடுவோம் வாருங்கள்.*

ம.கறைநிலா,
புதுக்குடியிருப்பு.

*தமிழன்னை தத்தெடுத்த தவப்புதல்வன்*
*தமிழர்க்கு உயிர்கொடுத்த கரிகாலன்-காலமதில்*
*அன்னையாய் நின்று அரவணைக்கும் சோலையிலே*
*நாளைய ஈழத்தில் மலரத்துடிக்கும் மொட்டுக்கள்*

ம.மதுஷா,
02ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

*தேனான நாட்டில் தேர்தல் நடக்குதாம் தோழி*
*தேடுவார் அற்று நாம் இருந்த வேளைதனில்*
*'தலைவர் அண்ணா' தந்தாரடி வாழ்வு*
*வாக்காமடி வாக்கு'தமிழிற்கே' எமது வாக்கு.*

ந.சிவா,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.






2007 ம் ஆண்டில் ஈராக்கின் கல்வி புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் பாடசாலை விட்டுச்செல்லும் ஈராக்கிய சிறுமிகள்

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த யாழ் பல்கலைக்கழக வேந்தரையும் உபவேந்தரையும், ஏனைய கல்விமான்களையும் மேலே உள்ள படத்தில்...

கிளிநொச்சி உருத்திரபுரம் கரடிப்போக்கு வீதியில் வேகமாக வந்த உழவுயந்திரம் தனது கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகே உள்ள வாய்க்காலில் தடம்புரண்டுஇருப்பதை கீழே உள்ள படத்தில் காணலாம்.






அப்படா! இதுவல்லவா பாசம். இது இந்தோனேசியாவில் கிழக்கு யாவாவில் உள்ள பூங்கா ஒன்றில் தனது குழந்தையை முத்தமிடும் 8வயது ஒராங்குட்டான்.







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 02 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.